# ஞாயிறும் திங்களும்





கவிப்பெருங்கோ

முடியரசன்

# ஞாயிறும் திங்களும்

கவிப்பெருங்கோ

## முடியரசன்

கவியரசர் முடியரசன் அவைக்களம்
மனை எண். 569, சூடாமணி நகர்
காரைக்குடி - 630 003

கவியரசர் முடியரசன் அவைக்களம்
கவியரசர் முடியரசன் அவைக்களம்
19, மூன்றாம் வீதி, காந்திபுரம்,
காரைக்குடி - 630 003
காரைக்குடி - 630 001.

# நூல் குறிப்பு


| | | |
|---|---|---|
| நூலின் பெயர் | : | ஞாயிறும் திங்களும் |
| முதற்பதிப்பு | : | திருவள்ளுவர் ஆண்டு 2030, 1999 |
| நூலாசிரியர் | : | கவியரசர் முடியரசன் |
| வெளியீட்டு உரிமை | : | கலைச்செல்வி முடியரசன்<br>19, மூன்றாம் வீதி, காந்திபுரம்,<br>காரைக்குடி - 630 001. |
| பொருள் | : | கவிதைகள் |
| எழுத்து | : | 10 புள்ளிகள் |
| தாள் | : | 18 கி.கி. |
| அளவு | : | டெம்மி |
| பக்கம் | : | 96 |
| அச்சிட்டோர் | : | தி சௌத் இந்தியா பிரஸ்,<br>48, மெ.மெ. வீதி, காரைக்குடி - 630 001.<br>போன் : 22300 |
| விலை | : | உருபா 35/- |

**மு. கருணாநிதி**
*முதலமைச்சர்*

தலைமைச் செயலகம்
சென்னை - 600 009.

நாள் : 7-1-2000

# அணிந்துரை

பேரறிஞர் அண்ணா அவர்களால் **திராவிட நாட்டின் வானம்பாடி** எனப் பாராட்டப் பெற்றும், என்னால் **கவிப்பெருங்கோ** என அன்போடு அழைக்கப்பட்டும், எக்காலத்திலும் உறுதி குன்றாக் கொள்கைக் குன்றமெனத் திகழ்ந்தவர் **கவியரசர் முடியரசன்.** அவர் பல கவிதை நூல்களையும் படைத்துத் தமிழ்ச் சமுதாயத்திற்குத் தன்மான உணர்வூட்டியவர். அவரது கவிதைகளில் பல அவருக்குப் பாராட்டுகளையும் விருதுகளையும் தேடித் தந்த சிறப்புக்குரியவை. அவற்றுள் பெரும்பாலானவை நூல் தொகுதிகளாகவும் வெளிவந்துள்ளன.

வாழும் காலத்தில் பல கவியரங்குகளில் தலைமை ஏற்று அவர் பாடிய கவிதைகளும், சில தனிப்பாடல்களும் இதுவரை நூல்வடிவில் வெளிவரவில்லை. அவற்றைத் தொகுத்து, அவர்தம் மைந்தர் திரு. பாரி **"ஞாயிறும் திங்களும்"** எனும் பெயரில் நூலாக உருவாக்கியுள்ளார். இம்முயற்சி பெரிதும் பாராட்டுக்குரியது.

தமிழ்ச்சமுதாயம் மேன்மை எய்துவதற்குத் தேவையான கருத்துகளைத் தந்தை பெரியார் அவர்கள் வன்மையாகவும், பேரறிஞர் அண்ணா அவர்கள் மென்மையாகவும் கூறிய பாங்கினை எண்ணி, அப்பெருமக்களின் கோட்பாடுகளை வலியுறுத்திடும் கவிதைகளடங்கிய இந்நூலிற்கு **"ஞாயிறும் திங்களும்"** எனப் பெயர் சூட்டியிருப்பது மிகவும் பொருத்தமானதும், போற்றத்தக்கதும் ஆகும்.

இன்றைய இளைஞர் சமுதாயம் படித்துப் பயன் எய்துவதாகுக.

அன்புள்ள
மு. கருணாநிதி

**( மு. கருணாநிதி )**

பெறுநர்
**திரு. மு. பாரி,**
கவியரசர் முடியரசன் அவைக்களம்,
19, மூன்றாம் வீதி, காந்திபுரம்,
காரைக்குடி - 630 001.

**க. அன்பழகன்,** எம்.ஏ.,
*கல்வி அமைச்சர்*

தலைமைச் செயலகம்
சென்னை - 600 009.

நாள் : 27-12-99

# அணிந்துரை

ஞாயிறும் திங்களும் என்னும் இப்பைந்தமிழ்க் கவிதை நூல் எனது நீண்ட கால நண்பர் கவிப்பெருங்கோ முடியரசன் அவர்கள் பல காலகட்டத்தில் இயற்றிய கவிதைகளின் தொகுப்பு ஏடு ஆகும். கவிப்பெருங்கோ என்னும் சிறப்பு விருதுக்குரிய கவிஞர் முடியரசன் அவர்கள், புலவர், ஆசிரியர், கவிஞர் என்னும் தகுதிகளோடு தந்தை பெரியார் ஊட்டிய தன்மான உணர்வுமிக்கவராய்ப் பகுத்தறிவுக் கொள்கையில் தேர்ந்தவராய் வேற்றுமொழி ஆதிக்க எதிர்ப்பினில் முனைந்து நின்று பைந்தமிழ் காத்திடும் கடமையை இளைய தலைமுறையும் மாணவர் உலகும் தெளிந்து ஏற்றிடச் செய்யும் பணியில் அயராது ஈடுபட்டவர்.

தமிழ்நாட்டில் இந்த நூற்றாண்டின் தலைசிறந்த கவிஞராகத் திகழ்ந்த புரட்சிக் கவிஞர் பாவேந்தரின் பாரம்பரியம் என்னும் பெருமைக்குரிய கவிஞர்களுள் தலையான இடம்பெறும் மரபுக் கவிஞர் அவர்.

தமிழ் மக்கள் தன்மான உணர்வு கொண்டு, தலைநிமிர்ந்து, சாதி உயர்வு, தாழ்வு எண்ணத்தை அடியோடு ஒழித்து, மதவேறுபாடுகளை எல்லாம் புறந்தள்ளி நாம் எல்லோரும் ஓர் குலம் என்னும் அடிப்படையில் சமத்துவம் நாட்டி, உடன்பிறப்பு உணர்வு வளர்த்து, சுதந்திரமான சிந்தனை உடையவர்களாய் உயர வேண்டும் என்னும் ஆர்வம் மிக்கவர் கவிஞர்.

அந்தக் குறிக்கோளை நாளும் பரப்பிய தந்தை பெரியாரையும், பகுத்தறிவுச் சிந்தனையை மக்கள் ஏற்குமாறு இதமான வழியில் இயம்பியும் எழுதியும் மக்கள் ஆதரவைத் திரட்டிய ஆற்றல்மிக்க அறிஞர் அண்ணாவையும் எந்நாளும் போற்றிடும் உள்ளங் கொண்டவர் அவர்.

பெரியாரும் அண்ணாவும் வாய்த்திராவிடில் தமிழ்மக்கள் எப்படிப்பட்ட மூடத்தனத்தில் மூழ்கி, விழித்தெழாத நிலையில் தாழ்ந்து கிடப்பர் என்பதையும், ஆதிக்க சக்திகட்கு ஆட்பட்ட அடிமை மனப்பான்மை எப்படியெல்லாம் அவர்களை ஒடுக்கி இருக்கும் என்பதையும் தெளிந்தவர். ஆதலின் அவர்தம் கவிதைகள் பலவும் பெரியாரையும் அண்ணாவையும் போற்றியே வரையப்பட்டவை.

**"புத்துலகச் சிற்பி"** என்னும் தலைப்பில் -

நாதியற்றுக் கிடந்துழன்ற தமிழி னத்தை
நானிலத்தில் தலைநிமிரச் செய்த கோவே!
தீதகற்றும் சொன்மலர்கள் தேர்ந்தெ டுத்துச்
செந்தமிழிற் பாமாலை தொடுத்து வந்து

காதலுற்று நின்னடிக்குச் சூட்டு கின்றோம்
கைதொழுது வாழ்த்துகின்றோம் எமது நெஞ்சில்
கோதகற்றும் பகுத்தறிவை இன்னும் ஏற்று!
கொடுமைகளை எதிர்க்கின்ற துணிவும் ஊட்டு!

என்று பாடியுள்ள வரிகள் கவிஞரின் ஆர்வத்தைக் காட்டும்.

**"காஞ்சிக் கதிரவன்"** என்னும் தலைப்பில் -

பகுத்தறிவுப் பெருங்கடலுள் முளைத்து வந்த
பகலவனை, அறியாமை இருட்க ணத்தைச்
செகுத்தொழிக்கும் பரிதிதனை, துயிலை நீக்கச்
சிவந்தெழுந்த சூரியனை, அரசி யல்வான்
தகதகக்கப் பண்பொளியைப் பாய்ச்சி எங்கள்
தமிழ்செழிக்கக் கிளர்ந்தெழுந்த செஞ்ஞா யிற்றை
உகப்புடனே தமிழரினம் மலர்ந்து தோன்ற
உதித்தெழுந்த கதிரவனை வாழ்த்து கின்றேன்

அண்ணாவின் வரவு செங்கதிர் வரவெனத் தமிழின விழிப்புக்கும் வாழ்வுக்கும் வழியானதைப் பாடியுள்ளார் கவிஞர். நம்மை அரவணைத்து வழிநடத்திக் கழகம் காத்துக் களம் பல கண்டு வாகையும் சூடிய அறிஞர் அண்ணா இல்லாத நிலையில் கழகத்தைக் காத்திடவும் ஒல்லுமோ எனக் கலங்குவார்க்கு, அண்ணன் கூறுவதாகக் கவிஞர் வரைகிறார். இப்படி -

அந்தக் கழகத்தை ஆரழிக்க வல்லார்கள்?
சிந்தைத் துயர்நீங்கிச் செம்மாந்து நிற்பாய்!
இரங்கும் இயல்புடைய என்றன் மனத்தை
இரவல் எனப்பெற்றான் என்தம்பி ஆரூரன்;
நம்மை உருவாக்க நாளெல்லாம் பாடுபட்ட
செம்மை திறம்பாத ஈரோட்டுச் சிங்கத்தின்
நெஞ்சத் துணிவும் நிரம்ப அவன் பெற்றுள்ளான்
அஞ்சற் கிடமில்லை அன்னான் துணையாய்நில்!

இப்படிப்பட்ட உணர்வுடன் வாழ்ந்து,, வளர்ந்து,, பிறரையும் வளர்த்து புகழினால் ஒளிரும் கவிஞர் - திராவிட முன்னேற்றக்கழகம் ஒன்றே அண்ணா வழியில் அயராது நடைபோடும் ஆற்றலுடையதாவதைப் பலகாலும் பாடியுள்ளர். அவரது கவிதை எந்நாளும் முழங்குவதாகட்டும் வாழ்க முடியரசன் புகழ்!

அன்பன்,

(க.அன்பழகன்)

# நன்றியுரை

என் தந்தையார் கவியரசர் முடியரசனார் அவர்கள் தந்தை பெரியாரின் தன்மானக் கொள்கைகளை ஏற்றுக்கொண்ட நாள் முதலாய் இறுதிவரை பிறழாது வாழ்ந்தவர் என்பதும் அதுபோலவே அறிஞர் அண்ணாவையும், தலைவர் கலைஞரையும் ஏற்று இறுதிவரை அவர்களின் பேரன்பைப் பெற்றவர் என்பதும் நாடறிந்ததே. பேரறிஞர் அண்ணாவால், திராவிட நாட்டின் வானம்பாடி என்றும் தலைவர் கலைஞரால் கவிப்பெருங்கோ என்றும் போற்றிப் புகழப்பட்டவர். முதலில் அவர்களை வானளாவப் புகழ்ந்தும் பின்னர் வாய்க்கு வந்தபடி ஏசியும் வயிறு வளர்க்கும் இரட்டை நாக்குப் படைத்தவரல்லர் நம் கவிஞர். இறுதிவரை உறுதிப்பாட்டில் நழுவாமலும் கொள்கையில் வழுவாமலும் இடர்பல ஏற்பினும் கலங்காமல் வாழ்ந்து வந்த இயல்பினர். பாடல்களைப் படைக்கலனாகக் கொண்டு போராடி வந்த போர் மறவர். பண்பாடு குன்றாது தமிழக வானில் பறந்து திரிந்த வானம்பாடி தமிழை வணங்கிய தன்மானத் தொண்டர்.

தந்தை பெரியாரைப் பற்றியும் அறிஞர் அண்ணாவைப் பற்றியும் கவிஞர் பாடிய பாடல்கள் அளவு கடந்தன. அவற்றுள் கிடைத்தவற்றைத் தொகுத்து **"ஞாயிறும் திங்களும்"** என்ற தலைப்பில் இந்நூலில் தரப்பட்டுள்ளன. இக்கவிதைகள் கவிஞர் அவர்கள் பல கவியரங்குகளில் தலைமையேற்றுப் பாடியவை. மற்றும் தனிப்பாடல்கள் சில. அப்பாடல்களை நுகருங்கள், அவர் எண்ணங்களை அறிந்து சரியென்று உணர்ந்தால் நிறைவேற உதவுங்கள் என வேண்டுகிறேன். இந்நூலைப் பதிப்பிக்க 1990 ஆம் ஆண்டே கவிஞரிடம் முன்னுரை பெற்றும் பல சூழல்களால் என் தந்தையின் வாழ் நாளிலேயே என்னால் பதிப்பிக்க இயலவில்லை. எந்தை இயற்கையடைவிற்குப் பிறகு வெளிவருகிறது இந்நூல்.

இந்நூலுக்கு அணிந்துரை வழங்கி, ஞாயிறுக்கும் திங்களுக்கும் ஒளியேற்றிய என் தந்தை நெஞ்சில் நீங்கா இடம் பெற்ற கழகக் குடும்பத் தலைவரும், தமிழக முதல்வருமாகிய **மாண்புமிகு டாக்டர் கலைஞர்** அவர்கட்கும், இனமானப் பேராசிரியரும், கல்வி அமைச்சருமாகிய **மாண்புமிகு அன்பழகனார்** அவர்கட்கும் என் இதயம் நிறைந்த நன்றியைக் காணிக்கையாக்குகிறேன்.

இந்நூல் வெளிவர உதவிய கலைஞர் தமிழ்ச்சங்கச் செயலாளரும் கவியரசர் முடியரசன் அவைக்களத் தலைவரும், முன்னாள் அமைச்சருமான **மு.தென்னவன்** அவர்களுக்கு நன்றி செலுத்தக் கடமைப்பட்டுள்ளேன்.

19, 3ஆம் வீதி,<br>காந்திபுரம்,<br>காரைக்குடி - 630 001.

அன்பன்

**மு. பாரி**

## முன்னுரை

ஞாயிறு வெம்மை தருவது, திங்கள் தண்மை தருவது. இரண்டும் பொருளை விளக்கிக் காட்டுவன. அவ்விரண்டும் ஒளி தருவன. உலகிற்கு இரண்டுமே இன்றியமையாதன.

தந்தை பெரியார் பேச்சு, சூடானது. அவரே தம்மைப் பற்றி நான் அறுவை மருத்துவன். எப்படியும் நோயாளி உயிர் பிழைக்க வேண்டும் என்பது தான் என் நோக்கமே தவிர, நோயாளிக்கு வலிக்குமே என்று கவலைப்படமாட்டேன் என்று கூறியிருக்கிறார்.

பேரறிஞர் அண்ணா பேச்சு, குளிர்ச்சியானது. நோயாளி நலம் பெற வேண்டும். நோயாளி முகஞ்சுழிக்காமலும் ஏற்றுக்கொள்ள வேண்டும். அதனால் அவர் கூட்டு மாத்திரை தரும் இயல்பினர். இவ்விரு பேச்சும் பிணி வாய்ப்பட்ட தமிழினத்திற்கு எக்காலத்தும் வேண்டப்படுவனவே.

ஆதலின் பெரியாரை ஞாயிறாகவும், அண்ணாவைத் திங்களாகவும் குறிப்பிட்டு, அவ்விருவரையும் பற்றிப் பாடிய பாடல்களைச் சேர்த்து ஞாயிறும் திங்களும் எனப் பெயரிட்டுள்ளேன். தமிழினம் பிணிநீங்கி, நலம் பெற்றுய்வதாக.

திரும்பத் திரும்பப்பாடுவதால், ஒரே கருத்து மீண்டும் மீண்டும் காணல் கூடும். அதனைக் கூறியது கூறலாகக் கருதாது. வற்புறுத்துவதற்காகக் கூறப்பட்டது எனக் கொள்ள வேண்டுகிறேன்.

7-10-1990
காரைக்குடி

**முடியரசன்**

## காணிக்கை

**தந்தை பெரியார், அறிஞர் அண்ணா, கலைஞர் கருணாநிதி**
மூவரோடும் தொடர்ந்து தொண்டாற்றி, தன்னலங்கருதாது,
குடும்பத்துடன் பணிபுரிந்து வந்த

*அண்ணன்*
**இராம. சுப்பையா** அவர்களுக்கும்
*அவர்தம் துணைவியார்*
**விசாலாட்சி அம்மையார்** அவர்களுக்கும்

இந்நூலைக் காணிக்கையாக்கி மகிழ்கின்றேன்.

**முடியரசன்**

# கவியரசர் முடியரசன்
## வாழ்க்கைக் குறிப்பு

| | | |
|---|---|---|
| இயற்பெயர் | : | **துரைராசு** |
| பெற்றோர் | : | சுப்புராயலு - சீதாலெட்சுமி |
| பிறந்த ஊர் | : | பெரியகுளம் |
| வாழ்ந்த ஊர் | : | காரைக்குடி |
| தோற்றம் | : | 7-10-1920 |
| இயற்கையடைவு | : | 3-12-1998 |
| கல்வி | : | பிரவேச பண்டிதம், மதுரைத் தமிழ்ச்சங்கம் (1934-39) வித்துவான், கணேசர் செந்தமிழ்க் கல்லூரி, மேலைச்சிவபுரி (1939-43) |
| பணி | : | தமிழாசிரியர், முத்தியாலுப்பேட்டை உயர்நிலைப்பள்ளி, சென்னை (1947 - 49) |
| திருமணம் | : | 2-2-1949 (கொள்கை வழிக் கலப்புத் திருமணம்) |
| துணைவியார் | : | கலைச்செல்வி |

| மக்கள் | | மருமக்கள் | | பேரப்பிள்ளைகள் |
|---|---|---|---|---|
| குமுதம் | + | பாண்டியன் | = | அருள்செல்வம், திருப்பாவை |
| பாரி | + | பூங்கோதை | = | ஓவியம் |
| அன்னம் | + | சற்குணம் | = | செழியன், இனியன் |
| குமணன் | + | தேன்மொழி | = | அமுதன், யாழிசை |
| செல்வம் | + | சுசீலா | = | கலைக்கோ, வெண்ணிலா |
| அல்லி | + | பாண்டியன் | = | முகிலன் |

## இயற்றிய நூல்கள்

| | | | |
|---|---|---|---|
| 1. | முடியரசன் கவிதைகள் | (கவிதைத் தொகுதி) | 1954 |
| 2. | காவியப்பாவை | (கவிதைத் தொகுதி) | 1955 |
| 3. | கவியரங்கில் முடியரசன் | (கவிதைத் தொகுதி) | 1960 |
| 4. | பாடுங்குயில் | (கவிதைத் தொகுதி) | 1983 |
| 5. | நெஞ்சு பொறுக்கவில்லையே | (கவிதைத் தொகுதி) | 1985 |
| 6. | மனிதனைத் தேடுகிறேன் | (கவிதைத் தொகுதி) | 1986 |
| 7. | தமிழ் வழிபாடு | (கவிதைத் தொகுதி) | 1997 |
| 8. | தமிழ் முழக்கம் | (கவிதைத் தொகுதி) | 1999 |
| 9. | நெஞ்சிற் பூத்தவை | (கவிதைத் தொகுதி) | 1999 |
| 10. | ஞாயிறும், திங்களும் | (கவிதைத் தொகுதி) | 1999 |
| * 11. | தாய்மொழி காப்போம் | 〃 | 2001 |
| * 12. | புதியதொரு விதி செய்வோம் | 〃 | 1999 |
| * 13. | வள்ளுவர் கோட்டம் | 〃 | 1999 |
| * 14. | மனிதரைக் கண்டு கொண்டேன் | 〃 | 2005 |
| 15. | பூங்கொடி (காப்பியம்) | (காப்பியம்) | 1964 |
| 16. | வீர காவியம் | (காப்பியம்) | 1970 |
| 17. | ஊன்றுகோல் | (காப்பியம்) | 1983 |
| * 18. | அன்புள்ள பாண்டியனுக்கு | (கட்டுரை) | 1999 |
| * 19. | இளவரசனுக்கு | (கட்டுரை) | 1999 |
| * 20. | எப்படி வளரும் தமிழ் | (கட்டுரை) | 2001 |
| * 21. | எக்கோவின் காதல் | (சிறுகதைகள்) | 1999 |
| 22. | சீர்திருத்தச் செம்மல் வை.சு. சண்முகனார் | (கட்டுரை) | 1990 |
| * 23. | பாட்டுப் பறவையின் வாழ்க்கைப் பயணம் | (தன் வரலாறு) | |

~~(* உடுக்குறியிட்டவை வெளிவர வேண்டியன ஆகும்)~~

# தேடிவந்த சிறப்புகள்

( விருது / பட்டம் / பரிசு - வழங்கியவர், இடம், ஆண்டு )

- "அழகின் சிரிப்பு" என்ற கவிதைக்கு முதல் பரிசு - பாவேந்தர் பாரதிதாசன், முத்தமிழ் மாநாடு, கோவை - 1950
- "திராவிட நாட்டின் வானம்பாடி" பட்டம் - பேரறிஞர் அண்ணா - 1957
- "கவியரசு" பட்டம், பொற்பதக்கம் - குன்றக்குடி அடிகளார், பாரி விழா, பறம்பு மலை - 1966.
- "முடியரசன் கவிதைகள்" நூலுக்குப் பரிசு - தமிழ்நாடு அரசு - 1966
- "வீரகாவியம்" நூலுக்குப் பரிசு - தமிழ்நாடு அரசு - 1973
- "நல்லாசிரியர் விருது" வெள்ளிப்பதக்கம் - கே.கே.ஷா, ஆளுநர், - தமிழ்நாடு அரசு - 1974
- "சங்கப்புலவர்" பட்டம் - குன்றக்குடி அடிகளார் - 1974
- "பாவரசர்" பட்டம், பொற்பேழை - ஞா. தேவநேயப் பாவாணர், உலகத் தமிழ்க்கழகம், பெங்களூர் - 1979
- "பொற்கிழி" - பாவாணர் தமிழ்க்குடும்பம், நெய்வேலி - 1979
- "பொற்குவை"- ரூ.10,000 - மணிவிழா எடுப்பு - கவிஞரின் மாணாக்கர்கள் - காரைக்குடி - 1979
- "பொற்கிழி" - பாரதியார் நூற்றாண்டு விழாக்குழு, சிவகங்கை
- "கவிப்பெருங்கோ", பட்டம், பொற்கிழி ரூ.10,000 - மணிவிழா எடுப்பு - கலைஞர் மு. கருணாநிதி, தி.மு.க. மாநில இலக்கிய அணி, சென்னை - 1980
- "தமிழ்ச்சான்றோர் விருது" பதக்கம் - தமிழகப் புலவர் குழு, சேலம் - 1983.
- "கலைஞர் விருது" - என்.டி. இராமராவ், ஆந்திர முன்னாள் முதலமைச்சர், கலைஞர் மு. கருணாநிதி, தி.மு.க. முப்பெரும் விழா, சென்னை - 1988.
- "பாவேந்தர் விருது" (1987க்குரியது), பொற்பதக்கம், கலைஞர் மு.கருணாநிதி, முதல்வர், தமிழ்நாடு அரசு, சென்னை - 1989.
- "பொற்கிழி" - விக்கிரமன் - அனைத்திந்திய தமிழ் எழுத்தாளர் சங்கத்தினர், காரைக்குடி, கவிஞர் இல்லம் - 1993
- "பூங்கொடி" நூலுக்கு இந்திராணி இலக்கியப் பரிசு ரூ.5000 இந்திராணி அறக்கட்டளை, கரூர் 1993.

- "சிறந்த தமிழ்த் தொண்டிற்கான" அரசர் முத்தையவேள் நினைவுப் பரிசில் - வெள்ளிப் பேழை, பொற்குவை ரூ.50,000 - அண்ணாமலை அரசர் நினைவு அறக்கட்டளை, சென்னை 1993.
- "இராணா இலக்கிய விருது" பொற்குவை ரூ.10,000 தமிழ் இலக்கியப் பேரவை, ஈரோடு - 1994
- "கல்வி உலகக் கவியரசு விருது" - அகில இந்தியப் பல்கலைக் கழகத் தமிழாசிரியர் மன்றம், (அழகப்பா பல்கலைக் கழகம்) காரைக்குடி - 1996
- "பொற்கிழி" பழைய மாணவர் பாராட்டு விழா, கணேசர் செந்தமிழ்க் கல்லூரி, மேலைச்சிவபுரி - 1997
- "கலைமாமணி விருது" - பொற்பதக்கம் - செல்வி பாத்திமா பீவி, ஆளுநர், கலைஞர் மு.கருணாநிதி, முதலமைச்சர், தமிழ்நாடு அரசு, சென்னை - 1998.

## பிற குறிப்புகள்

- இளம் பருவத்தில் கவிதை உணர்வை ஊட்டியவர் தாய்மாமன் துரைசாமி அவர்கள்
- 20ஆம் அகவை வரை கடவுளைப் பற்றிய கவிதைகள் இயற்றினார். அவை கிடைக்கவில்லை (1939)
- 21ஆம் அகவை முதல் சமுதாயச் சூழல், மொழி, நாடு, இயற்கை இவற்றையே பாடி வந்தார் (1940)
- 21 ஆம் அகவையில் இயற்றிய சாதி என்பது நமக்கு ஏனோ? என்ற கவிதையே முதல்முதலில் அச்சு வாகனம் ஏறியது. இது பேரறிஞர் அண்ணாவால் திராவிட நாடு இதழில் வெளியிடப்பட்டது (1940)
- தந்தை பெரியாரின் தன்மான இயக்கத் தொடர்பு (1940)
- தன்மான இயக்கத் தொடர்பால் வித்துவான் தேர்வில் தோல்வியுறுமாறு செய்யப்பட்டார். (1943)
- புதுவை மாநிலத்திற்கு அருகில் உள்ள மயிலத்தில் தலைமறைவாக இருந்து படித்து வித்துவான் பட்டம் பெற்றார். (1947)
- நவாபு டி.எஸ். இராசமாணிக்கம் நாடகக் குழுவில் பாடல், உரையாடல் எழுதும் பணி. அங்கிருந்த சிறை வாழ்க்கையும் மதவழிபாட்டு முறைகளும் பிடிக்காமல் வெளியேறினார்.
- சென்னையில் தமிழாசிரியர் பணி - பல்வேறு இதழ்களில் இலக்கியப் பணி - பொன்னி இதழில் பாரதிதாசன் பரம்பரைக் கவிஞராக அறிமுகம் - திராவிட இயக்கத் தலைவர்கள், தமிழறிஞர்களுடன் தொடர்பு (1947 - 49)

- தான் கொண்ட கொள்கைக்காக விதவையைக் கலப்புத் திருமணம் செய்து கொள்ளத் தாயாரிடம் வேண்டுதல். ஒரே மகன் என்பதால், அவ்வாறு செய்ய இயலாது எனத் தாயார் மறுத்தல் (1948)
- சாதி மறுப்புத் திருமணம் செய்யவாவது இசைவு கொடுங்கள் என அன்னையாரிடம் வேண்டுதல், பெற்றோர் இசைதல், பெற்றோர் மூலம் கலைச்செல்வி எனும் நலத்தகையாரை பேராசிரியர் மயிலை சிவமுத்து தலைமையில் சாதி மறுப்புத் திருமணம் செய்து கொண்டார் (1949)
- திருமணமான ஆண்டே தமது துணைவியாருடன் இந்தி எதிர்ப்புப் போரில் பங்கேற்றார் (1949)
- கலப்புத் திருமணத்தின் தேவையைப் பற்றி கவிதை பல பாடியதோடு இருந்து விடாமல் தாமும் கலப்புத் திருமணம் செய்து கொண்டு, தம்பிள்ளைகள் அனைவருக்கும் அவ்வாறே செய்துவித்துத் தம் கொள்கைக்கு வெற்றி தேடித் தந்ததன் மூலம் அரியவாம் சொல்லிய வண்ணம் செயல் என்னும் வள்ளுவன் வாக்கைத் தோல்வியுறச் செய்தார்.
- காரைக்குடியில் மீ.சு. உயர்நிலைப்பள்ளியில் தமிழாசிரியர் பணியேற்றார் (1949)
- முடியரசன்..........எனக்குப் பின் கவிஞன், எனப் புரட்சிக் கவிஞர் பாரதிதாசனால் பாராட்டப் பெற்றார் (1950)
- குருதி உமிழும் கொடுநோய்க்கு இலக்காகி, புதுக்கோட்டைத் தமிழ்ப் புரவலர் அண்ணல் பு.அ. சுப்பிரமணியனார் அருட்கொடையால் உயிர் பிழைத்தார் (1955)
- மூன்றாவது மகனான ஆண் மகன் பிறத்தல், செய்நன்றியின் பொருட்டு, தன்னுயிர் காத்த அண்ணல் சுப்பிரமணியனார் நினைவாக அம்மகனுக்கு சுப்பிரமணியன் எனப் பெயரிட்டார். (1955)
- சுப்பிரமணியன் என்ற அம்மகன் மறைவு, கவிஞர் பெருந்துயரம் அடைதல் (1959)
- சென்னை சென்று திரைப்படத்துறையில் ஈடுபட்டார். கண்ணாடி மாளிகை என்ற திரைப்படத்திற்குப் பாடல், உரையாடல் எழுதினார். திரைத்துறையில் சிறுமைகளைக் கண்டு வெறுப்புற்று, தம் இயல்புக்கும், கொள்கைக்கும், அத்தொழில் சிறிதும் ஒத்துவராததால் திரைத்துறையிலிருந்து வெளியேறினார். (1961)
- மீண்டும் காரைக்குடியில் தமிழாசிரியர் பணி (1962)
- இந்தி எதிர்ப்புப் போரில் ஈடுபட்டதாகக் காவல்துறையினர் வழக்கு (1965)
- பூங்கொடி நூலுக்குத் தமிழ்நாடு அரசு தடைசெய்ய ஏற்பாடு (1966) ஆட்சி மாற்றத்தால் பூங்கொடி தடை ஏற்பாடு விலக்கம் (1967)

- தமிழாசிரியப் பணி ஓய்வு (1978)
- மதுரைப் பல்கலைக் கழகத் தமிழியற் புலத்தில் நாடகக் காப்பியப் பணி (1985)
- திராவிட நாடு, முரசொலி, முத்தாரம், குடியரசு, விடுதலை, போர்வாள், முல்லை, எழில், தென்றல், மன்றம், அழகு, முருகு, பொன்னி, குயில், கதிரவன், நம்நாடு, வாரச் செய்தி, பிரசண்ட விகடன், தமிழ்ப்பாவை, காதல், தாமரை, புதுவாழ்வு, தனியரசு, சங்கொலி, வாழ்வு, தோழன், திராவிடமணி, தமிழ்ச்சுவை, தமிழ், போர்முரசு, பாசறை, இன முரசு, இன முழக்கம், நித்திலக் குவியல், செந்தமிழ்ச் செல்வி, கலைக்கதிர், அமுத சுரபி, கழகக் குரல், மறவன் மடல், சமநீதி, உரிமை வேட்கை, தென்னரசு,தென்னகம், தமிழ்முரசு, தமிழ்நாடு, அலைஓசை, தமிழ்நேசன் (மலேசியா), கவிதை, முல்லைச்சரம், தமிழரசு, குங்குமம், தினமணிகதிர், தினமணி ஆகிய இதழ்களிலும் மற்றும் பல்வேறு இதழ்களிலும் கவிஞர் தமது எழுத்தோவியங்களைத் தீட்டியுள்ளார்.
- கவிஞரது கவிதைகள் பல சாகித்திய அகாதமியால் இந்தியிலும், ஆங்கிலத்திலும் மொழி பெயர்க்கப்பட்டுள்ளன. கன்னடத்திலும் உருசிய மொழியிலும் மொழி பெயர்க்கப்பட்டுள்ளன.
- கவிஞரது நூல்கள் பல்கலைக் கழகங்கள் பலவற்றில் பாடநூல்களாக வைக்கப்பட்டுள்ளன. பல்வேறு பல்கலைக் கழகங்களில் இவர்தம் நூல்கள் முனைவர் மற்றும் எம்ஃபில் பட்டத்திற்காகவும் ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளன.
- பாவரசர் முடியரசனாரின் தமிழ்த்தொண்டு என்ற ஆய்வு நூல் முனைவர் மு. இளங்கோவன் என்பாராலும், முடியரசன் படைப்புகள் ஓர் ஆய்வு என்ற ஆய்வு நூல் முனைவர் சிரீகுமார் என்பாராலும், பூங்கொடியும் மணிமேகலையும் என்ற ஒப்பாய்வு நூல் முனைவர் மு. நிலாமணி என்பாராலும் எழுதப்பட்டு வெளிவந்துள்ளன.
- கவியரசர் முடியரசனார் முத்தமிழ் மன்றம் என்னும் பெயரில் புலவர் தி.மு. அரசமாணிக்கம் என்பார், ஈரோட்டில் மன்றம் அமைத்துத் தமிழ்த் தொண்டு செய்து வருகிறார்.

## பெற்ற பாராட்டுகள்

★ பாவேந்தர் வழித்தோன்றல், புதுமைக்கவிஞர், கவிமாமன்னர், கவிச்சிங்கம், இருபதாம் நூற்றாண்டின் இமயக் கவிஞர், கவிதை இமயம், தமிழ்த்தவம் கொண்ட தலைமைக் கவிஞர், தமிழ்க்குடியரசின் பாட்டு முடியரசர், கவியுலக முடியரசர், சுயமரியாதைக்கவிஞர், தமிழிசைப் பாவலர்.

★ வள்ளுவர் நெறியில் வாழ்ந்தவர், சொல்லும் செயலும் ஒத்த வாழ்வினர், வறுமையிலும் செம்மை போற்றியவர், திமிர்ந்த ஞானச் செருக்குடைய சங்கப் புலவரனையர், சங்கத் தமிழனைய தூயவர், பீடுநடையினர், பெருமித

வாழ்வினர், நிமிர்ந்த நடையினர், நேர்கொண்ட பார்வையர், அண்டிப்பிழையார், ஆர்த்த வாழ்வினர், ஒட்டார் பின் செல்லாதவர், நல்லாசிரியர், ஆசிரியர் போற்றுபவர், நன்றி மறவாதவர், நட்புப் பெரிதென வாழ்ந்தவர், பகுத்தறிவாளர், மனிதநேயர், பழகுதற்கினிய பண்பாளர், பிறர்க்குதவும் ஏந்தல், சாதி தொலைத்தவர், சமயம் அறுத்தவர், பதவி வெறுத்தவர், சமத்துவம் விரும்பி, விளம்பரம் விரும்பார், எளிமை வாழ்வினர், புகழ் கண்டு கூசுவார், அன்பு நெஞ்சினர், குழந்தை உள்ளத்தினர், பூமணத்தினர், இனிமைப் பேச்சினர், இளமை விரும்பி, அமைதி விரும்பி, குறிக்கோள் வாழ்வினர்.

★ இடர்பாடுகளும் இன்னல்களும் வந்தபோதும் கொண்ட கொள்கையிலிருந்து இறுதிவரை வழுவாமல் தடம்புரளாத் தங்கமாக, தன்மானச் சிங்கமாக, தமிழ் வேழமாக, கொள்கைக் குன்றமாக வாழ்ந்தவர். பணம், பதவி, பட்டம், பகட்டுக்குப் பணியாமலும் அரசவைப் பதவிகள் நாடி வந்த போதும் அவைகளைப் புறக்கணித்தும் வளையா முடியரசர் என்றும் வணங்கா முடியரசர் என்றும் புகழ்பெற்றவர். தன்மானக் கொள்கையால், மைய, மாநில அரசின் பல அரிய விருதுகளை இழந்தவர். பல்லாயிரம் இளைஞர்களைத் தமிழ் உணர்வாளர்களாக்கியவர், கனவிலும் கவிதை பாடுபவர். பாட்டுலகில் பாரதியாரைப் பாட்டனாகவும், பாரதிதாசனைத் தந்தையாகவும் கருதிக் குலமுறை கிளத்தும் கொள்கையுடையவர்.

### தமது வாழ்நாளில் இறுதியாக அவர் இயற்றிய கவிதை

*வாளால் பிளப்பினும் வாழ்நாள் இழப்பினும் வஞ்சமனக்*
*கேளார் குழுமிக் கெடுதிகள் குழினும் பூமியில்வாழ்*
*நாளெலாம் வாட்டும் நலிவே உறினும் நற்றமிழே*
*ஆளாதல் திண்ணம் அடியேன் நினது மலரடிக்கே*

*தொகுப்பு*

**கவியரசர் முடியரசனார் முத்தமிழ் மன்றம்**

ஈரோடு.

# ஞாயிறும் திங்களும்

## ஒளிக்கதிர்கள்


| எண். | | பக்கம் |
|---|---|---|
| 1. | வேலைச் சுழற்றுங்கள் வேதனையை நீக்குங்கள் | 16 |
| 2. | தமிழினத்தின் தனித்தலைவர் | 19 |
| 3. | தன்மானப் புத்தகத்தை மூடமாட்டோம் | 23 |
| 4. | புத்துலகச் சிற்பி | 25 |
| 5. | இயற்கைப் பெரியார் | 32 |
| 6. | இனத்தலைவர் | 34 |
| 7. | தட்டி எழுப்பினார் | 35 |
| 8. | உடைத்தெறிந்தார் | 36 |
| 9. | தண்டூன்றும் பெரியார் | 37 |
| 10. | சங்கே முழங்கு | 38 |
| 11. | ஆதவன் | 39 |
| 12. | வெண்தாடி வேந்தர் | 40 |
| 13. | போராட்ட வீரர் | 41 |
| 14. | பகலோன் வாழ்க | 42 |
| 15. | தொண்டுக்கிலக்கணங்கண்டவர் | 43 |
| 16. | இன்றைய நாடு | 44 |
| 17. | ஒன்றா ? இரண்டா ? | 45 |
| 18. | எப்படிப் பெரியார் வாழ்வார் ? | 45 |
| 19. | பல்லாண்டு பல்லாண்டு | 46 |
| 20. | காஞ்சிக் கதிரவன் | 48 |
| 21. | தமிழ்காத்த தலைவர் | 50 |
| 22. | புரட்சித் தலைவன் | 51 |
| 23. | தமிழ்நாட்டுப் பேரரண் | 53 |
| 24. | எழுத்தும் பேச்சும் | 55 |
| 25. | கழகம் வென்றது | 57 |
| 26. | அரசு நாட்டினான் | 59 |
| 27. | தலைவா வருக | 60 |
| 28. | காக்குங் கைகள் | 61 |
| 29. | தாய்மொழிக் காவலர் | 63 |
| 30. | காக்குந் தொழில் வல்லான் | 68 |
| 31. | ஆழம் அறியா அன்புள்ளம் | 70 |
| 32. | அண்ணா வருக | 72 |
| 33. | யாழ் உடைந்தது | 73 |
| 34. | அடக்கத்தை அடக்கம் செய்தோம் | 78 |
| 35. | நெஞ்சம் நெக்குருகும் | 80 |
| 36. | பண்பு மலர் | 81 |
| 37. | அண்ணா பேசினார் | 84 |
| 38. | அண்ணா வழியில் அயராதுழைப்போம் | 89 |
| 39. | வெற்றி மலர் சூடுங்கள் | 94 |
| 40. | தொடர்ந்து செல்வேன் | 96 |

## வேலைச் சுழற்றுங்கள்! வேதனையை நீக்குங்கள்!!

நாட்டில் இயங்கிவரும் நாலுவகைக் கட்சிக்கும்
ஆட்டுந் தலைவருண் டாடிவருந் தொண்டருண்டு
தன்மானக் கட்சிக்குத் தக்க தலைவருண்டு
அன்பான தொண்டர் அளவில்லா வீரருண்டு
தொண்டர் தலைவரெனச் சொல்லளவில் நின்றாலும்
அண்டும் ஒருகுடும்பம் ஆனதுதான் நம்கழகம்
அய்யா எனவுரைத்தும் அண்ணா எனஅழைத்தும்
மெய்யான பற்றுளத்தால் மேம்பட்டு நின்றவர் நாம்
அண்ணா என அழைப்போம் அன்புள்ள தம்பீஎன்
றண்ணன் நமையழைப்பான் அவ்வண்ணம் நாமிருந்தோம்
நூலொன்றால் கோத்தமைத்த நூறு வகைமணிகள்
போலொன்றி நல்லுறவு பூண்டு வளர்ந்தவர் நாம்
ஒன்றாக்கி நின்ற உறவுநூல் எப்படியோ
நன்றாக்குந் தோழர்க்குள் நாலாறு கூறுபட்டுக்
கட்டவிழ்ந்து வெவ்வேறாய்க் காணும் மணிபோல
ஒட்டுறவேயின்றி உதிர்ந்துகிடக் கின்றோம்
உறவு முறைகாண உள்ளவன்நான் வேறு
வரவு முறைகாண வந்து புகவில்லை
ஆதலினால் நம்கழகம் அல்லற் படும்போது
வேதனை கொள்கின்றேன் மீண்டும் உறவுமுறை
காணத் துடிக்கின்றேன் காளையரே முன்போலப்
பேணிச் செயல்செய்யப் பேருள்ளங் கொள்ளீரோ?
நாட்டை நினையுங்கள்! நாடாண்ட நம்மினத்தின்
பாட்டை நினையுங்கள் பைந்தமிழை எண்ணுங்கள்!
வீட்டின் தனிநலத்தைச் சற்றே விலக்கிவைத்து
நாட்டின் பொதுநலத்தை நாடுங்கள் நாடிவிடின்
நானென்ற சொல்மறையும் நாமென்ற சொல்மலரும்
ஏனென்றால் தொண்டுக் கிலக்கணம் ஈதேதான்
அண்ணன் திருநாளில் அத்தலைவன் சொன்னவற்றை
எண்ணி நடத்திடவே இன்றும்மை வேண்டுகிறேன்
நேற்றை வரலாற்றை நெஞ்சில் நிறுத்துங்கள்

ஏற்றை நிகர்வலியீர் இன்று நடப்பதையும்
சிந்தித் தெதிர்நிறுத்திச் சீர்தூக்கி நோக்குங்கள்
வந்த இடரெல்லாம் வாயடங்கிப் போயொழியும்
நாளை எதிர்காலம் நன்றாக வேண்டுமென்றே
காளையருக் கிந்தக் கருத்தை மொழிகின்றேன்
என்னைத் தவறாக எண்ணி எடைபோட்டுப்
பின்னக் கணக்கைப் பிழையாகப் போடாதீர்!
கூடாரங் கூடார மாகக் குடிபுகுந்து
சூடாத பூக்கொய்து சூடிப் பழிசுமந்து
மானந் தனையிழந்து மற்றவர்தம் தாள்பிடித்துக்
கூனல் மனத்தோனாய்க் கொள்கையை விற்றதில்லை
நேற்றொன்று கூறி நிலைநாட்டி இன்றதனை
மாற்றியுரைக்கும் மதிசிறிதும் பெற்றதில்லை
அன்றுநான் சொன்னதையே இன்றும் மொழிகின்றேன்
என்றுமதே சொல்வேன் இனிமேலா மாறிடுவேன்?
ஏற்றுங் கொடிதான் இருவண்ணம் என்னெஞ்சில்
ஏற்றும் எழில்வண்ணம் என்றும் ஒருவண்ணம்
கொச்சை மொழிபேசிக் கூட்டம் மிகச்சேர்த்துப்
பச்சைப் புளுகால் பலபேரை ஏமாற்றிக்
கச்சேந்தும் மாதர் கல்விக் கதைகூறிப்
பச்சோந்தி போலப் பலவண்ணங் காட்டேன்நான்
மெச்சும் மொழிபேசி மேன்மைக் கருத்துரைத்
தச்சம் சிறிதுமின்றி அல்லல் எதுவரினும்
துச்சம் எனமதித்துத் தொண்டுசெயத் தன்மானக்
கச்சைகட்டி நிற்கும் கடப்பா டுடையவன்நான்
ஈரோட்டு வேந்தர் எடுத்த இனவெழுச்சிப்
போராட்டப் பாசறைக்குட் போய்ப்புகுந்த நாள்முதலே
நீர்க்கோல வாழ்வில் நெடிதே துயருறினும்
போர்க்கோலம் மாறவிலை புத்திதடு மாறிவில்லை
கோட்டுக்குக் கோடு குதிக்கும் கவியாகி
நாட்டைக் கெடுக்கும் நயவஞ்சங் கொண்டதிலை
கேட்டுக்குள் கேடு கிளர்ந்தெழுந்து தாக்கிடினும்
நாட்டை யுருவாக்க நாளும் நினைப்பவன்நான்
பாடென்ன பட்டாலும் பண்பாட்டை எந்நாளும்
பாடுபட்டுக் காக்கப் பழகி நடப்பவன்நான்
சங்கமெனுந் தோட்டத்தில் சாற்றுச் சுவைமிகுந்து
தொங்குங் கவிப்பழங்கள் துய்த்துப் பழக்கமுண்டு
யாப்பமைந்த பாடல் இயற்றித் தருவதற்குக்
கோப்பைப் பழங்கள் குடித்துப் பழகவில்லை

சாதிச் சழக்ககலச் சாத்திரத்துச் சூழ்ச்சிகளை
மோதித் தகர்த்தெறிய முன்னேற்றம் பெற்றிலங்கக்
கட்டாயம் வேண்டும் கலப்புமணம் என்றதுண்டு
தட்டாமல் அவ்வாறே சாதி தனைத்தொலைத்தேன்
சாதிக் கலைப்பைத்தான் சாற்றி நடந்ததன்றி
ஓதும் மொழிக்கலப்பை ஓர்நாளும் சொன்னதிலை
செந்தமிழில் வந்தமொழி சேர்ந்தால் இனிக்குமெனச்
சந்தைமொழி பேசும் சழக்கனென ஆகவில்லை.
பாட்டுத் தொழிலுடையேன் பண்பாட்டுச் செந்தமிழை
நாட்டுந் தொழிலுடையேன் நாட்டை யுருவாக்க
வேட்டுத் தொழில்புரிவேன் வேட்டுவைத்து நானறியேன்
வீட்டை நினைந்தறியேன் வெந்துயரம் உற்றாலும்
ஒன்றே வழியென்பேன் ஒன்றே மொழியென்பேன்
நன்றே நினைந்து நடக்கின்றேன், ஆதலினால்
ஓங்கும் விளம்பரங்கள், உற்ற துணைபுரிந்து
தாங்குந் திருக்கைகள், தாங்காத் துயரகற்றிக்
காக்குந் திருவுளங்கள் கண்டதிலை இன்றுவரை
ஏக்கம் அதனாலே எள்ளளவும் கொண்டதிலை
நாட்டின் நலம்நினைந்து நல்ல கனவுலகில்
பாட்டுப் பறவையெனப் பாடி வருபவனை
வீட்டுத் துயர்வந்தா வீழ்த்திவிடும் ? வீழ்ந்துவிடின்
பேட்டுத் தனமாகும் பிள்ளைச் செயலாகும்
ஆதலினால் நம்கழகம் அல்லற் படும்போது
வேதனை கொள்கின்றேன் வேதனையை நீக்கிடுவீர் !
காலைக் கதிரவனைக் கார்முகில் சூழ்ந்துளது
வேலைத் திறமையுடன் வீசுங்கள் ! முன்போலப்
பொங்கும் இனவுணர்ச்சி பொங்கட்டும் ! அவ்வுணர்ச்சி
எங்கும் பரவி எழுந்துபுயல் ஆகட்டும் !
வீசுபுயல் வேகத்தால் மேகங்கள் ஓடட்டும் !
தேசுபெறும் செங்கதிரோன் செய்யஒளி வீசட்டும் !

..........................................................................................

..........................................................................................

**(கவிதையின் முடிப்பு வரிகள் கிடைக்கவில்லை)**

தமிழ்நாடு அரசு அண்ணா விழா,
கலைவாணர் அரங்கம்
சென்னை
**15-9-1977**

## தமிழினத்தின் தனித்தலைவர்

தொண்டொன்றே வாழ்வின் தொழிலாக நாளெல்லாம்
கொண்டிலங்கும் நம்பெரியார் கோலம் வடித்தெடுத்தே
வண்டலுக்குப் பேர்பெற்று வாழ்வுதரும் தஞ்சைமண்ணில்
அன்றெடுத்தார் ஓர்சிலைதான் அந்நாள் கவியரங்கில்
நாட்டுக் குழைத்துவரும் நம்மினத்துக் காவலர்க்குப்
பாட்டெழுத வேண்டிப் பணித்திருந்தார் வீரமணி
நன்றிக் கடன்செலுத்த நல்லதொரு வாய்ப்பிதுவாம்
என்றுநான் எண்ணி இசைவும் அளித்துவிட்டேன்
சூழ்நிலையால் பாமாலை சூட்ட இயலாமல்
ஆழ்துயரம் கவ்வியதால் அன்றுமுதல் நொந்திருந்தேன்
அந்த மனத்துயரம் ஆறும் படியாக
இந்தநிலை வாய்த்ததென எண்ணி மகிழ்கின்றேன்
அன்றுதஞ்சை மண்ணில் அவர்க்குச் சிலையெடுத்தார்
இன்றுதிண்டுக் கல்லில் எடுத்தார் சிலையொன்று
பாமலர்கள் சூட்டப் பணித்தமையால் இவ்வரங்கில்
நாமகிழ நெஞ்சம் நனிமகிழப் பாடுகின்றேன்
என்தந்தை தோன்றியஊர் இவ்வூரே அவ்வூரில்
முன்வந்த எம்மினத்தின் மூத்ததிருத் தந்தையை நான்
பாடுகின்ற பேறடைந்தேன் பாவலர்கள் சொன்மலர்கள்
சூடுகின்ற தாள்மலரைச் சூடுகிறேன் என்தலையில்
பற்றிப் படர்ந்திருந்து பாழ்செய்யும் ஆரியத்தைச்
சுற்றித் தொலைப்பதற்குச் சூறா வளியாகி
வேரெல்லாம் பேர்த்தெறிய வேகப் புயலாகி
ஊரெல்லாம் நாடெல்லாம் ஓடி வரும்நாளில்
ஆய்ந்துணர மாட்டா தறியாமைப் பேரிருளில்
தோய்ந்து கிடந்தோர் தொடுத்தெறிந்த கல்லெல்லாம்
சேர்ந்து திரண்டு சிலையாக வந்தின்று
நேர்த்திங்கு நிற்பதுபோல் நெஞ்சம் நினைக்கிறது
கல்லுக்கும் சொல்லுக்கும் காட்டும் எதிர்ப்புக்கும்
தொல்லைக்கும் அஞ்சாது தொண்டுசெயும் அந்நாளில்
ஆரியரின் கால்வருடும் அன்பர் திருக்கூட்டம்
சீறிவரும் நாகமெனச் சேர்ந்து பெரியார்மேல்

வீசி எறிந்தபொருள் வீசைப் பொருளாகிக்
காசு பணமாகக் காண்கின்றேன் இந்நாளில்
பேராசைக் காரர் பெரியார் எனச்சொல்ல
ஓராசை என்மனத்தே ஓடிச் சுழல்கிறது
தம்வயது தொண்ணூற்றைத் தாண்டிவிட்ட பின்புமவர்
தம்வயது நீண்டுவரத் தாம்ஆசை கொள்கின்றார்
ஏனிந்த ஆசைஎனில் இன்னும்பல் முன்னேற்றம்
நானிங்குச் செய்வதற்கு நாடுகின்றேன் என்கின்றார்
நம்மினத்தை ஈடேற்ற நாடுகின்ற ஆசை எனில்
எம்முயிர்க்கு வைத்தநாள் எல்லாம் அவர்க்கீவோம்
பல்லாண்டு பல்லாண்டு பல்லா யிரத்தாண்டு
நல்லாண்டு பெற்றிலிங்க நாமெல்லாம் வாழ்த்திடுவோம்
தந்தை மகற்காற்றும் நன்றி அவையத்து
முந்தி யிருப்பச் செயலென்ற முன்மொழியால்
தாம்பெற்ற தி.மு.க. தாயகத்துப் பேரவையில்
ஓங்குற்று மேன்மைபெற உண்டாக்கி விட்டமையால்
தந்தை செயும்பணியைத் தாழ்வின்றிச் செய்துவிட்டார்
அந்த பெருமகனை அய்யாவை வாழ்த்திடுவோம்
தேயத்தில் கட்சிபல சேர்ந்து வளர்வதுண்டு
நேயம் வளர்க்கின்ற நேர்த்தியைநாம் பார்த்ததுண்டா?
அய்யா எனஉறவு சொல்லி அழைப்பதற்கு
மெய்யாக ஓர்தலைவர் மேதினியிற் கண்டதுண்டா?
அண்ணாஅண் ணாவென் றழைக்கின்ற அன்புமொழி
எந்நாளில் எக்கட்சி எங்கே உரைத்ததுண்டு?
வீட்டுக் குடும்பம்போல் வேண்டிப் பழகுகின்ற
நாட்டுக் குடும்பமென நம்கழகம் வாழ்வதற்குக்
கற்பித்த நம்ஆசான் காட்டும் நெறிநடக்க
முற்பட்டு நின்றால்நாம் முன்னேற்றம் பெற்றிடுவோம்
முன்னேற்றம் நாம்பெற்றால் மூத்திருக்கும் இக்கிழவர்
இந்நூற்றைத் தாண்டி இனிதிருந்து வாழ்ந்திடுவார்
தொண்ணூறு தாண்டிவிடின் தொண்டுகிழம் என்றுரைப்பர்
தொண்ணூறு தாண்டிடினும் தொண்டுக் கிழவரிவர்
இவ்வுலகை மாயமென ஏய்க்கும் மதச்சழக்கை
வெவ்வுரையால் சுட்டெரிக்கும் வெந்தழல்தான் நம்பெரியார்
எம்மதமும் அண்டா நெருப்பிவர்தாம் என்றாலும்
அம்மா மதத்தலைவர் அண்டும் மதித்தலைவர்
திட்டப் படும்புலவர் சிந்தையது நோவாமல்
ஒட்டிப் பழகும் உரிமைத் தலைவரிவர்
வாளெடுப்போம் நம்பகையை வாட்டிடுவோம் என்றுபல

நாளெடுத்துக் கூறிடினும் நம்பகையால் வந்தவர்க்குக்
கேடொன்றும் சூழாக் கிழவரிவர் நெஞ்சத்தில்
சூடொன்றப் பேசிடினும் தோழமைக்குத் தந்தையிவர்
வன்முறைகள் நாடா வலியரிவர் தம்கருத்தைச்
சொன்முறையால் நற்புரட்சி தோற்றுவித்த வீரரிவர்
பார்போற்றும் வண்ணம் பகுத்தறிவுக் கல்லூரிச்
சீர்போற்றி நின்றிலங்கச் செய்யும் முதல்வரிவர்
தென்னாட்டை மீட்கத் திறல்காட்டி நம்பகைவர்
★ வெந்காட்டி ஓடச்செய் வெண்தாடி வேந்தரிவர்
இந்தி எனும் பெயரால் இங்குவரும் ஆதிக்கம்
முந்தித் தொலைத்துவிட மூட்டும் பெருநெருப்பு
தங்கமுடி யாமல் ததும்பிவரும் சிந்தனைகள்
பொங்கி வழிகின்ற புத்தறிவுப் பேரூற்று
சாதி சமயங்கள் சாத்திரங்கள் என்றுபல
ஓதும் மடமை உடைக்கும் வெடிமருந்து
நல்ல குடியரசும் நாடும் விடுதலையும்
வெல்லும் படிதந்த வீரத் தலைவரிவர்
உய்வண்ணம் ஆய்ந்தறிந் தோய்வே அறியாமல்
செய்யரிய செய்து பெரியார் எனவானார்
நாட்டை அடிமைக்குள் நட்டு மிடிமைக்குள்
வாட்டி நமையாண்ட வஞ்சகத்து வெள்ளையரை
ஓட்டுதற்குப் பாடுபட்ட ஓரியக்கம் பேரியக்கம்
காட்டும் நெறிநின்று கடுஞ்சிறையுட் புக்கதெலாம்
நாடறியும், அந்நாள் நலிவுற்ற ஓரினத்தைப்
பீடுபெறச் செய்வதற்குப் பிற்போக்கு வைக்கத்தில்
காட்டிய அத்துணிவைக் கண்டவர்கள் வீரரென
ஏட்டில் எழுதி எடுத்துப் புகழ்ந்தார்கள்
நாட்டிற் குழைத்தஇவர் நம்மினத்தின் மேன்மைக்குக்
கேட்டார் சிலவுரிமை கேட்டும் மறுத்ததனால்
காஞ்சிபுர மாநாட்டில் கண்சிவக்கப் பேசிவிட்டு
வாஞ்சைகொளும் நம்பெரியார் வந்தார் வெளியேறி
எங்கள் இனத்துரிமை ஏற்றம் பெறவந்த
சிங்கம் நிகர்தலைவர் சீர்மைமிகு காஞ்சியிற்றான்
ஏற்றமிகும் அண்ணா இனப்போர்ப் படைத்தலைமை
ஏற்கத் தகுதியுள்ளார் என்று தெரிந்தெடுத்தார்
நாடு பிரிவதுதான் நன்மை பயக்குமென
நாடி முடிவெடுத்தார் நல்லாரூர் தன்னில்
பிரிவினைக்கு வித்திட்ட பேர்பெற்ற அவ்வூரில்
உரிமைக் குரல்தந்(து) - உறவுக்குக் கைதந்து

★ வெந்காட்டி - புறமுதுகுகாட்டி

தன்னாட்சி நாடுந் தலைமகனை, இந்தியத்தின்
முன்னாட்சி செய்கின்ற மு.க.வைத் தந்தவரார்?
மூன்று தலைமுறையை முற்போக்குத் தலைவர்தமை
ஈன்று கொடுத்தவரார்? இன்னும் படைப்பவரார்?
பிற்போக்குக் கொள்கைகளைப் பேரிடிபோல் தாக்கிநின்ற
முற்போக்குக் கொள்கையினான், மொய்ம்புடைய ஏறனையான்
பாட்டுக் குரியவனைப் பாரதியை விஞ்சிவிட்ட
பாட்டுக்கு வேந்தனவன், பாரதியின் தாசன்றன்
பாட்டுக்குள் வீரத்தைப் பாய்ச்சியவர் ஈரோட்டுப்
பாட்டனன்றோ? ஆற்றலெலாம் பாடி முடிவதுவோ?
ஒப்பரிய நற்றலைவர் ஆனாலும் ஓர்பொழுதும்
தற்செருக்குக் காட்டாத் தலைவர் அப்பண்பால்
எளிமைத் தலைவர் எவரிடத்தும் இன்சொல்
மொழியுந் தலைவர் முழுமைபெறும் நம்தலைவர்
தள்ளாட்டம் உற்றும் தடுமாற்றம் இல்லாமல்
சொல்லாட வல்லஒரு சோர்வில்லாப் பேச்சாளர்
பல்லெல்லாம் வீழ்ந்தும் பகுத்தறிவைப் பாய்ச்சுகின்ற
சொல்லெல்லாந் தித்திக்கும் சூடுங் குறையாது
கிண்டல் நிறைந்திருக்கும் கேலி மிகுந்திருக்கும்
கிண்டி அறிவைக் கிளர்ச்சி கொளச்செய்யும்
சிந்தித்துக் கண்ட சிறப்புமிகும் தங்கருத்தை
எந்தச் சமயத்தும் எங்குந் துணிந்துரைக்கும்
அஞ்சாத நெஞ்சத்தை ஆரிடத்துங் கண்டதில்லை
துஞ்சாத சிங்கத் துணிவுமிகப் பெற்றார்
நமது தலைமுறையில் நாம்பெற்ற பேற்றால்
இமயப் புகழ்கொண்ட ஈடில் தலைவர்
நமக்குக் கிடைத்துள்ளார். நாளும் உழைத்தே
நமக்குற்ற தாழ்வை நசுக்கித் தொலைத்துவிட்டார்
நாமும் தமிழரென நாடாளும் மாந்தரென
★ஏமம் மிகக்கொண் டினிதிங்கு வாழ்கின்றோம்
பெற்றதொரு நல்வாழ்வைப் பேணி மிகக்காத்து
நற்றமிழர் என்றுரைக்க நாம்வாழ்வோம் என்றுசொலித்
தந்தை பெரியாரின் தாள்வணங்கி வாழ்த்துரைத்துச்
சிந்தை மகிழ்ந்திருப்போம் சிந்தனையைப் பேணிடுவோம்
என்றுநான் சொல்லி இருகை குவிக்கின்றேன்
மன்றிலுளார் வாழ்க மகிழ்ந்து!

பெரியார் சிலை திறப்பு விழா
திண்டுக்கல்
17-9-1970

★ ஏமம் - இன்பம்

## தன்மானப் புத்தகத்தை மூடமாட்டோம்

கேட்டதடா ஒருசெய்தி தொண்டு செய்தே
    கிழமான பழமொன்று விழுந்த தென்றே
போட்டதடா என்னெஞ்சில் பாராங் கல்லைப்
    பொழுதுபுலர் நேரத்தை அந்தச் செய்தி
கேட்டழுகை வரவில்லை எனது கண்ணில்
    கிறுக்குற்ற எனதுமனம் அழுத தாலே
பாட்டெழுத வரவில்லை எனது கையே
    பகலவனைத் தொழுதழுது புலம்ப லாலே.

நெஞ்சுரத்தை மட்டுமொரு துணையாகக் கொண்டு
    நீபட்ட பாட்டையெலாம் நினைத்த தன்றி
அஞ்சலிக்கு நானெழுதும் பாட்டை என்றன்
    அகங்கருத முடியாமல் தவித்த தையா!
வெஞ்சினத்து ★மடங்கலுக்கு நிகராய் வந்த
    வெண்தாடி வேந்தேஎன் புலம்ப லாலே
நெஞ்சுருக்கும் என்துயரப் பாட லாலே
    நினைகின்றேன் தொழுகின்றேன் அய்யா நின்னை.

அய்யாஉன் தலைமகனை அறிஞர் செம்மல்
    அண்ணாவை அன்றிழந்தோம் துயரில் மூழ்கிக்
★கையாறு மிகவுழந்தோம், நின்றன் பேரன்
    கலைஞர்தரும் ஆறுதலால் தேறி வந்தோம்
நையாமல் நையும்வணம் இங்கு நாங்கள்
    நாதியற்று நிற்கும்வணம் பிரிந்து விட்டாய்!
அய்யாஎம் அய்யாஎன் றலறு கின்றோம்
    யாரைக்கண் டாறுதலைப் பெறுவோம் அய்யா!

சமுதாய மருத்துவனே! பிணியுற் றோனைச்
    சாகாமல் காப்பதுதான் எனது கொள்கை
அமுதான இனியமருந் தென்பா வில்லை
    அறுவைசெயும் மருத்துவன்நான் நோயுற் றுள்ள
குமுகாயம் வருந்தினுமோர் கவலை யில்லை
    குற்றுயிராய்ச் சாகவிடேன் என்று கூறி
எமைமேவும் பிணிநீக்கி மானமுள்ள
    இனமாகத் தலைநிமிரும் வாழ்வு தந்தாய்

★ மடங்கல் - சிங்கம்    ★ கையாறு - செயலற்ற நிலை

உடல்நலமும் உயிர்நலமும் கருதா தெங்கள்
உயர்வுக்கே உள்ளளவும் உழைத்தி ருந்தாய்
விடுமுயிரைத் தாழ்ந்திருக்கும் தமிழி னத்தின்
விடுதலைக்கே விடுவேன்என் றுழைத்து நின்றாய்
அடலரியே ஆருயிரே எம்மி னத்தின்
அடிமைதனை அகற்றவந்த தலைவா நாங்கள்
படுதுயரை எவ்வண்ணந் தாங்கிக் கொள்வோம்?
பகலவனே பயணத்தை ஏன்முடித்தாய்?

கண்மூடிக் கிடந்துழன்ற தமிழி னத்தைக்
கண்டுமனம் நொந்தெழுந்து தட்டித் தட்டிக்
கண்திறக்க வைத்தாயே! திறக்கும் போது
கண்ணெல்லாம் குளமாகச் செய்து விட்டுக்
கண்மூடிக் கொண்டாயே! அய்யா உன்றன்
கடமைஎலாம் முடிந்ததென்றோ? நினது மெய்யை
மண்மூடிக் கொண்டாலும் அய்யா எங்கள்
மனமெல்லாம் நீயிருக்கத் திறந்து வைத்தோம்.

கண்மூடிக் கிடந்தாலும், எங்கட் காகக்
காலமெலாம் உழைத்துழைத்துப் பழுத்த மெய்யை
மண்மூடிக் கிடந்தாலும், துயரம் எங்கள்
மனமூடிக் கிடந்தாலும் கண்க ளெல்லாம்
தண்ணீரிற் கிடந்தாலும் எமக்குத் தந்த
தன்மானப் புத்தகத்தை மூட மாட்டோம்
கண்மூடிப் பழக்கங்கள் சாயும் மட்டும்
கடமைப்போர் ஆற்றுவதில் ஓய மாட்டோம்.

ஈரோட்டுப் பாசறையில் பயிற்சி பெற்ற
எதையுமஞ்சாப் போர்வீரர் சூழ்ந்து நிற்கப்
போராட்டம் போராட்டம் என்று சொல்லிப்
போராடிக் காலமெலாம் வாழ்ந்த வேந்தே!
நீரோட்டம் அற்றாலும் எங்கள் நெஞ்சில்
நீகாட்டும் போராட்டம் ஓய்வ தில்லை
வேரோட்டும் பேரால மரமே உன்றன்
விழுதுகளாய் நின்றிருந்து கொள்கை காப்போம்.

**(தந்தை பெரியார் இயற்கை எய்திய செய்தி கேட்டுப் பாடியது 24-12-1974)**

## புத்துலகச் சிற்பி

மூவேந்தர் ஆட்சிசெயச், சங்கத் தோட்டம்
முத்தமிழாம் கனிவளர்க்கப் பெருமி தத்துப்
பாவேந்தர் அறமுரைக்க, உலக மெல்லாம்
பணிந்தேத்தும் வள்ளுவனார் முப்பால் ஓத,
மாவேந்துங் காட்டகத்து மற்றை நாட்டார்
மாக்களென மதியின்றி வாழ்ந்த நாளில்
நாவேந்தும் புகழ்மிகுத்த தமிழர் நாடு
நாகரிகத் தொட்டிலென விளங்கக் கண்டோம்.

வயல்கண்டார், தொழில்கண்டார், வளமை சேர்க்கும்
வழிகண்டார், பகுத்துண்ணும் வகையுங் கண்டார்,
இயல்கண்டார், இசைகண்டார், எழிலார் கூத்தின்
இனங்கண்டார், ஈடில்லாக் கலைகள் கண்டார்,
கயல்கண்டார் அதுபோலக் கடலிற் செல்லக்
கலங்கண்டார் போராட்டக் களமுங் கண்டார்,
செயல்கண்டோர் வியந்தேத்தும் அரசு கண்டார்,
சீர்கண்டார், பேர்கண்டார் தமிழ மாந்தர்.

தப்பொன்றும் அறியாத வெள்ளை யுள்ளத்
தமிழ்மாந்தர் விருந்தோம்பும் பண்பால் இங்கு
முப்புரியர் வரும்போது வருக என்று
முகமலர்ந்து வரவேற்றார் வந்த வஞ்சர்
எப்படியோ வலைவிரித்தார் வீழ்ந்து விட்ட
எம்மினத்தார் தமைமறந்தார் மயங்கி நின்றார்
ஒப்பில்லை எனவுரைக்க வாழ்ந்தி ருந்த
ஒருநாடு திருநாடு வீழ்ந்த தன்றே.

நடமாடும் வழியெல்லாம் நான்கு வேத
நரிக்கூட்டம் ஊளையிட, அறிவை மாய்க்கும்
படுமூட நம்பிக்கை விலங்கு சுற்றப்
பஞ்சாங்க முட்புதர்கள் மொய்த்துக் காணக்
கடுநரகம் சொர்க்கமெனும் மேடு பள்ளம்
கலக்குறுத்தத், தருப்பைஎனும் நெருஞ்சி குற்றத்
தடமேதுந் தெரியாமல் விழியி ரண்டைச்
சமயமெனும் சாதிஎனும் புழுதி மூட,

அறியாமை இருள்பரவத், தடங்கள் தோறும்
ஆயிரமாம் கடவுளெனும் பரல்கள் மேவத்
திருநீறு திருநாமம் என்று கூறும்
சின்னமெனுங் கற்றாழை வளர்ந்து நிற்கத்,
தெரியாத தலையெழுத்து மறுபிறப்பு
தீவினைகள் எனச்சொல்லும் கள்ளி காளான்
நெறியாவும் படர்ந்திருக்கக் காடாய் மாறி
நிழல்பரப்பும் பூஞ்சோலை கெட்ட தந்தோ!

திருமணங்கள், இசையரங்கம், கோவில், இன்னும்
தெளிதமிழில் எழுதிவந்த நூல்கள் எல்லாம்
உருவிழந்து நிலைமாறித் திரிந்து போக,
உட்புகுந்த ஆரியமே ஆட்சி செய்ய,
அறிவிழந்தார் நெறியிழந்தார் வீரம் மிக்க
ஆண்மையொடு தன்மான உணர்விழந்தார்
அரசிழந்தார் குறியிழந்தார் உரிமை கெட்டார்
அடிமைஎனத் தமிழ்மாந்தர் ஆகி விட்டார்.

புகைபடிந்த ஓவியம்போல், சுவர்க ளெலாம்
புழுதியடை மாளிகைபோல், கருமை கொண்ட
முகில்படர்ந்த முழுமதிபோல், அழுக்க டர்ந்து
மூடியஓர் பளிங்கினைப்போல், மண்ணுக் குள்ளே
புகவிழுந்த பொற்சிலைபோல், பனிப டிந்த
பொன்மலர்ப்பூஞ் சோலையைப்போல் தமிழர் நாடு
தகவிழந்து பொலிவுதரும் அழகி ழந்து
தகதகக்கும் ஒளியிழந்து நின்ற தந்தோ!

கல்லடர்ந்து முள்ளடர்ந்து கள்ளி முள்ளி
கற்றாழை மிகவடர்ந்து புதர டர்ந்து
செல்வழிகள் தோன்றாமல் திகைத்து நிற்கச்
சீர்கெட்ட பாதையெலாம் செப்ப னிட்டு
நல்வழிகள் பலஅமைத்துப் புதுமை மிக்க
நாடாக்க வளமாக்க உழைத்த போது
பல்லிடர்கள் உற்றாலும் ஆரி யத்தின்
பாம்பெதிர்த்து வந்தாலும் அயர்ந்தா ரல்லர்.

அஞ்சாத அரியேறு, கொடுஞ்சி றைக்கும்
அடங்காத புலிப்போத்து, வாழ்நாள் எல்லாம்
துஞ்சாத போர்க்களிறு, கொண்ட கொள்கை
துவளாத பெருங்கரடி, எவரை யும்போய்க்
கெஞ்சாத கவரிமான், உழைப்பில் சோம்பிக்
கிடவாத அடலேறு, முதுமை யுற்றும்
எஞ்சாது பாடுபடும் பொழுது துள்ளி
எழிலாகப் பாய்கலைமான் எங்கள் தந்தை.

ஊர்தோறும் பம்பரம்போல் சுற்றிச் சுற்றி
உழைத்துவரும் அந்நாளில் அறியா மாந்தர்
பேர்கூறி வைதார்கள், நடையன், முட்டை
பிறவெல்லாம் எடுத்தெறிந்தார், கூச்சல் போட்டார்
ஊர்கூடிக் குழப்பத்தை விளைத்து மேடை
ஒளிவிளக்கை அறுத்தெறிந்தார், பாம்பை விட்டார்
யார்கூடித் திரண்டெதிர்த்தும் இகழ்ந்து பேசி
யாதுரைத்தும் நம்தலைவர் கலங்க வில்லை.

தேரோட்டி விழவெடுக்குங் கூட்டத் தாரும்
தெருவெல்லாம் கல்வைத்துப் பூசிப் பாரும்
ஏரோட்டி உழைப்பாரும் கற்ற மாந்தர்
எழுத்தாளர் மற்றோரும் விழித்தெ ழுந்தார்
ஈரோட்டுப் பாசறையில் வந்து சேர்ந்தார்
இனவுணர்வும் மொழியுணர்வும் பெற்ற பின்னர்
தார்சூட்டி எடைக்கெடையில் பொருள்கொ டுத்தார்
தலைவரவர் பொருள்புகழால் மயங்க வில்லை.

இகழ்ச்சிக்கும் நம்தலைவர் கலங்க வில்லை
ஏத்தெடுத்த புகழ்ச்சிக்கும் மயங்க வில்லை
மிகச்சிவந்த பகலவன்போல் கடமை யாற்றி
மேற்கொண்ட பணியாற்றி வெற்றி கண்டார்
இகழ்ச்சிக்கும் புகழ்ச்சிக்கும் செவிகள் சாய்த்தால்
இயங்காது பொதுத்தொண்டு, குறிக்கோள் ஒன்றே
அகத்திருக்க வேண்டுமெனும் நெறியைக் காட்டும்
அய்யாபோல் தொண்டாற்ற வல்லார் யாரோ?

எவ்வுணவே என்றாலும் ஏற்றுக் கொள்ளும்,
இரவெனினும் பகலெனினும் தொண்டு செய்யும்,
எவ்வழியில் என்றாலும் பயணஞ் செய்யும்
இருவிழியும் துயிலாது விழித்தி ருக்கும்
செவ்வாயில் பல்லெல்லாம் வீழ்ந்த போதும்
செம்மையுறச் சொல்லலெல்லாம் அவர்நா ஓதும்
ஒவ்வொருகால் நோய்வரினும் எதிர்த்து நிற்கும்
உளம்போல அவருடலும் புரட்சி செய்யும்.

ஏறுங்கால் மேடைதனில் அம்மா அம்மா
என அரற்றுங் குரல்கூடக் குகையில் சிங்கம்
சீறுங்கால் முழங்குவது போலக் கேட்கும்
சேர்ந்துவிட்ட முதுமையிலும் மேடை ஏறிக்
கூறுங்கால் அவர்மொழிகள் கனலைக் கக்கும்
கொழுந்துவிடும் சிந்தனைகள் ஒளியை வீசும்
சேருங்கள் தமிழினத்தீர் சிந்தித் தாய்ந்து
தெளியுங்கள் விழியுங்கள் என்பார் அய்யா.

காரோட்டும் பெருவளிபோல் உலகைப் பற்றும்
காரிருளை ஓட்டுகிற பகல வன்போல்
ஈரோட்டில் வந்துதித்த பெரியார் தாமும்
இனஇழிவைத் தொலைப்பதற்கு நடத்தி வந்த
போராட்டம் எத்தனையோ, அதனால் அய்யா
புகுந்தசிறை எத்தனையோ, அறப்போர் என்றே
பாராட்டும் படிசெய்தார் மனிதர் யாரும்
பழுதுறவோ வன்முறையோ செய்தா ரல்லர்.

பதவிகளில் தமிழர்க்குப் பங்கு வேண்டும்
படிப்பினிலும் அப்படியே உரிமை வேண்டும்
புதுவுலகில் பிற்பட்டோர் வாடல் நன்றோ ?
பொதுமைநிலை சரிசமங்கள் அவர்க்கும் வேண்டும்
இதுதகுதி இதுதிறமை என்று பேசி
ஏய்ப்பவரை எதிர்த்துப்போ ராடி நின்றார்
புதுநிலைமை வளர்பொழுதில் ஆள்வோர் மீண்டும்
புகுத்துகிறார் தகுதிதிறம் வெட்கம் வெட்கம்.

வேதங்கள் புராணங்கள் இதிகா சங்கள்
வேண்டாத சட்டங்கள் இவைகள் எல்லாம்
தீதுங்கள் வாழ்வுக்கென் றெடுத்து ரைத்துத்
தெளிவித்தார் அவற்றைஎலாம் தீயி லிட்டார்
வாதங்கள் பலபுரிந்தார் வெற்றி கண்டார்
வளரறிவுச் சுடரொளியைத் தூண்டி விட்டார்
பேதங்கள் பேதமைகள் தொலைப்ப தற்குப்
பெரும்போர்கள் நடத்திநமைக் காத்த வீரர்.

புலவர்தமைப் பொய்ந்நூலைச் சாடி னாலும்
புலவரெலாம் இவர்பக்கம் பிளவு பொய்ம்மை
மலிசமயக் கொள்கைகளை எதிர்த்த போதும்
மதத்தலைவர் இவர்பக்கம் கடவுட் பொம்மை
கலகலக்க உடைத்தெறிந்த போதும் அந்தக்
கடவுளறும் இவர்பக்கம். ஆரி யத்தை
அலறவைக்கப் போர்தொடுத்து நின்ற போதும்
ஆச்சாரி யாருமிவர் நண்பர் ஆனார்.

சமயத்தின் பொய்ம்மைஎலாம் தொகுத்து வைத்துச்
சமுதாயச் சீர்கேட்டைச் சிந்தித் தாய்ந்தே
இமயத்தின் மேல்நின்று மக்கள் முன்னர்
எடுத்துரைத்த வாதங்கள் கொள்கை எல்லாம்
உமியொத்த மனத்தவரைத் தவிர மற்றோர்
உண்மைஎனத் தெளிந்ததனால் பகைமை யின்றித்
தமையொத்த அய்யாவின் பக்கம் நின்றார்
தந்நலத்தை நாடாத அய்யா வென்றார்.

தீண்டாமை ஒழிப்புப்போர் நடத்திக் காட்டித்
 தீமைகளை முறியடித்த வைக்கம் வீரர்
வேண்டாத பெண்ணடிமை தொலைப்ப தற்கும்
 வீழ்ந்துவிட்ட தமிழினத்தின் விடுத லைக்கும்
ஈண்டையா போர்நடத்தி வெற்றி கண்டார்
 ஈங்கின்றிப் பிறநாட்டிற் பிறந்தி ருந்தால்
ஆண்டுள்ளோர் ஆபிரகாம் லிங்கன் என்பார்
 அறிவுரைத்த சாக்கரடீ சென்று ரைப்பார்.

யாராண்டால் நமக்கென்ன என்றி ருந்த
 எமக்கெல்லாம் உணர்வூட்டி அறிவும் ஊட்டிப்
பாராண்ட தமிழினமே விழித்து நோக்கு!
 பகுத்தறிவால் ஆய்ந்துணர்வாய்! என்ற தந்தை
நூறாண்டுப் பணிவியந்து விழாவெ டுத்தோம்
 நோக்கிஎதிர் வீட்டிலுள்ள ஒருவன் நம்மை
யாராரோ போட்டிவிழா எடுத்தா ரென்றே
 ஏளனங்கள் செய்கின்றான், பேதை மாந்தன்!

வெம்மைமிகும் பாலையைப்போல் தலைவ ருண்டு
 விளைவறியா நெய்தலைப்போல் தலைவ ருண்டு
செம்மறிமேய் முல்லையைப்போல் தலைவ ருண்டு
 சேர்விலங்கு குறிஞ்சியைப்போல் தலைவ ருண்டு
★கொம்மையுறும் உழுபடையால் பிளந்த போதும்
 கொடுமைகண்டு கலங்காமல் பயனே நல்கும்
நன்மருத நிலம்போல உணர்வு தந்து
 நமைஎல்லாம் காக்கின்ற தலைவர் அய்யா.

நாதியற்றுக் கிடந்துழன்ற தமிழி னத்தை
 நானிலத்தில் தலைநிமிரச் செய்த கோவே!
தீதகற்றும் சொன்மலர்கள் தேர்ந்தெ டுத்துச்
 செந்தமிழிற் பாமாலை தொடுத்து வந்து
காதலுற்று நின்னடிக்குச் சூட்டு கின்றோம்
 கைதொழுது வாழ்த்துகின்றோம் எமது நெஞ்சில்
கோதகற்றும் பகுத்தறிவை இன்னும் ஏற்று
 கொடுமைகளை எதிர்க்கின்ற துணிவும் ஊட்டு

★ கொம்மை - திரட்சி

நீதந்த பகுத்தறிவுச் சுடரை ஏந்தி
நிமிர்த்திங்கு நிற்கின்றோம் வீரம் தாங்கிப்
பாதந்த தமிழ்மொழிக்குத் தீங்கு வந்தால்
பாய்ந்தெழுந்து சேர்ந்தெதிர்ப்போம் மானங் காப்போம்
யாதெந்தத் துயர்தரினும் அச்சங் கொள்ளோம்
யாம்எமது திருநாட்டின் உரிமை காப்போம்
பூதந்த தேனுண்ட வண்டே போலப்
புத்துலகப் பாடல்களே பாடி நிற்போம்.

வெண்தாடி வேந்தர் வாழ்க
விறல்மிகு பெரியார் வாழ்க
கண்மூடி வழக்கம் நீங்கிக்
கதிரவன் ஒளியே வாழ்க
தண்ணாரும் தமிழும் நாடும்
தழைத்தினி தென்றும் வாழ்க
பண்பாரும் கழகம் வாழ்க
பகுத்துணர் அறிவே வாழ்க

பெரியார் நூற்றாண்டு விழா,
பெரியார் திடல்,
சென்னை
**16-9-1978**

# இயற்கைப் பெரியார்

அடித்தளத்தில் சிந்தனைகள் கனிவ ளம்போல்
அடர்ந்தடர்ந்து படர்ந்திருக்கும் தோண்டத் தோண்ட
வெடித்தெழும்பும் அறிவெனும்நீர் அறியா மாந்தர்
விளைக்கின்ற தீமைகளைத் தாங்கிக் கொள்ளும்
பிடித்துழுது பிளப்பதுபோல் துயர்தந் தாலும்
பெரும்பயனே நல்குமிவை நிலத்தின் பாங்கு
படித்தறியா அடிமைகளாய்க் கிடந்தார் உய்யப்
பாடுபட்ட பெரியாரும் நிலமே போல்வார்.

ஆரியமாம் பாறையெலாம் சிதறி வீழ
ஆர்ப்பரித்துப் பாய்கின்ற அருவி நீராம்
பாரிலுளார் தாகத்தைத் தீர்த்து வைக்கும்
பகுத்தறிவு சுரந்துவரும் ஊற்றின் நீராம்
சோறுதர வளப்படுத்த ஊர்கள் தோறும்
சுற்றிவரும் வற்றாத ஆற்றின் நீராம்
பேரறிவுச் சிந்தனையின் ஆழங் காணாப்
பெருங்கடலின் நீரெனவும் பெரியார் ஆனார்

வேண்டாத குப்பைகளை அழிப்ப தற்கு
வேண்டுவதும் நெருப்பேயாம் இருட்டைப் போக்கத்
தூண்டுவதும் நெருப்பேயாம் அரிசி தன்னைச்
சோறாக்க உதவுவதும் நெருப்பே யாகும்
தீண்டாமை சாதிமதக் குப்பை மாய்க்கும்
தீயாகிப் பகுத்தறிவுச் சுடரைப் பாய்ச்சும்
தூண்டாத விளக்காகி மாந்த ராகத்
தொழும்பர்தமை ஆக்குகிற நெருப்பும் ஆனார்.

உயர்வானில் சிதறிவிழும் கல்லால் பூமி
உருண்டைக்குப் பழுதின்றிக் காக்கும் காற்று
செயலறியா நம்மினத்தார், ஆரியத்தின்
சிந்தனையில் வெடித்துவிழும் கற்கள் தாக்க
மயாலகி அழியாமல் பெரியார் காத்தார்
மாந்தரெனப் பழுதின்றி வாழச் செய்தார்

புயல்போலச் சினந்தெழுந்து வீசி னாலும்
        பூமணக்கும் தென்றலென இனிமை செய்வார்.

பகலவனும் குளிர்மதியும் விண்ணுக் குண்டு
        பார்ப்பவர்கள் அளந்தறியா அகலம் உண்டு
பகுத்தறிவுப் பகலவனும் ஆய்ந்து தோய்ந்து
        பண்பட்ட கூர்மதியும் அளந்து பார்த்துப்
புகலறியாச் சிந்தனையும் பெரியார்க் குண்டு
        பொலிவுதரும் ★உடுக்கணங்கள் விண்ணுக் குண்டு
புகழ்பரப்பும் தொண்டருடுக் கணம்போற் சுற்றிப்
        பொலிவுதரும் விண்ணாகி விளங்கு கின்றார்.

அனைத்துலக மாந்தெரனும் குமுகா யத்துள்
        அய்யாவும் ஓரணுவே, அணுவின் ஆற்றல்
கனைத்துவரும் ஆரியமாம் நாக சாகி
        கனல்விழுந்த பஞ்சாகிப் பொசுங்க வீழ்த்தும்
மனத்துவளர் மடமையெனும் கோட்டை எல்லாம்
        மண்ணோடு மண்ணாகத் தூள்தூள் ஆக்கும்
இனத்துணர்வைப் பகுத்தறிவை ஆக்கும் ஆற்றல்
        எந்நாளும் அவ்வணுவுள் நிறைந்தி ருக்கும்

திருத்தலங்கள் திருக்கோவில் வேண்டா என்று
        தெரிவித்தார் நம்பெரியார், அவர்தம் பேச்சை
மறுத்துரைக்க இயலவில்லை என்றா லும்நான்
        மறுக்கின்றேன் தன்மான இயக்கத் தார்க்குத்
திருத்தலங்கள் மூன்றுண்டு. நம்மை உய்யச்
        செய்கின்ற வழிகாட்டும் தலங்க ளாகும்
பொறுத்திருந்தால் என்மொழிக்குப் பொருள்வி ளங்கும்
        புனிதமிகு தலங்களென ஏற்றுக் கொள்வீர்.

பாரோடு நம்நாடு சமசமாய் நிற்கப்
        பகுத்தறிவுக் கொள்கைஒளி பரவி நிற்கப்
பேரோடு புகழோடு தமிழி னத்தார்
        பிறரோடு தலைநிமிர்ந்து வாழ்ந்து காட்டப்
பேரேடு பெற்றிலங்கும் தமிழ்மொ ழிக்குப்
        பேரிடர்கள் வாராமல் தடுத்துக் காக்க
ஈரோடு காஞ்சிபுரம் ஆரூர் என்னும்
        இம்மூன்றும் நம்மவர்க்குத் தலங்கள் அன்றோ ?

★ உடுக்கணம் - விண்மீன் கூட்டம்

# இனத் தலைவர்

பெரியாரை நினையாத தமிழன் இல்லை
பேசாத புகழாத நாவும் இல்லை
மரியாதை தமிழனுக்கு வாய்த்த தென்றால்
மாமேதை பெரியாரின் தொண்டே யன்றோ?
சரியாத அப்பெரியார் வாழ்நாள் எல்லாம்
சலியாது தளராது முயலா விட்டால்
நரியாரின் சூழ்ச்சிக்குள் தமிழி னத்தார்
நசுக்குண்டு விழிபிதுங்கி அழிந்து தீர்வர்.

மங்காத புகழ்படைத்த தமிழி னத்தான்
மாற்றானுக் கடிவருடி யாகி விட்டான்
இங்காளும் உரிமையினை அவனுக் கீவேன்
எதிர்த்துவரும் எப்பகையும் துணிந்து சாய்ப்பேன்
★வெங்காயம் தளர்ந்தாலும் ஓய மாட்டேன்
வென்றிடுவேன் என்றெழுந்த பெரியார்போல
இங்காரும் உழைத்ததில்லை வீரம் மிக்க
இனவெழுச்சி வரலாற்றுத் தலைவர் ஆவார்.

★ வெங்காயம் - விரும்பத்தக்க உடம்பு

## தட்டி எழுப்பினார்

தட்டி எழுப்ப வந்தார் - நம்மைத்
தட்டி எழுப்ப வந்தார் - அய்யா
தன்மான எண்ணத்தை வளர்க்க வந்தார்
- தட்டி

பட்டிகள் தொட்டிகள் பட்டண ஊர்களில்
மட்டிகள் போலினும் வாழ்ந்திடும் மாந்தரைத்
- தட்டி

கொண்டித் தொழுவத்தில் கட்டிய மாடெனக்
குப்பையில் மேய்கிற கோழிக ளாமெனச்
சண்டை யிடும்மதச் சாத்திரக் குப்பையில்
சாதியில் கட்டுண்டு சாய்ந்து கிடந்தோரைத்
- தட்டி

அண்டிப் பிழைத்தவர் ஆட்சி பிடித்தனர்
ஆட்சி புரிந்தவர் மாட்சி யிழந்தனர்
மண்டி யிடும்பல தொண்டு புரிந்தனர்
மாயையில் தூங்கினர் கண்கள் திறந்திடத்
- தட்டி

18-6-1979

## உடைத்தெறிந்தார்

உடைத்தார் அறப்போர் தொடுத்தார் - அய்யா
உலகம் எதிர்ப்பினும் ஒருதனி நின்றே
- உடைத்தார்

படைத்தான் அழித்தான் காத்தான் என்றெல்லாம்
படித்தார் உரைத்தார் பழங்கதைச் சடங்கெலாம்
-உடைத்தார்

எத்தனை எத்தனைச் சாதி - அவை
என்றும் நிலைத்திடச் சாத்திர நீதி
பித்தரைப் போலினும் ஓதி - வரும்
பீடைகள் கேடுகள் யாவையும் மோதி
- உடைத்தார்

கற்பனை பற்பல கூவிப் - பல
கட்டுக் கதைகளை மெய்யெனத் தூவி
விற்பனை செய்தனர் பாவி - அந்த
வெற்றுரை யாவையும் செற்றிடத் தாவி
- உடைத்தார்

18-6-1979

## தண்டூன்றும் பெரியார்

தன்டூன்றிப் பெரியார் நடந்தார் - இங்குத்
தமிழ்மாந்தர் தடுமாறித் தாழ்வுக்குள் வீழாமல்
- தண்டு

தொண்டுகிழம் கொண்டாலும் துவளாமல் நின்றார்
தொண்டடிமை செய்தவர்கள் தோள்நிமிர்ந்து வென்றார்
- தண்டு

உயர்ந்தவர் தாழ்ந்தவர் பிறப்பினில் ஓதும்
ஒருசிலர் வாழ்வினை உயர்த்திடும் வேதம்
தயங்குதல் இன்றிஅம் மாயையை வீழ்த்திடத்
தமிழக மாந்தரைத் தட்டியெ ழுப்பிடத்
- தண்டு

சாத்திரக் கோத்திரச் சண்டைகள் நாளும்
சாதிகள் மோதிட மண்டைகள் வீழும்
ஆர்த்தெழும் அய்யாவின் போர்க்குரல் சூழ
அக்குரல் கேட்டதும் ஆரியம் வீழத்
- தண்டு

19-6-79

# சங்கே முழங்கு

சங்கே முழங்கு - வெற்றிச்
சங்கே முழங்கு - முச்
சங்கம் வளர்த்ததமிழ் எங்கும் தழைக்கவெனச்
-சங்கே

எங்கே வரும்படைகள் ? எங்கே வரும்தடைகள் ?
இங்கே புகும்பகைகள் எல்லாமே தூளென்று
- சங்கே

எங்கோ இருந்தவர்கள் இங்கே புகுந்தவர்கள்
இம்மா நிலத்துமொழி இரண்டாம் நிலைக்குவர
வெங்கோல் செலுத்துவதை ★நுங்கா திருப்பதுவோ ?
வெங்களம் கண்டுவரும் வேங்கைகள் யாமென்று
- சங்கே

மூடத் தனத்தைவிடு சாடக் களத்திலெழு
மூத்துப் பழுத்தமொழி காத்துப் புரந்திடென
ஆடிக் களங்கண்ட தாடிக் கிழப்பெரியர்
அய்யா உரைத்தமொழி மெய்யே எனப்புகலச்
- சங்கே

20-6-1979

★ நுங்காது - அழிக்காது

# ஆதவன்

நினைஆதவன் என்று நினையாதவன் - ஒன்றும்
புரியாதவன் கண்கள் திறவாதன் - அய்யா
- நினை

மண்மேவும் அறியாமை இருள்யாவும் தொலைக்கும்
மதிமேவும் ஒளிபாயும் செயல்யாவும் விளைக்கும்
- நினை

ஆண்டவர் யார்உரிமை பூண்டவர் யாரென
அறியாமல் நினையாமல் அசையா திருந்தோம்
மூண்டெழும் போர்மறவன் போலெழுந் தார்த்தனை
முன்னைவர் யாமெனும் உரிமையைச் சேர்த்தனை
- நினை

கண்மூடி வழக்கங்கள் கடவுளர் விளக்கங்கள்
கதைகூறும் மயக்கங்கள் கயமையின் குழப்பங்கள்
மண்மூடிப் போகட்டும் மடமைகள் சாகட்டும்
மதிமேவி வாழட்டும் எனக்கூறி மார்தட்டும்
- நினை

20-6-1979

# வெண்தாடி வேந்தர்

வெண்தாடி வேந்தரைப் பாரீர் - செய்த
விந்தைகள் யாவையும் பாடுவம் வாரீர்
- வெண்தாடி

கண்மூடிப் பழக்கங்கள் மண்மூடிப் போகக்
காலமெல் லாம்உழைத்து மேனியெல்லாம் பழுத்த
- வெண்தாடி

பண்ணுயர் தமிழும் பாங்குயர் இனமும்
பாரினில் மேம்படப் போர்பல தொடுத்தார்
கண்ணொளி குறைந்தும் கால்நடை தளர்ந்தும்
கலங்காமல் தன்னலங் கருதாமல் உழைத்தார்
- வெண்தாடி

செந்தழல் மேனி சிந்தனை ஞானி
சிங்கம்போல் முழக்கம் சீரிய பழக்கம்
வெந்துயர் தாக்கினும் வீணர்கள் தூற்றினும்
வெஞ்சிறை யேகினும் அஞ்சில ராகிய
- வெண்தாடி

சிக்கனக் காரர் செலவிட ஒவ்வார்
சேர்த்தவை எல்லாம் யார்க்கெனத் தந்தார்?
மக்களுக் கென்றே மனத்தினிற் கொண்டார்
தொகுத்தார் வகுத்தார் கொடுத்தார் அந்த
- வெண்தாடி

பகலிலும் இரவிலும் பயணம் செய்வார்
பனிமழை பாரார் பசியெனச் சோரார்
இகலது சாய இழிவுகள் மாய
எதிர்ப்பார் அறப்போர் தொடுப்பார் அந்த
- வெண்தாடி

ஆதரவின்றி அண்டிய பிள்ளை
அத்தனைப் பேருக்கும் அவர்தாம் தந்தை
ஓதிய கொள்கை மோதுதல் அன்றி
ஒருதனி மனிதரைப் பகைத்ததும் இல்லை
- வெண்தாடி

தண்டின் துணையால் தளர்நடை நடந்தும்
தரைதனில் நடந்திட இயலா திருந்தும்
தொண்டின் பணியில் துவளா திருந்தார்
தொழுவோம் அவர்பணி தொடர்வோம் எங்கள்
- வெண்தாடி

21-6-1979

# போராட்ட வீரர்

போராட்டக் களங்கண்ட வீரர் - பாரில்
பொதுவான சமுதாய அறங்கண்ட சூரர்
- போராட்டக்

ஈரோட்டுத் தலந்தந்த பிள்ளை - எங்கள்
எழுச்சிக்கும் தன்மான உணர்ச்சிக்கும் தந்தை
வேரோட்ட முடியாமல் வேதக் - கொள்கை
வீணாகி மண்மீது பாழாகிச் சாயப்
- போராட்டக்

தீண்டாமை பின்னின் றிழுக்கும் - மாந்தர்
தெருவுக்குள் நடமாட முடியாத வைக்கம்
ஆண்டோடி நேராகச் சென்றார் - சாதி
ஆணவப் போருக்குள் போராடி வென்றார்
- போராட்டக்

தேசியம் என்றிங்குக் கூறி - இந்தி
தேவையென் றோதினர் ஆட்சியில் ஏறிப்
பேசிய வாதத்தைக் கொன்றார் - இந்தி
பின்னிட்டுச் சென்றோடக் களமொன்று கண்டார்
- போராட்டக்

கலைகற்க உண்டிங்குச் சாதி - நின்று
கைகட்டிப் பணிசெய்ய உண்டிங்குச் சாதி
நிலைமுற்றும் அடியோடு மாறிக் - கல்வி
நீரெங்கும் பாய்ந்தோடக் களங்கண்டார் மோதிப்
- போராட்டக்

கற்பனைக் கோட்டைக்குள் சாமி - பொய்கள்
கட்டிக் கதைக்கப் படித்த ஆசாமி
விற்பனைப் பாட்டுக்குள் பூமி - கெட்டு
வீழாமற் காத்தவர் ஈ.வே.ரா.சாமி
- போராட்டக்

வேத புராணங்கள் கோடி - மக்கள்
வீரத்தை மானத்தை மூடினர் பாடி
யாதென்று காரணம் நாடி - வீரம்
யாவையும் மீட்டவர் வெண்ணிறத் தாடி

- போராட்டக்

ஏடாண்ட பொய்யைப் படித்து - வாழ்வில்
ஏமாளி யாகினர் நாட்டைக்கொ டுத்து
பீடாண்டு வந்தவழி மாந்தர், - பாழும்
பேதைத் தனத்தைப் பிடித்துத் தடுக்கப்

- போராட்டக்

நாடாண்டு வந்த தமிழ் மகனே - நீயோ
நாணிக் குனிந்துடலம் கூனிக் கிடந்தாய்
கூடாண்டு வந்தபுலி மறவா - முரசம்
கொட்டடா கொட்டடா என்றுகளங் கண்டார்

- போராட்டக்

21-6-1979

## பகலோன் வாழ்க

பகலோன் வாழ்க பகலோன் வாழ்க
பகுத்தறி வுக்கதிர் பாய்ச்சி விளக்கிடும்

- பகலோன்

புகுமிருள் கலங்கிடப் புத்தொளி துலங்கிடப்
புன்மைகள் தொலைந்திடப் பொருள்களை விளக்கிடும்

- பகலோன்

பொய்யெது மெய்யெது புரியா திருந்தோம்
பொருளெது மருளெது கருதா திருந்தோம்
அயலெது நமதெது தெரியா திருந்தோம்
அறிவொடு விழிகளை அழகுற மலர்த்திய

- பகலோன்

கற்பனைக் கூண்டினுள் கண்ணயர்ந் திருந்தோம்
கலகல ஒலியொடு சிறகடித் தெழுந்தோம்
பற்பல பணிகளில் பரிவுடன் புகுந்தோம்
பழுதறத் துயிலெழப் புதுமுறுக் கேற்றிய

- பகலோன்

22-6-1979

## தொண்டுக்கிலக்கணங்கண்டவர்

தொண்டுக் கிலக்கணங் கண்டவர் பெரியார்
தொடர்ந்ததன் இலக்கியம் ஆகவும் உரியார்
- தொண்டு

கண்டதை ஏசியும் கல்லினை வீசியும்
கண்டவர் தாக்கினும் கொண்டது பேசித்
- தொண்டு

குளித்திடப் பன்னீர் கொடுத்திடும் செழிப்பால்
கோமான் அவரென யாவரும் அழைப்பர்
குளித்திட எனினோ முகம்மிகச் சுழிப்பார்
குளிக்குமந் நேரமும் பணியிடைக் கழிப்பார்
- தொண்டு

புகழ்ந்திடும் தோழர் போற்றின ராயினும்
பொருளென அவற்றை மதித்துளம் மயங்கார்
இகழ்ந்திடும் மாந்தர் தூற்றின ராயினும்
இருசெவி வழங்கார் எள்முனை கலங்கார்
- தொண்டு

மலர்பல தூவிய பஞ்சணை மேவிய
மதிதவழ் மாளிகைத் துயில்வளம் படைத்தார்
அலைந்திடும் ஆண்டிகள் போலதை விடுத்தே
அல்லும் பகலும் அயரா துழைத்தார்
- தொண்டு

பகலிலும் உழைப்பார் இரவிலும் விழிப்பார்
பகுத்தறி வுச்சுடர் எழுத்தினில் படைப்பார்
மிகுமிள வேனிலும் குளிர்பனி நாளிலும்
மிடுக்குடன் பொதுப்பணி யாற்றிட நடப்பார்
- தொண்டு

இளையவர் எனினும் இனியன உரைப்பார்
எதிரிக ளாயினும் கனிவுடன் அழைப்பார்
இளமையை இழந்தும் முதுமையை அடைந்தும்
இளையார் பணியிடைக் களையார் பெரியார்
- தொண்டு

பிறவியில் தலைவர் பெரும்பொருள் வணிகர்
பேணிய புகழுக் குரியார் எனினும்
துறவிகள் போலொரு தோற்றமும் உடையார்
துளிசெருக் கடையார் அடக்கமும் உடையார்
- தொண்டு

23-6-1979

# இன்றைய நாடு

அயில்வேலும் உடைவாளும் உண்டான நாடு - இன்று
அயலார்கள் அரசாளச் சரிபோடும் நாடு
- அயில்

வயல்யாவும் கயல்பாயும் புனல்சூழும் நாடு
வயிறார உணவார இயலாத நாடு
மயிலாடும் குயில்பாடும் வளமான நாடு
மனம்நோகத் தெருவோரம் குடிவாழும் நாடு
- அயில்

தலையான நெறிகண்டு புகழோடு நின்றோர்
தன்மானங் கெடும்போதும் உணராத நாடு
தலைநாளில் மொழிமூன்று வகையாகி நின்றும்
தமிழாலே இசைபாடத் தெரியாத நாடு
- அயில்

கதையாகக் கனவாக எதையேனும் சொல்வார்
காணாத உலகாள வழியோதிச் செல்வார்
பொதுவாகும் பொருள்யாவும் எனுமாறு நாடிப்
புதுவாழ்வு நனவாக முயலாத நாடு
- அயில்

அரங்கேறும் மொழியாளர் பொழிவார்கள் சொல்லை
ஆனாலும் அவர்வாழ்வில் தொடர்பேதும் இல்லை
நிறமாறும் பச்சோந்தி மரபாளர் சொல்லில்
நினைகின்ற பயனேதும் விளைவாவ தில்லை
- அயில்

அயலாரும் துணிவோடு சதிராடு கின்றார்
அறிவாளர் திறம்யாவும் விழலாக நின்றார்
மயலோட மதிவாழ ஒருநாளும் எண்ணார்
வழியேதும் தெரியாத விழியாத கண்ணார்
- அயில்

புயலாகப் புகைசூழும் பொழுதாதல் கண்டும்
புழுவாக இனம் வீழும் நிலையாவுங் கண்டும்
செயல்காணத் துணிவேதும் உருவான துண்டா?
சிறிதேனும் உணராமல் சிலையாக நின்றார்
- அயில்

பெரியாரும் அறிவாளர் பலபேரும் வந்து.
பெரும்பாடு பட்டாலும் உருவான தென்ன?
அறியாமை இருள்மூழ்கித் தடுமாறு கின்றார்
அணுவேனும் நகராமல் மரமாகி நின்றார்
- அயில்

24-6-1979

## ஒன்றா இரண்டா?

ஒன்றா இரண்டா எடுத்துச் சொல்ல - அய்யா
உழைத்தவை யாவையும் தொடுத்துச்சொல்ல - செய்கை
- ஒன்றா

வெயிலா மழையா நடந்து செல்வார் - நாம்
விழித்திடத் தமிழினம் பிழைத்திடச் செய்த - தொண்டு
- ஒன்றா

சென்றால் இருந்தால் நம் நினைவு - கண்
சிறிதே அயர்ந்தால் நம் கனவு - கனவு
- ஒன்றா

நினைவும் கனவும் எவர்க்காக - போர்
நெஞ்சினில் பொங்குதல் நமக்காகப் - போர்
- ஒன்றா

நின்குலம் தழைத்திடத் தமிழ்மகனே - நீ
நிலைத்திடத் துடித்தெழு! நின்கடனே
உயிரும் உடலும் நிலைத்தவையோ? - என்றும்
உழைப்பாய் நின்னினம் உயர்ந்திடவே
உயர்ந்திடவே உயர்ந்திடவே

25-6-79

## எப்படிப் பெரியார் வாழ்வார்?

பெரியார் எப்படி வாழ்வார் - நம்
பேச்சும் செயலும் பிளவுபட் டிருந்தால்
- பெரியார்

சரியா தவறா சடங்குகள் என்றே
அறியா திருந்தால் அறிவையும் மறந்தால்
- பெரியார்

சாதியும் மதமும் சரிப்பட வில்லை
சமுதா யந்தான் உருப்பட வில்லை
மோதிய பகையோ சாய்ந்திட வில்லை
மூடமும் இங்கே மாய்ந்திட வில்லை
- பெரியார்

சிந்தை செய்கெனச் செப்பினர் அன்றோ?
சிறிதும் நும்செவி புகுந்ததும் உண்டோ?
மந்தைகள் போலினும் வாழ்வது நன்றோ?
மாந்தர்கள் எனநீர் மாறுவ தென்றோ?
- பெரியார்

6-12-1982

## பல்லாண்டு பல்லாண்டு

பொருளுயர்ந்த அரசியலில் முதலி, பேச்சில்
பொடிவைத்து நகைசெய்யுங் கலைஞன், நெஞ்சில்
அருளுயர்ந்த பண்பாட்டில் அய்யன், ஆடை
அணிஆடம் பரந்தன்னில் செட்டி, பேசும்
விரிவுரையால் உளங்கவரும் கள்ளன் என்றும்
வெல்கின்ற அறப்போரில் மறவன், கேடு
தருகின்ற பழிமொழியை நாடான், எங்கள்
தமிழ்த்தாயின் புகழ்காக்கும் வீரப் பிள்ளை.

ஒருநாளும் பெரியார்சொல் தட்டான்,என்றும்
உயர்தமிழில் நீங்காத பத்தன், நன்மை
உருவாகும் செயலொன்றே பார்ப்பான், பேச்சில்
உவமைசொலும் நாவிதனாய் நிற்பான், ஆட்சி
புரிமாந்தர் அடக்குமுறைக் குடையான், நல்ல
புதுமைக்கும் பழமைக்கும் இடையன் அந்தத்
திருவாளன் நம்மவர்க்கு ★நாய்க்கன், அன்பைச்
செழிப்பிக்கும் வேளான் எங்கள் அண்ணா.

நன்மகனாம் பிள்ளையிவன் வாழ்நா ளெல்லாம்
நாட்டுக்கே பணிசெய்ய ஈன்ற தாயின்
பொன்வயிற்றை மணிவயிற்றை வாழ்த்து கின்றேன்
பூதலத்து மாந்தரெலாம் அண்ணா அண்ணா
என்னுமொரு உறவுமுறை சொல்லும் வண்ணம்
இந்நாட்டுத் துரையிவனே என்னும் வண்ணம்
முன்னுணர்ந்து பெயர்வைத்த திருவாய் தன்னை
முக்காலும் வாழ்த்துகின்றேன் வாழ்க என்றே.

துரையென்றால் அரசனெனப் பொருளு ரைப்பர்
சொற்புகழ்சேர் திராவிடநா டவற்குச் சொந்தம்
துரையிவற்குத் தலைநகர்தான் காஞ்சி யாகும்
துணைநலமாம் பட்டத்து ராணி யுண்டு
முறைவகுக்கும் நெடுஞ்செழியன் கொள்கை குன்றா
முடியரசன் தென்னரசு போல்வா ரிங்குத்
திறைசெலுத்தும் சிற்றரசர், எழுதுங் கோலே
செங்கோலாம் எழுத்தெல்லாம் படையின் கூட்டம்

★ நாய்க்கன் - தலைவன்

வெல்லரிய படைவரிசை யுடைய வேந்தன்
        வீற்றிருக்கும் அரியணைதான் தமிழர் நெஞ்சம்
நல்லறிஞன் இவனாட்சி பெருகக் கண்ட
        நாவிரண்டு கொண்டவர்கள் அழுக்கா றுற்றுப்
புல்லியசொற் கணைதொடுத்தும் அஞ்சா நெஞ்சன்
        புன்முறுவல் செய்துவகை வென்று நின்றான்
சொல்லரசன் இவன்பெயரை வாழ்த்தி நிற்போம்
        தூயபுகழ் மாலைபல சூட்டி நிற்போம்

நாட்டுக்குப் பெருமைதரும் வீரன் ஆனான்
        நாகரிக அரசியலின் தலைவ னானான்
பாட்டுக்குப் பொருளானான் பகைசேர் நெஞ்சும்
        பாராட்டும் பண்புடைய நல்லோன் ஆனான்
கேட்டுக்கு வித்தாகும் மடமை என்னும்
        கிளர்பகைக்குப் போராடும் எதிரியானான்
ஏட்டுக்குள் ளடங்காத புகழின் மிக்கான்
        எம்மவர்க்கோர் உறவானான் அரணும் ஆனான்.

எழுத்தினிக்கும், பேச்சினிக்கும், எண்ண மெல்லாம்
        இனித்திருக்கும், முத்தமிழும் வல்லான் றன்பால்
பழுத்திருக்கும் நடிப்பினிக்கும், கழகம் காக்கும்
        பண்பினிக்கும் அரசியலின் திறமினிக்கும்
பழித்திருக்கும் கயவரையும் பொறுத்தி ருக்கும்
        பாங்குயர்ந்த சிறப்பினிக்கும், மேலோன் றன்னை
வழுத்துகிறேன் வாழ்த்துகிறேன் தமிழும் நாடும்
        வாழ்வதற்கே பல்லாண்டு கூறு கின்றேன்.

## காஞ்சிக் கதிரவன்

அடிமைஎனும் இருளகற்ற வந்த காஞ்சி
அறிஞனொரு செம்பரிதி, உரிமை பூத்துப்
படிவளரத் தமிழ்மாரி பொழியும் வானம்,
பரவிவரும் தம்பியராம் உடுக்க ணங்கள்
தொடருமொரு முழுத்திங்கள், மூடச் செய்கை
தூரோடு சாய்ந்துவிழக் கடிது வீசிப்
படருமொரு புயற்காற்று, வறியர் வாழ்வில்
படர்துடைத்து நலம்பயக்குந் தென்றற் காற்று.

குற்றால மலைமுகடும் நாணும் வண்ணம்
கொட்டுகிற சொல்லருவி, எங்கள் அண்ணா
வற்றாத கலையூற்று, கோலார் போல
வளமான சிந்தனைகள் நிறைசு ரங்கம்,
கற்றோரின் நூல்களெல்லாம் தேக்கி வைத்துக்
காக்கின்ற அணைக்கட்டு, முகில்ப டர்ந்து
பற்றாத முழுமதிசேர் நீல வானம்,
பண்பாறு பாய்கின்ற கடலும் ஆவான்.

திருவெண்காட் டின்னிசையும், சொக்க வைக்கும்
சீர்த்திருவா வடுதுறையின் மிடுக்குஞ் சேர்ந்தே
உருவங்காட் டுங்காரு குறிச்சி மன்னன்
ஊதிவந்த நாதசுரம் ; மதங்கொண்டோடும்

பொருவெண்கோட் டானைதனை அடக்கி வந்த
புலியனைய உதயணன்பால் இருந்த நல்யாழ் ;
மருவுங்காட் டானிரைகள் மயங்கி நிற்க
வாயூதும் ஆயன்கைக் குழலும் ஆவான்.

அரசியலில் நடிப்பறியான், ஆனால் நல்ல
அரசியலின் நடப்பறிவான், நீண்ட காலம்
பரவுதமிழ் நாடிதனைப் பற்றி நின்ற
பழிதீர்ப்பான், பழிதீர்த்துக் கொள்ள மாட்டான்
உரமுடையன் நயம்விஞ்சும் சொல்லே சொல்வான்
ஒருநாளும் நயவஞ்சம் பேச மாட்டான்
உருவமதிற் சிறுமையினைப் பெற்ற தன்றி
உள்ளமதிற் பெருமையையே பெற்று நின்றான்.

பகுத்தறிவுப் பெருங்கடலுள் முளைத்து வந்த
பகலவனை, அறியாமை இருட்க ணத்தைச்
செகுத்தொழிக்கும் பரிதிதனை, துயிலை நீக்கச்
சிவந்தெழுந்த சூரியனை, அரசி யல்வான்
தகதகக்கப் பண்பொளியைப் பாய்ச்சி எங்கள்
தமிழ்செழிக்கக் கிளர்ந்தெழுந்த செஞ்ஞா யிற்றை
உகப்புடனே தமிழரினம் மலர்ந்து தோன்ற
உதித்தெழுந்த கதிரவனை வாழ்த்து கின்றேன்.

# தமிழ்காத்த தலைவர்

செப்பும் மொழிபதி னெட்டுடையாள் என்றாலும்
ஒப்புமனச் சிந்தனை ஒன்றுடையாள் பாரதத்தாய்
என்றுரைத்தான் என்பாட்டன், ஏற்புடைய அக்கருத்தை
ஒன்றுபடும் ஆற்றை உணரா வடபுலத்தார்
செப்புமொழி ஒன்றென்றார் சிந்தனைகள் நூறாகத்
தப்புவழி மேற்கொண்டார், தக்கார் பலர்கூடிச்
செந்தமிழ்க்குத் தீங்கு சிறிதும் வரஒவ்வோம்
இந்திக்குத் தென்னாட்டில் என்றும் இடமில்லை
ஒற்றுமைக்குத் தீமை உருவாக்க எண்ணாதீர்
பற்றுமக்குத் தாய்மொழியில் பாரித் திருப்பதுபோல்
எங்களுக்கும் தாய்மொழியில் ஈடில்லாப் பற்றுண்டு
பொங்கும் மொழியுணர்வைப் புல்லென் றிகழாதீர்
என்றெல்லாம் கூறி இடித்துரைத்தும் கேளாராய்த்
தென்றல் உலவுந் திருநாட்டில் இந்தியினை
வன்பில் திணித்தார் வடபுலத்து வாழ்மாந்தர்
அன்போ டுரைத்தும் அவர்செவியில் ஏறவில்லை
நம்மை அடிமையென நாடாள்வோர் எண்ணியதால்
வெம்மை வழியை விழைந்து திணித்தார்கள்
பாரில் குடியரசுப் பண்பை எடுத்தெடுத்துக்
கூறிப் பயனில்லை, கூடார் எனமாறிக்
கொண்டதே கொள்கையெனக் கொட்டம் அடிக்கின்றார்
கண்டும் பொறுத்திருந்தால் காலம் நமைப்பழிக்கும்
போர்க்கோலம் பூணுங்கள் போற்றுங்கள் தாய்மொழியை
யார்க்கும் அடிமையலோம் ஆளப் பிறந்தவர்நாம்
கொன்று குவித்தாலும் கூட்டில் அடைத்தாலும்
நின்றமரில் தோளை நிமிர்த்துங்கள் என்றெல்லாம்
ஆர்ப்பாட்டப் ★ போர்ப்பாட்டை அண்ணன் முழங்கிஒரு
போர்ப்பாட்டை கண்டு புறங்கண்டார் இந்தியினை ;
செந்தமிழ் நாடாளச் செங்கோல் தனையேந்த
வந்ததும் நம்தமிழ் வாழ வழிசெய்தார்.
எம்முடைய நாட்டில் இருமொழி போதுமென
மும்மொழிக் கொள்கை முறிய வழிசெய்தார்
செந்தமிழைக் காத்துச் சிறந்த தலைமகனைப்
பைந்தமிழிற் பாடிப் பரவுவதே நம்கடமை
நாம்வாழ வந்தவனை நல்லவனை வாழ்த்திடுவோம்
தேன்பாயும் தீந்தமிழைச் சேர்த்து

★ போர்ப்பாட்டை - போர் நெறி

## புரட்சித் தலைவன்

தாழ்ந்திருக்குந் தமிழகமே உன்னை யிங்குத்
 தாழ்வுபடச் செய்தவரார்? செய்தார் தம்மை
வீழ்ந்துபடச் செய்திடுவேன் வெற்றி கொள்வேன்
 வீரமிக்க தோளுண்டு மீண்டும் உன்னை
வாழ்ந்திருக்கச் செய்திடுவேன் உன்னைக் காக்க
 வாழ்வெல்லாம் ஈந்திருப்பேன் என்று கூறி,
ஆழ்ந்ததுயில் கொண்டிருந்தோர் எழுச்சி கொள்ள
 ஆர்ப்பரித்துப் புரட்சிவழி காட்டி நின்றான்.

போர்முரசம் ஆர்த்திடுவான் முழக்கம் கேட்டுப்
 பொங்கிஎழும் மறப்புலியின் கூட்டங் காண்பான்,
பார்மருள உயிரெடுக்கும் மறப்போர் அன்று
 பரிந்துரும துயிர்கொடுக்கும் அறப்போர் என்பான்
ஓர்முறைதான் உயிர்போகும் போவ தென்றால்
 உமதுதிரு நாட்டுக்கே போக்கு தற்கு
யார் வருவீர்? என்றழைப்பான், வந்தார் தம்மை
 அறிஞனவன் அறநெறியில் அழைத்துச் செல்வான்

கொலைக்குணத்து மாந்தரையும் வயப்ப டுத்தும்
 கூரறிவுப் பேச்சாளன், எழுத்தின் வேந்தன்,
கலைத்துறையில் நிகரில்லா நடிப்பில் வல்லான்,
 கருத்துவளங் கொழிக்கின்ற சுரங்கம் போல்வான்,
நிலைப்படுத்த அரசியலை ஆய்ந்த மேதை,
 நீள்புகழின் முகட்டுமிசை நின்ற போதும்
தலைக்கனத்தை அவனிடத்துக் கண்ட தில்லை
 தன்னடக்க நெறிகாட்டி உயர்ந்து நின்றான்.

கிழமைமிகு பெரியாரின் கழகம் சேர்ந்து
கிளைத்துயர உழைத்தான்பின் பிரிந்த போதும்
கழகமதை அழித்துவிடக் கருத வில்லை
கண்டபடி ஏசவில்லை. ஈதி ரட்டைக்
குழல்மருவு துப்பாக்கி என்றே சொன்னான்
குணமென்னுங் குன்றேறி நின்றா னன்றோ?
அழகுமிகு முன்னேற்றக் கழகங் கண்டான்
ஆர்ப்பரிப்புச் செய்யவில்லை பணியே செய்தான்.

உடனிருந்து வளர்ந்தோர்தாம் பிரிந்து சென்றே
உளம்நோகப் பழித்தாலும் பழிக்க மாட்டான்
இடுபழியே தொழிலாகக் கொண்டு வாழ்வார்
இன்னாமை செய்தாலும் அவர்தாம் நாண
இடனறிந்து புகழ்ந்துரைப்பான் அதனால் அந்த
எதிரிகளும் மனந்திரிந்து மதிக்க லானார்
கடமையினைப் புரிந்திருந்தான் கட்டுப் பாட்டைக்
காத்திருந்தான் கன்னியமாம் வாழ்வும் பெற்றான்.

## தமிழ்நாட்டுப் பேரரண்

அறிவுடைய மாந்தரெலாம் அறிஞர் ஆகார்
அளப்பிலநூல் பயின்றவரும் அறிஞர் ஆகார்
நெறியொழுகி, அருள்சுரந்து, மக்கட் பண்பு
நிறைந்திருந்து, பிறர்துயரம் துடைத்து, நல்ல
குறியுடைய வாழ்வுநெறி மலரத் தம்மைக்
கொடுப்பவரே அறிஞராவர், அனைத்துங் கூடி
அறிஞரெனும் சொல்லுக்கே உரிய ரானார்
அண்ணாஎன் றழைப்பதற்கும் உரிய ரானார்.

குறளுக்கும் மூன்றெழுத்தே அண்ணா என்னும்
குளிர்மொழிக்கும் மூன்றெழுத்தே உலகம் போற்றும்
குறள்வகுக்கும் பால்மூன்றே அண்ணா சொன்ன
கோட்பாடும் ஒருமூன்றே நுவலும் பாட்டின்
உருவுக்கும் போர்குறளே அண்ணா கொண்ட
உருவமதும் குறளேயாம், அதனால் அண்ணா
குறளுக்கு நிகராவார், மேலும் வாழ்வு
கூறுகிற குறளுக்குப் பொருளும் ஆவார்.

பாவேந்தன் பாட்டுக்கோர் அரணாய் நின்றார்
பைந்தமிழ்ப்பண் பாட்டுக்கும் அரணாய் நின்றார்
நாவேந்தர் கோவேந்தர் கூடிக் காத்த
நாட்டுக்கும் அரணானார் நமது நெஞ்சப்
பூவேந்தும் நம்அண்ணா தமிழ்மொ ழிக்குப்
பொலிவுதரும் அரணானார் தமிழி னத்தார்
தாழ்வேந்திப் போகாமல் காத்து நிற்கும்
சரித்திரத்தின் பேரரணாய் விளங்கு கின்றார்.

தனித்தனியே பிரிந்தவர்க்கும் கூடு நர்க்கும்
தலைமகனாம் இம்மன்னன் காத லூட்டிக்
கனிச்சுவையை விஞ்சுதமிழ் அமுதம் பெய்து
களிப்பூட்டும் நிறைமதியன் ஆவான் கண்டீர்
அனிச்சமலர் மென்மையினை மனத்திற் கொண்ட
அம்மதியை ★ஓரிரவிர் கண்டாற் போதும்
தனிச்சுவடு பதித்தமையை உணர்ந்து கொள்வர்
தமதுள்ளம் உடலுயிர்கள் உருகி நிற்பர்.

★ ஓரிரவு - அவரெழுதிய நாடகம்

மறைமலையும் பாரதியும் திரு.வி.க.வும்
மானமுள்ள புலவர்களும் விதைத்து வைத்த
நிறைவிதைகள் முளைத்தெழுந்து பசுமை கண்டு
நின்றிருந்த தமிழ்ப்பயிர்கள், இந்தி என்னும்
உறைவெயிலின் வெம்மையினால் வாடுங் காலை,
உழவருளங் களிப்பெய்த வந்த காஞ்சிப்
பெருமுகிலை ஈரோட்டுப் ★பொருப்பில் தோய்ந்து
பெய்ம்மழையைத் தமிழ்மொழியால் வாழ்த்தி நிற்போம்

கலைமலர்கள் பலபூத்துக் கொத்துக் கொத்தாய்க்
கண்குளிர மனங்குளிரக் காட்சி நல்கும்
பலவகைய புகழ்மணக்கும் கனிகள் நல்கும்
பாடிவரும் தம்பியராம் தும்பி கட்கு
நலமருவும் அறிவுத்தேன் சொரிந்து நிற்கும்
நாவசைய மொழித்தென்றல் உலவி நிற்கும்
உலகிலுளார் இன்பமுறக் குளிர்ச்சி நல்கும்
உயர்சோலை காஞ்சியிலே வளர்ந்த தம்மா!

அம்மலர்சூழ் சோலையில்தேன் பருகி நாளும்
ஆயிரம்பல் லாயிரமாய்ப் பாடிப் பாடித்
தும்பிபல பறத்திங்கு வளர்ந்த துண்டு
தும்பிகளால் மகரந்தப் பொடிபரந்தே
அம்புவியில் பலமலர்கள் பூக்கக் கண்டோம்
அவற்றிலுறு நறுமணங்கள் பரவிச் சென்று
மொய்ம்புடைய கோட்டை எலாம் மணக்கக் கண்டோம்
மொய்த்திருந்து மக்களெல்லாம் வியக்கக் கண்டோம்.

பகையென்றும் நட்பென்றும் பாரா வண்ணம்
பழிவாங்கும் சிற்றறிவு சேரா வண்ணம்
நகைமொழியால் மாற்றலரை ஈர்க்கும் வண்ணம்
நாகரிக அரசியலை நடத்திக் காட்டி
மிகுபுகழால் உயர்ந்தானை, எளியர் வாழ்வு
மேலோங்கச் செய்தானை, எங்கள் எட்டுத்
தொகைமொழியில் தோய்ந்தானை, பண்பு காக்கும்
அரணாகிச் சூழ்ந்தானைத் தொழுது நிற்போம்

★ பொருப்பு - மலை

# எழுத்தும் பேச்சும்

முழுத்தாளில் எதைஎதையோ எழுதி விட்டு
முற்போக்கு மறுமலர்ச்சி என்று சொல்லி
எழுத்தாளர் உலகத்தில் சிலபேர் கூடி
ஏடெல்லாம் குப்பையென மாற்றி விட்டார்
குழுத்தோற்று நாணும்வணம் எழுதிக் காட்டிக்
கூரறிவுச் சுடர்வேல்போல் எழுத்தை மாற்றி
எழுத்தாளர் உலகத்தை வென்று நின்றான்
இவன்நடையை எழுத்தாளர் தொடர லானார்.

பரலோகக் கதைகளையே படைத்துக் காட்டிப்
பாடலொடு நடிக்கின்ற திரைப்ப டங்கள்
உரமேறிப் பரவிவரும் அந்த நாளில்
ஓரிரவு நம்அண்ணன் விழித்தி ருந்தான்
தரமான திரைப்படங்கள் உலவக் கண்டோம்
தன்மான வுணர்ச்சிமிக வளரக் கண்டோம்
அறிவாளன் கலையுலகம் புகுந்தான் அங்கும்
அவன்வெற்றித் திலகந்தான் பெற்றுக் கொண்டான்.

பொருள்பெறவும் புகழ்பெறவும் நடிக்க வில்லை
புகைப்படங்கள் எடுப்பதற்கும் நடிக்க வில்லை
இருள்செறியும் தமிழகத்தைத் தமிழினத்தை
எழுச்சிபெறச் செய்தவற்கே நடித்து வந்தான்
சுருள்குழலார் மயங்குவதற்கு நடிக்கவில்லை
சோர்தமிழர் மயக்கத்தை அகற்று தற்கே
அருளுடையான் நாடகங்கள் எழுதிக் காட்டி
அழகுறவே நடிப்பதற்கும் கற்றுத் தந்தான்.

நாடாண்ட இனத்தவன்நீ, உலகில் மூத்த
நாகரிகத் தமிழ்மொழிக்குச் சொந்தக் காரன்
ஏடாண்ட இலக்கியநூல் ஆயி ரங்கள்
ஈங்குண்டு சான்றாக எடுத்துப் பார் நீ!
கேடாண்ட நரிக்குணத்தர் சூழ்ச்சி யாலே
கீழானாய்! விழித்தெழு நீ! மானம் எங்கே?
★பேடாண்ட பிறப்பா நீ? என்று பாடம்
கற்பித்த பேராசான் எங்கள் அண்ணன்.

சாதி என்றும் சமயமென்றும் மேல்கீழ் என்றும்
சமனிலைக்கெட் டடிமையென வாழுங் காலை
ஆதியில்இங் கில்லாத கருத்தை மாய்க்க
அறிவென்னும் படைதாங்கிப் போர்தொ டுத்து,
மோதவரும் பகைஎதிர்த்து, வெற்றி கண்டு
முன்னேற்றப் பாதைதனில் மக்கள் செல்ல
ஓதிவந்த பகுத்தறிவுப் பேச்சால் அன்பால்
ஊட்டிவிட்ட இனவுணர்வால் எழுச்சி பெற்றோம்.

★ பேடாண்ட பிறப்பு - பேடி

## கழகம் வென்றது

அண்ணா அண்ணா அருஞ்சிறைக் கொட்டிலுள்
நண்ணும் நுமக்கோர் நற்செய்தி கூறுவென்
கழகம் வென்றது கதிரொளி பரந்தது
தொழுதனர் மாந்தர் தூயவர் வாழ்த்தினர்
காசும் பணமும் காவற் படையும்
ஏசும் பேச்சும் இவையே துணையென
நின்றனர் எதிரில் நெடுநாள் ஆள்வோர்
இடர்பல ஏற்பினும் தொடர்பணி புரிவோர்
உடலும் உயிரும் உழைப்பும் துணையெனப்
படைபோல் அணிவகுத் துடனெதிர் நின்றனர்
கொல்வினைப் போக்கினர் சில்லரை நோக்கினர்
சல்லியர் கூடிச் சாடினர் நம்மை
அய்யஓ சுமத்தினர் அடாப்பழி ஆயினும்
செய்ம்முறை பிழைத்திலர் செந்தமிழ்த் தொண்டர்
கழகம் வென்றது கதிரொளி பரந்தது
காற்றிற் சாய்வோர் கண்டதை மேய்வோர்
தூற்றித் திரிவதே தொழிலெனக் கொண்டோர்
கோப்பை ஒன்றே குடிபுகும் உலகென
மோப்பம் பிடிப்போர் முகங்கவிழ்ந் தேகினர்
வஞ்சகர் எத்துணை வாய்ப்பறை சாற்றினும்
செஞ்சுடர் வளர்ச்சியைச் சிதைப்பதும் ஒல்லுமோ ?
கோநகர் தன்னில் மாநகர் மன்றில்
வாகை சூடி வளர்ந்தது கழகம்
அரியென முழங்கி எரியெனச் சொற்போர்

புரியும் வீரன் போரினில் தீரன்
உரியநம் தம்பி உழைப்பால் உயர்ந்தோன்
கருணா நிதியவன் காத்தனன் மானம்
★கறங்கெனச் சுழலும் கழகத் தோழர்
பறந்துபறந் தாற்றிடும் அயராப் பணியினர்
துட்ட .விலங்குகள் உட்புக விடாது
வட்டந் தோறும் வட்டமிட் டுலவினர்
போர்க்களம் புகுந்தனர் புரிந்தனர் அறப்போர்
சேர்த்தனர் வெற்றி ஆர்த்தனர் வீரர்
சென்னை மாந்தரை முன்னணி வீரரைச்
சென்னி தாழ்த்தி வாழ்த்துவென் யானே
அண்ணா அண்ணா வாழ்த்துக அண்ணா
நண்ணார் நமக்கிலை நாடுநம் குறிக்கோள்
மாநகர் நலம்பெற மாநக ராட்சியை
ஏந்துக கழகம் என்றுநும் நாவால்
வாழ்த்துக அண்ணா வாழ்த்துக பெரிதே.

**(மாநகராட்சித் தேர்தலில் கழகம் வென்ற போது பாடியது)**

★ கறங்கு - காற்றாடி

## அரசு நாட்டினான்

அரசு நாட்டினான் - சிறையில்
அண்ணன் நாட்டினான்
விரைவில் நாட்டிலும் - நமது
அரசு நாட்டுவான்

முரசம் ஆர்த்தது - வெற்றி
முரசம் ஆர்த்தது
பரசி வாழ்த்துவோம் - அண்ணன்
படையை வாழ்த்துவோம்

பகைகள் நீங்கவே - நல்ல
பான்மை ஓங்கவே
குகையின் வேங்கைகாள் - ஒன்று
கூடு வீர்களே

பகைகள் மிஞ்சுமோ - நமது
படைகள் கொஞ்சமோ!
புகையும் நெஞ்சிலே - கனல்
பொங்கி விஞ்சுமே

உடலும் ஒன்றுதான் - பெற்ற
உயிரும் ஒன்றுதான்
அடிமை போகவே - போரில்
அவற்றை ஈகுவோம்

கடமை ஆற்றுவோம் - நாடு
காவல் போற்றுவோம்
உடைமை திராவிடம் - என்றே
உலகில் சாற்றுவோம்

வாழ்க தாயகம் - என்றும்
வாழ்க திராவிடம்
வாழ்க வாழ்கவே - அண்ணன்
வாழ்க வாழ்கவே

**(1962 சூலை 19-இல் அஃக விலை உயர்வை எதிர்த்து மறியல் செய்தமைக்காகச் சிறைப்படுத்தப்பட்ட அறிஞர் அண்ணா, வேலூர் சிறையில் தமது பிறந்த நாளையொட்டி அரசங் கன்று நாட்டினார். அதன் நினைவாகப் பாடப்பட்டது இப்பாட்டு)**

## தலைவா வருக!

அகிலம் போற்றும் அறிஞனே வாவாவா
அண்ணன் என்னும் உறவினாய் வாவாவா
பகைவர்க் கிரங்கும் பண்பினாய் வாவாவா
பணிவும் துணிவும் நிறைந்துளாய் வாவாவா
குகையில் வாழும் சிங்கமே வாவாவா
கொடுமை கண்டு பொங்குவாய் வாவாவா
நகைமி குந்த முகத்தினாய் வாவாவா
நன்மை வாழும் அகத்தினாய் வாவாவா

சிறையின் மீளும் வீரனே வாவாவா
சிந்தை வாழும் தீரனே வாவாவா
திருவி டத்தின் தலைவனே வாவாவா
சேனை கண்டு மகிழவே வாவாவா
உரிமை காக்கும் படைஞனே வாவாவா
உள்ளங் கவரும் கலைஞனே வாவாவா
பெருமை சேர்க்கும் நாவினாய் வாவாவா
பேணும் நாட்டை மீட்கவே வாவாவா

அருளைப் பொழியும் விழியினாய் வாவாவா
அறமுரைக்கும் மொழியினாய் வாவாவா
மருளொ ழிக்கும் மதியினாய் வாவாவா
மடமை போக்கும் வலியினாய் வாவாவா
கருணை காக்கும் நெஞ்சினாய் வாவாவா
கடமை போற்ற அஞ்சிலாய் வாவாவா
இருள்த விர்க்கும் உதயமே வாவாவா
எதையும் தாங்கும் இதயமே வாவாவா

**(1962 சூலை 19-இல் அஃக விலை உயர்வை எதிர்த்து மறியல் செய்ததமையால் சிறைப்படுத்தப்பட்டு, 24-10-62இல் விடுதலை பெற்ற அறிஞர் அண்ணா அவர்களுக்கு வரவு கூறும் முறையில் பாடப்பட்டது)**

## காக்குங் கைகள்

சங்கத்தால் தமிழ்வளர்த்த மதுரை மூதூர்த்
தண்பதியில் பெரும்புலவர் கூடி நின்ற
சங்கத்தில் ஒருதலைவர் எழுந்து நின்று,
தகுதியிலா இழிமொழிகள் கூறி, நெஞ்சம்
பொங்கத்தான் பழித்துரைத்தார்; அதனைக் கேட்டும்
பொறுமைக்குப் புகலிடமாய் விளங்கும் அண்ணன்
தங்கத்தின் பெருங்குணத்தான் சினக்க வில்லை
தமிழ்நெஞ்சிற் பண்பொன்றே விளங்கக் கண்டேன்.

பழித்துரைத்த தலைவருளம் நோகும் வண்ணம்
பதிலுரைக்க விரும்பவில்லை ; ஒருசொல் லேனும்
இழித்துரைக்க எடுத்தெழுத முயல வில்லை ;
எவரிடத்துங் காணாத உயர்ந்த வுள்ளம்
பழுத்திருப்போன், அத்தலைவர் நாட்டுக் காகப்
பாடுபட்ட வீரத்தைத் தியாகப் போக்கை
எழுத்தினிக்க எழுதியதற் பண்பைக் காக்க
எழுந்தஎழிற் கையெங்கள் அண்ணா கையே.

தென்னவர்தம் நெஞ்சமெலாம் சோலை யாக்கித்
தித்திக்குங் குரலெழுப்பிக் குயிலாய்ப் பாடி
மன்னரெனக் கவியுலகில் விளங்கி வந்த
மாகவிஞர் ஏறனையார் கவிதைக் கையால்
கன்னல்நிகர் மொழியானை அண்ணன் தன்னைக்
கடுமொழிகள் சிறுமொழிகள் வரைந்தாரேனும்
முன்னவர்தம் கவிதைக்கு வலிமை கூட்டி
முத்தமிழைக் காக்குங்கை அண்ணா கையே.

என்னுயிரை இருவிழியைத் தாயின் மேலாம்
எழில்மொழியை நான்வணங்குந் தெய்வந் தன்னை
இன்னமுத இலக்கணத்தின் பிறப்பி டத்தை
இலக்கியத்தின் பேரூற்றைத் தொன்மை கண்ட
தென்னவர்தம் தாய்மொழியைத் தமிழை யிங்குத்
தீய்க்கவரும் மொழிப்பகையைத் தடுத்துக் காத்துப்
பன்னலமும் கனிந்துதமிழ் கொழிக்கச் செய்யப்
பாடுபடும் கைஎங்கள் அண்ணா கையே.

பகையுளத்து மாந்தரையும் அன்பு காட்டிப்
        பண்படுத்தி அரவணைத்துக் காக்கும் கைகள்
மிகையடுத்துக் கூறவில்லை, தமிழர் நாட்டின்
        மேலான மானத்தைக் காக்கும் கைகள்
பகைஎடுத்தே எவர்வரினும் சீறி நின்று
        பாரதமாம் இந்நாட்டைக் காக்கும் கைகள்
தொகையெடுத்த திட்டங்கள் தீட்டி நாட்டில்
        தோன்றுதுயர் துடைத்துநலம் காக்கும் கைகள்

ஈரமிலா நெஞ்சத்தார் இட்ட தீயால்
        ஏங்குகிற எளியவரைக் காக்கும் கைகள்
நேரமெலாம் தந்நலமே பேணிக் காத்த
        நெறியாளர் ஆட்சியிலே காணா நம்மை
சேரவொரு நெறிமுறையைச் செய்து நாடு
        செழுமையுறப் படியளந்து காக்கும் கைகள்
வீரமெலாம் ஒருவிரலில் காட்டும் அண்ணா
        விழிப்போடு செங்கோன்மை காக்கும் கைகள்.

## தாய்மொழிக் காவலர்

நற்றலைவர் ஓரமைச்சர் யானோ இந்த
நாடறிந்த முடியரசன், அமைச்சர் முன்னே
உற்றரசன் பாடுவது புதுமை யன்றோ!
உண்மையினில் குடியாட்சி மதிக்கும் பண்பு
பெற்றமையால் இப்புதுமை காணு கின்றோம்
பெருமைமிகு ★தி.மு.க. தலைமை ஏற்க
மற்றதொரு பேரரசு வணங்கி நிற்க
மாறிவரும் காலத்தைப் படைத்து விட்டோம்.

தமிழ்மொழியின் தவமகனை, நாடு காக்கும்
தலைமகனைத் தனிமகனைக் காஞ்சி தந்த
அமிழ்தனைய பெருமகனைப் புகழ்ந்து பாட
அறியாத நாவென்ன நாவே! கண்ணின்
இமையனையான் மெய்ப்புகழைக் கேட்டு வக்க
இயலாத செவியென்ன செவியே! அன்பால்
தமையனெனும் அவன்வந்து பிறந்த ஞான்றே
தமிழ்சிறந்து தனிப்பெருமை கொள்ளக் கண்டோம்.

கற்கண்டோ சர்க்கரையோ கரும்பின் பாகோ
கனிபிழிந்து வடித்தெடுத்த இனிய சாறோ
சொற்கொண்டல் பொழிமழையோ கவிஞன் தந்த
சுவைமிக்க அணிமிக்க கவிதை தானோ
முற்கண்ட யாழ்தந்த சுவையோ என்ன
முத்தமிழின் நடையழகை எழுதிக் காட்டிக்
கற்கஒரு பரம்பரையைத் தோற்று வித்துக்
கனிமொழிக்குத் தமிழ்மொழிக்கோர் புதுமை செய்தான்.

நஞ்சுமிழும் பாம்பினையும் மயங்க வைத்து
நடம்பயிலச் செய்கின்ற மகுடி தானோ
நெஞ்சமெலாம் வயப்படுத்திக் களிப்பில் ஆழ்த்தும்
நெடுங்குழலாம் நாதசுரக் கருவி தானோ
கொஞ்சுதமிழ் மாமழையோ அருவிக் கூட்டம்
கூடியதோ ஆற்றொழுக்கோ எனவி யந்து
வஞ்சகரும் மறைந்திருந்து நயந்து கேட்டு
வாய்மலரும் அவன்பேச்சைப் புகழ்ந்து ரைப்பர்.

★ தி.மு.க. - திருவாரூர் மு.கருணாநிதி

எதுகையுடன் மோனையெலாம் எழுந்தெ ழுந்தே
எக்காளம் இட்டுநடம் புரியும் பேச்சு,
புதுமையுடன் பழமையினைப் பிணைத்து வைத்துப்
பொலிவூட்டிப் புத்துலகைப் படைத்துக் காட்டும்
பொதுமைமிகுங் கருத்தலைகள் ஊறி ஊறிப்
பொங்கிவரும் பேரூற்றை நினைவிற் கூட்டும்
இதுவரையில் பேச்சரங்கம் காணா ஒன்றை
இவன்பேச்சிற் கண்டெழிலைப் பெற்ற தன்றோ!

மிகப்பெரிய பேச்சாளர் பேசும் போதும்
மேவிடுவோர் தொகைமுன்பு நூற்றை எட்டும்
அகத்தொளிரும் நம்தலைவன் பேச்சைக் கேட்க
ஆயிரம்பல் லாயிரமாய்க் கூடக் கண்டோம்
நகைச்சுவையும் மதித்தெளிவும் வீரப் பாங்கும்
நாடகமாய் இலக்கியமாய்க் கலந்து தோன்றும்
பகைச்சுமையைத் தாங்கிகளும் தனித்தி ருந்து
பாராட்டும் தமிழ்ப்பேச்சின் திறந்தான் என்னே!

எழுத்துலகில் பேச்சுலகில் தாய்மொ ழிக்கோர்
எல்லையிலாத் தனிமிடுக்கைப் படைத்து விட்டான்,
முழுத்திறமை கொண்டவன்றன் மொழித்தி றத்தால்
முத்தமிழ்க்கோர் பரம்பரையைத் தோற்று வித்தான்
வழுக்கிவிழும் விகடநடை கொச்சைப் பேச்சு
வம்பர்தருங் கலப்புநடை எங்கே? எங்கே?
அழுக்ககலச் செய்துவிட்டான் திருப்பு மையம்
ஆகிநின்று தாய்மொழிக்குக் காவல் செய்தான்.

வடபுலத்து வெறிமனத்தர் கூடி நின்று
வளர்மொழியாம் தமிழ்மொழிக்கு மாறாய் இங்குப்
படபடத்த ஒலிஎழுப்பும் இந்தி தன்னைப்
பரப்புதற்கு, வஞ்சகத்தால் புகுத்து தற்குப்
படமெடுத்த பாம்பெனவே முனைந்து விட்டார்
பதைத்தெழுந்து நம்அண்ணன் தமிழர் நாட்டுள்
விடமறுத்தான் படையெடுத்தான் போர்தொ டுத்தான்
வீரத்தால் தாய்மொழிக்குக் காவல் செய்தான்

செந்தமிழைக் காக்குமொரு கொள்கை பூண்டு
சீறிவரும் மறக்குலத்தின் எழுச்சி கண்டோம்
உந்துகளில் தமிழ்எழுதும் கைகள் கண்டோம்
ஓர்ந்துணரின் இவற்றுக்குப் பின்னே நிற்ப
தெந்தஉரு ? காஞ்சிநகர் உருவம் அன்றோ ?
ஏந்தலவன் ஊட்டி விடும் உணர்ச்சி யன்றோ ?
எந்தவிதம் நோக்கினுமே அவன்றன் செய்கை
இனியதமிழ் காக்கின்ற செயலே ஆகும்.

பெற்றெடுத்த தாய்நாட்டைத் தமிழ்நா டென்று
பேர்சொல்ல வைத்தவன்யார் ? வாய்மை வெல்லும்
பெற்றிமைக்குக் கோட்டைமுகம் சான்று சொல்லும்
பெரியார்முன் உந்திவிட்ட இந்திப் போரில்
உற்றமுதற் படைத்தலைவன் இவனே யன்றோ ?
ஓயாமல் அன்றுமுதல் இன்று காறும்
பற்றகத்துக் கொண்டுமொழிப் போரில் நிற்போன்
பைந்தமிழ்க்குக் காவலனாய் விளங்கக் கண்டோம்.

பெரியாரே எனக்கென்றும் தலைவ ராவார்
பிறிதொருவர் தலைவரெனக் கொள்ளேன் என்றே
அறிவாளன் நம்அண்ணன் உறுதி பூண்டான்
அத்தலைவர் தமிழ்மொழியைப் பழித்த போதும்
சரியான மறுப்புரைக்கத் தவற வில்லை
தாய்மொழிக்குக் காவலன் தான் அய்யம் இல்லை
விரிவான உலகெங்குந் தமிழ்ம ணக்க
விழைகின்றான் அதற்குரிய செயலும் செய்தான்.

சட்டங்கள் பிறகலைகள் தமிழில் ஆக்கத்
தலைப்படுங்கால் மனம்பொறுக்கா உளுத்துப் போன
விட்டங்கள் ஏதோதோ உளறிக் கொட்டும்
வெற்றுரைக்குச் செவிசாய்க்கா வண்ணம் நல்ல
திட்டங்கள் பலதீட்டித் தமிழ்வ ளர்க்கும்
தீரனவன் தாய்மொழியைத் தாழ்த்திப் பேசிப்
பட்டங்கள் பெற்றவரும் திருந்தி வந்து
பைந்தமிழைப் போற்றிடவே செய்த நல்லோன்.

புரியுமொழி புரியுமொழி எனப்பு லம்பிப்
புன்மொழிகள் பலகலந்து பேசு வோர்தம்
திரிபுடைய மனப்போக்கை மாற்றி விட்டான்
தெளிவுடைய தமிழ்மொழியா புரிய வில்லை ?
தெரியவிலை உமக்கென்றால் மனத்தின் குற்றம்
தெள்ளுதமிழ்த் தாய்மொழியின் குற்ற மன்று
உரிமையினை மறந்தமையால், அடிமை நெஞ்சம்
உற்றமையால் உமதுமொழி விளங்க வில்லை.

இன்றதுதான் புரியவிலை என்றால் நாளை
எளிதாகப் புரிந்துவிடும் உங்கள் மக்கள்
நன்றெனவே புரிந்திடுவர் ஆத லால்நீர்
நலங்கெடுத்துப் பிறமொழிச்சொல் கலத்தல் வேண்டா
என்றுமுயர் தனிமொழியைக் குழப்பி விட்டால்
இளைஞரெலாம் இகழ்வரென இடித்துக் கூறி
நன்றுணரும் பேரறிஞன் தாய்மொ ழிக்கு
நலங்காக்குங் காவலனாய் விளங்கு கின்றான்.

சாவென்றால் ஒருமுறைதான் நம்மைச் சாரும்
சாய்ந்தபினர் மறுமுறையும் உயிரை யிங்கு
வாவென்றால் வாராது, போகும் அந்த
வறியவுயிர் தாய்மொழியைக் காப்ப தற்கே
தாவென்றால் தந்திடுவேன் தயக்கங் கொள்ளேன்
தமிழ்நாடு தனைக்காப்பேன் என்று ரைத்த
நாவென்றான் வாய்மொழியை நினைந்து பார்க்கும்
நாளெல்லாம் உடல்சிலிர்க்கும் உயர்சி லிர்க்கும்.

செந்தமிழ்க்குத் தீங்கென்றால் அரசி ருக்கை
சிறிதெமக்குப் பெரிதன்று தாய்மொ ழிக்கு
நொந்திருக்கும் நிலைவந்தால் பொறுக்க மாட்டோம்
நொடிப்பொழுதில் துச்சமென உதறி விட்டு
வந்திருப்போம் போர்தொடுப்போம் தமிழ்மொ ழிக்கு
வாழ்வுதரச் சிறைபுகுதத் தயங்க கில்லோம்
வெந்துயர்க்கும் அஞ்சகிலோம் வாழ்வும் சாவும்
விளையாட்டென் றெண்ணிடுவோம் பகைமு டிப்போம்.

என்றெழுந்து சூளுரைத்த அண்ணா எங்கள்
எழில்மொழிக்குக் காவலனாய் விளங்கக் கண்டோம்
இன்றெழுந்த மொழிப்போரில் இவனை விட்டால்
எமதுமொழி காப்பதற்கோர் தலைவ னில்லை
ஒன்றுணர்ந்து சொல்கின்றேன் தமிழைக் காக்க
உறுகழகம் ஈதன்றி வேறொன் றில்லை
துன்றிஎழும் கழகத்தைக் காப்ப தற்கும்
தூயஒரு தமிழன்றி மற்றொன் றில்லை.

பேரரசு வளர்ந்துவரும் ஒற்று மைக்குப்
பிழைசெய்ய இந்தியினைத் திணித்தால் மக்கள்
போர்முரசு கொட்டிடுவர் குருதி சிந்தப்
பொங்கிடுவர் தமிழ்மாந்தர் சினந்தெ ழுந்தால்
சாரரசு சடசடெனச் சரிந்த தைப்போல்
சாய்ந்தொழியும் ஆணவத்தார் ஆட்சி யெல்லாம்
பேரரசு செயநினைத்தால் புகுந்து பார்ப்போம்
பொன்றுவதும் யாரென்று துணிந்து பார்ப்போம்.

செப்புமொழி பதினெட்டுக் கொண்டாள் அன்னை
சிந்தனைதான் ஒன்றுடையாள் என்று சொன்ன
ஒப்பரிய பாரதியின் மொழியைக் கூட
ஒழிப்பதற்கோ முனைகின்றீர்? இந்தி என்று
செப்புமொழி ஒன்றாக்கி, அறிவு கெட்டுச்
சிந்தனையைப் பலவாக்கி, வெறிய ராகித்
தப்புவினை புரிகின்றீர்! தேயம் உங்கள்
தனியுடைமை யன்றுபொது வுடைமை யாகும்.

தாய்மொழியாம் தமிழ்மொழியே முரசம் ஆகத்
தமிழகத்துப் பண்பாடு கவசம் ஆக
ஆய்முறைசேர் அறிவுபடைக் கலமே யாக
அறிநெறியே வழிகாட்டும் துணையே யாகக்
கூய்வருமோர் மொழிப்போரில் தலைமை தாங்கிக்
கொடுமைகளைச் சாய்த்தொழிக்க எங்கள் அண்ணா
தாய்வருமோர் காவலனாய் விளங்கக் கண்டோம்
தலைவணங்கிப் பாடுதும்யாம் வாழ்க என்றே.

அண்ணா 59 ஆவது பிறந்த நாள் விழா
சென்னை.
**17-9-1967**

## காக்குந் தொழில் வல்லான்

சிந்திக்க மாட்டாமல் சீரிழந்து நிற்கின்ற
முந்தைத் தமிழ்நாட்டில் மொய்த்துத் துயர்ப்படுத்தும்
கண்மூடிக் கோட்பாட்டைக் கட்டோடு சுட்டெரித்து
மண்மூடிப் போக மறைத்துத் தொடர்த்திங்கு
நல்ல அறிவூட்ட நாட்டை வளமாக்கத்
தொல்லை இருளகற்றத் தோன்றும் சுடரிரண்டு
ஒற்றைச் சுடர்தோன்றும் ஊரதுதான் ஈரோடு
மற்றைச் சுடர்தோன்றி வாழிடமோ காஞ்சிநகர்
தோன்றும் ஒருசுடர்க்குத் தொண்ணூறு மேவிவரும்
ஆன்றதொரு செஞ்சுடர்க் காறுபத்து தாவிவரும்
ஈரோட்டில் தோன்றுசுடர் எந்நாளும் ஓய்வின்றிப்
போராட்டஞ் செய்துவரும் பொன்றா நெருப்பாகும்.
காஞ்சிச் சுடரோ கனலாது காய்ந்துமன
வாஞ்சைக் கதிரால் வளர்ந்துவரும் ஞாயிறது
ஞாயிறு போற்றுதும் ஞாயிறு போற்றுதும்
மாயிரு ஞாலம் வளமுடன் வாழ்ந்திட
ஞாயிறு போற்றுதும் ஞாயிறு போற்றுதும்
ஆயிரம் ஆயிரம் ஆண்டுகள் போற்றுதும்
எண்ணும் மனத்தில் இனித்திருக்கும் நல்லவனாம்
அண்ணன் புகழ்சொல்ல ஆயிரம் நாவேண்டும்
பொன்றாப் புகழ்மணக்கும் புண்ணியன் நற்குணங்கள்
ஒன்றா இரண்டா ஒருபொழுதில் பாடுதற்கு?
தோற்றுவித்த கட்சி துவளாமல் காத்துவந்த
ஆற்றலுக்கு நேர்சொல்ல ஆளொருவர் ஈங்கில்லை
காளையரைக் கொண்ட கழகம் வளர்ந்துவிடின்
நாளைநிலை என்னாகும் நாடே அவர்வயமாம்
என்றஞ்சிப் பேரரசை ஏற்றிருந்த நல்லோர்கள்
அன்று தடைச்சட்டம் ஆக்கி விடுத்தார்கள்
போயிற்றுப் போயிற்றுப் பூண்டோடு போயிற்று
வாயற்றுப் போயிற்று வாயேது கட்சிக்கென்
றார்ப்பரித்து நின்றார் அரசியல் சோதிடர்கள்
போர்ப்பயிற்சி நன்கு புரிந்திருக்கும் நம்அண்ணன்

தாக்கவந்த சட்டம் தலைதூக்க மாட்டாமல்
ஆக்கிவைத்த ஆற்றல் அறிவுளார் போற்றுகின்றார்
குட்டிக் கலகங்கள் கோள்மூட்டல் அங்குமிங்கும்
எட்டிப் பிடித்தே இறுகமுடி போடல்என
நாளெல்லாம் ஆடிவரும் நாரதர்கள் கூடிஒரு
கேளல்லார் தம்அணைப்பில் கேடு விளைத்தார்கள்.
பேசா தனபேசிப் பேயாட்டம் ஆடிவந்தார்
ஏசா தனவெல்லாம் ஏசி எழுதிவந்தார்
கூடிக் களிங்குங்கால் கோமான் புகழொன்றே
பாடிப் பிழைத்தவர்கள், பண்பாளன் கால்களையே
ஓடிப்பிடித்தவர்கள் ஊர் ஊராச் சென்றுபல
சாடிப் பழித்தார்கள் சாகும் கழகமென
ஆடிக் களித்தார்கள் ஆகாத கூட்டுறவைத்
தேடிப் பிடித்தார்கள் தேய்பிறைபோ லானார்கள்
சட்டமென வந்த தடையாம் புறப்பகையால்
எட்டுணையுங் கேடின்றி ஏற்றமிகு நம்அறிஞன்
காத்த கழகத்தைக் காழ்ப்பு மிகுதியினால்
வாய்த்த அகப்பகைதான் வாடிடச் செய்திடுமோ
என்றஞ்சித் தொண்டரெலாம் ஏங்கி யிருக்குங்கால்
நன்றெண்ணிச் செய்தான் நயவஞ்சப் போக்கெல்லாம்
சென்றொழியச் செய்தான் சிறுமைப் பகையனைத்தும்
வென்றுமலர் வாகை விறல்மாலை சூடிநின்றான்
ஆண்டுபல வாக அரசிருக்கை வீற்றிருந்தே
ஆண்டிருந்தோர் தம்மை அசைப்பதற்கு யாருமிலர்
என்ற செருக்காலே எக்காள மிட்டவர்கள்
நின்று தடுமாறி நெடுமூச்சு வாங்கவைத்தான்
நாகம் படர்ந்திருக்கும் நச்சுப் பெருமரத்தை
வேகப் புயலாகி வேரோடு சாய்த்துவிட்டான்
சாடும் புயலாகிச் சங்காரம் செய்தபினர்ப்
பாடுமிளந் தென்றலெனப் பாராண்டு நிற்கின்றான்
மக்கள் நலங்காத்து மாநிலத்தார் நெஞ்சமெலாம்
புக்கிருந்து வாழ்ந்து பொலியும் உயிராகி,
மாந்தர் உயிரானால் மன்னுயிர்கள் அத்தனையும்
ஏந்தும் உடலாகி ஈடின்றி ஆள்கின்றான்
காக்குந் தொழில்வல்லான் காட்டும் நெறிகடத்தல்
யார்க்கும் நலமென்பேன் யான்.

29-9-1968

# ஆழம் அறியா அன்புள்ளம்

சிந்தனையால் நாவலத்தால் செய்யஎழுத் தாற்றலினால்
இந்தத் திருநாட்டின் ஏறனைய நல்லிளைஞர்
நெஞ்சங் கவர்ந்தான் நிலையான தம்பியராக்
கொஞ்சி அணைத்துக் குலவி மகிழ்கின்றான்
உய்தற் குரியவழி ஓதிவந்த நம்தலைவர்
செய்த்ற் கரியனவே செய்துயர்ந்த நம்பெரியார்,
தந்திரத்தில் வல்ல தகுதியுள முதறிஞர்,
செந்தமிழில் வல்லார், சிவனடியார், மற்றவரும்
அண்ணனுக்கு மூத்தோர் அறிவாளர் ஆனாலும்
தண்ணளியன் முன்னிலையில் தம்பிய ராகிவிட்டார்
அண்ணாநம் அண்ணாஎன் றப்பெரியர் வாயார
அண்ணாவைச் சொல்லி அழைத்ததை நாமறிவோம்.
பேச்சாளர் என்று பெயர் சொல்லி மேடைகளில்
ஏச்சாள ராகி இழிமொழிகள் கட்டுரைத்துப்
பேசிவரும் பித்துடையார் பேச்செல்லாம், நெஞ்சத்து
வீசுகிற வேலாகி மேலோரைப் புண்படுத்தும்
நாடாளும் நம்தலைவன் நாவடைத்துப் பேசுங்கால்
கூடாரைக் கூடக் குலவிவரப் பண்படுத்தும்
வெல்லரிய சொல்வல்லான் வெற்றி தரும்எழுத்தில்
நல்லதொரு முத்திரையை நாட்டிப் புகழ்பெற்றான்
செந்தமிழில் மிக்கபுலம் சேர்ந்ததுபோல் ஆங்கிலத்தும்
வந்த புலமுடையான் வாகைத் திறமுடையான்
நான் பிறந்த பொன்னாட்டை நல்லதமிழ் நாடென்று
தேன்போல் இனிக்கப்பேர் செய்தானை வாழ்த்துகின்றேன்
என்னுள் கொலுவிருந் தேற்றம் தருபவட்குக்
கண்ணுள் கருமணிக்குக் காவியத் தாய்மொழிக்கு
மாநாடு கூட்டி மலர்சூட்டிப் பாரெல்லாம்
தான்நாடச் செய்தானைத் தாள்பணிந்து போற்றுகின்றேன்
மற்றோர் வளர்ச்சியினால் தன்வளர்ச்சி மாறுமெனச்
சற்றேனும் எண்ணாமல் தன்னாற்றல் நம்புமவன்

சார்ந்தாரை வாழ்வித்துத் தன்போல் வளர்த்துவிடத்
தேர்ந்தானைப் பல்லாண்டு வாழ்கவெனச் செப்புகின்றேன்
கற்றுணர்ந்த நல்லோர்பால் காணுந் திறமையினை
உற்றுணர்ந்து போற்றிவரும் உள்ளத்தை வாழ்த்துகின்றேன்
பேராற்றல் வாய்ந்த பேராயக் கட்சியினைப்
போராட்டத் தேர்தலிலே பொன்றிவிழச் செய்திடினும்
வெற்றிக் களிசிறிதும் வேண்டாப் பெருந்தன்மை
உற்றதொரு நற்பண்பை உள்ளூறிப் பாடுகின்றேன்
தொண்டரெலாம் தம்பியராத் தோள்தந்து காக்குமுளம்
கொண்டொழுகும் அன்புளத்தைக் கோடிமுறை வாழ்த்துகின்றேன்
தந்தை பெரியாரும் தந்நலத்தை நாடிகளும்
தந்த வசைமொழிகள் தாங்கும் இதயத்தை
அண்ணன் குடும்பத்தை ஆணவத்தார் கூறிவந்த
புன்மொழிகள் யாவும் பொறுத்திருக்கும் நெஞ்சுரத்தைக்
கோடி முறைசொல்லிக் கோவில்கட்டிக் கும்பிட்டுப்
பாடி முடித்தாலும் பாட்டில் அடங்காது
நேரு பெருமகனார் நீண்ட ஒருசொல்லைக்
கூற மனந்துணிந்தார், கொற்றமிகு காளையர்கள்
சீறி எழுந்தார்கள், சிந்தனையில் செந்தமிழில்
ஊறிவரும் நெஞ்சத்தான் ஒன்றுரைத்தான் தம்பியர்க்கு
நம்மிற் பெரியவர் தாம் நம்மைப் பழித்துரைத்தார்
விம்மாதீர் மன்னிப்போம் விட்டு மறந்திருப்போம்
என்று மொழிந்த இனிய குணத்தானை
நின்று வணங்கி நெடுங்காலம் வாழ்த்திடுவேன்
நம்மிடையே வாழ்ந்து நலம்பெற்று வாழ்வுயர்ந்து
தம்பி நிலைமாறித் தாவிவிட்ட ஓர்நடிகர்
எங்கிருந் தாலுமவர் வாழ்க எனவாழ்த்திப்
பொங்கிமொழிந்த ஒருபொன்மொழியை வாழ்த்துகின்றேன்
அன்புளத்தின் ஆழம் எவரும் அறியாத
தென்புலத்தான் வாழ்க சிறந்தது.

29-9-1968

## அண்ணா வருக

அண்ணா வருக! அறிவே வருக!
கண்ணே வருக! கனியே வருக!
பண்பே வருக! பணிவே வருக!
அன்பே வருக! அறமே வருக!
முதல்வா வருக! முத்தமிழ்த் தாயின்
புதல்வா வருக! புண்ணியா வருக!
தாயெனத் தமிழகம் தாங்கும் நினக்கு
நோயென ஒருசொல் நுவன்றனர், அச்சொல்
தணியாத் துயரைத் தந்திட நொந்தேன்
இனியாய் நினக்கோ இந்நிலை நேர்ந்ததென்
றேங்கி ஏங்கி இடர்தனில் வீழ்ந்தேன்
தாங்கிய துயரம் சாற்றுதற் கரிதே
நாட்டின் நிலையும் வீட்டின் நிலையும்
வாட்டிட நாளும் வதங்கிடும் என்மனம்
நாட்டின் தலைவன் நலிவுற் றானெனக்
கேட்டுத் துடித்துக் கிடந்தது துவண்டது
பைந்தமிழ் பாடிப் பழகுமென் நாவும்
வெந்துயர் பொறாஅது வேதனைப் படலால்
பாடல் மறந்து பாழ்த்துக் கிடந்தது
வாடல் தவிர்த்திட வந்தனை தலைவா!
வருகஎம் தலைவா! வாழிய நெடுநாள்
தருகசொல் லமிழ்தம் தலைவா வாழிய!
புல்லிய கொடுநோய் போக்கிய வல்லவர்
மில்லர் எனும்பெயர் மேவிய நல்லவர்
அமெரிக்க ராயினும் ஆருயிர் காத்தலால்
தமரெமக் காயினர் தமராம் அவரைப்
பொங்கும் உளத்தாற் போற்றதும் யாமே
எங்கள் தோழரென் ரேத்துதும் யாமே
குடர்ப்புண் தீர்த்தனர் குலவிடும் எங்கள்
இடர்ப்புண் தீர்த்தனர் இனியராம் எமக்கே
நலமுற வந்தஎ நல்லோய் வணக்கம்
இளகிய மன்மும் இனியநன் மொழியும்
குலவிய தலைவா கூர்மதி யுடையோய்
வாழிய நெடிதே வாழிய இனிதே.

**(அமெரிக்க நாடு சென்று நலம் பெற்றுத் திரும்பிய அண்ணாவுக்கு எழுதிய வரவுரை. 6-11-1968)**

## யாழ் உடைந்தது

விண்மீன்கள் புடைசூழ்ந்து நிற்க, வான
வெளியினிலே முழுமதியொன் றொளிரக் கண்டோம்,
மண்மீது பயிர்தளிர்க்க உயிர்த ளிர்க்க
வளர்நிலவைப் பாய்ச்சியது மகிழ்ந்தோம் அந்தத்
தண்மதியை முகிலொன்று வந்து சூழத்
தன்னொளியும் மங்கியது மயங்கி நின்றோம்
★கொண்மூதான் விலகிவிடும் மேலைக் காற்று
கூடிவரும் காலமிதென் றெண்ணி நின்றோம்.

காற்றடித்த வேகத்தாற் கொடிய மேகம்
கலைந்ததுகண் டொருவாறு தேறி நின்றோம்
கூற்றெடுத்த படையெடுப்பில் தோற்று விட்டோம்
குளிர்நிலவைக் கருணையிலான் விழுங்கி விட்டான்,
காற்றடிக்கச் சிதறுண்ட மேகம் எங்கள்
கண்களிலே புகுந்துநிலை நின்ற தம்மா!
கூற்றுதற்குப் பசியெடுத்தால் இந்த நாட்டைக்
குளிர்விக்கும் முழுமதிதான் கிடைத்த தேயோ?

வடிவமைந்த யாழொன்று தனது கையில்
வைத்திருந்தாள் தமிழன்னை அதனை மீட்டிப்
படிமுழுதும் இசைமயமாப் படைத்து நின்றாள்
படர்ந்துவரும் இசைத்தேனைப் பருகி மாந்தர்
உடல்நிமிர்ந்தார் உளம்நிமிர்ந்தார் உயர்வும் உற்றார்
உயர்விதனைப் பொறுக்ககிலாக் காலன் என்னும்
கொடியஒரு பாவியவன் யாழ்ப றித்தான்
குமுறியழ முகாரிப்பண் பாடு கின்றான்.

★ கொண்மூ - மேகம்

தமிழ்வானில் வட்டமிட்டுச் சுற்றிச் சுற்றித்
தனக்குநிகர் இல்லைஎனப் பாடிப் பாடி
அமிழ்தனைய இசைபரப்பி நம்மை எல்லாம்
அகமகிழச் செய்ததொரு வானம்பாடி
இமிழ்கடலுக் கப்பாலும் பறந்து சென்றே
இனியதமிழ் பாடிவரக் கண்டு வந்தோம்
உமிழ்சினத்துக் காலனெனும் வேடன் கண்டான்
ஒருசிறிதும் இரக்கமிலான் வீழ்த்தி விட்டான்.

வித்தாகி முளையாகிக் கழனி யெங்கும்
விளைகின்ற பயிராகிச் செழித்து நல்ல
கொத்தாகிப் பயனாகிக் கூடுங் காலை
கொள்பயனைச் சிதைத்தானோர் கொடிய பாவி
பித்தாகித் திரிகின்றோம் துன்ப மென்னும்
பேராழி மூழ்குகின்றோம் தமிழர் வாழ்வின்
சொத்தாகி வந்தானை அண்ணா என்னும்
சொல்லுக்கே உரியானைப் பறித்தான் அம்மா

அறப்போர்கள் பலமுடித்தான் ஆட்சி பெற்றான்
அன்பொன்றே மனத்தமைத்தான் அந்த ஆட்சிச்
சிறப்பாலே முதலமைச்சன் ஆனான் அண்ணன்
செந்தமிழர் நற்றவமென் றிருந்தோம், ஆனால்
இறப்பாலும் முதலமைச்சன் ஆனான் அம்மா!
இத்துயரை எவரிடம்சென் றாற்றிக் கொள்வோம்?
மறப்பென்னும் மருந்தாலும் மாறா தந்தோ!
மனமென்னும் ஒன்றனைநாம் பெற்ற தாலே.

செந்தமிழ்க்கும் புலவர்க்கும் விடிவு காலம்
சிறந்ததொரு பொற்காலம் மீண்டும் இங்கு
வந்திருக்க வழியுண்டென் றெண்ணி எண்ணி
மகிழ்ச்சியெனுங் கடலுக்குள் விரைந்து சென்றோம்
உந்திஎழும் கற்பனையாம் படகில் வந்தோம்
ஒளிவிளக்காம் கரைவிளக்கம் அணைந்த தந்தோ
நொந்திருக்கும் துயர்க்கடலுள் வீழ்ந்து விட்டோம்
நோவகற்றக் கைகொடுக்க வருவார் யாரோ?

திருக்குறளாம் தெளிதேனைச் சங்கம் தந்த
        தீங்கனியாம் இலக்கியத்தைத் துய்த்துத் துய்த்துத்
தெருக்களெலாம் தமிழ்முழக்கம் செய்து நின்றாய்!
        தேயமெல்லாம் தமிழோசை பரவச் செய்தாய்!
உருத்தெழுவாய் தமிழுக்குத் தீங்குண் டென்றால்!
        உவந்திடுவாய் தாய்மொழிக்கோர் ஆக்கங் கண்டால்!
இருக்கின்ற தமிழ்ப்பணியை விட்டுச் செல்ல
        எவ்வண்ணம் மனந்துணிந்தாய்? அண்ணா! அண்ணா!

பழகுதமிழ் நிலையுயரப் பாடு பட்ட
        பண்பாளர் தமிழ்ப்புலவர் உருவை எல்லாம்
அழகியநற் சிலைவடிவில் படைத்துப் போற்றி
        ஆழிநெடுங் கரையருகே வரிசை செய்தாய்!
தொழவுரியர் சிலையருகே நீயும் சென்று
        தூயவனே நிலையாக அமர்ந்து விட்டாய்?
பழையதமிழ் நிலையுணர்ந்து பாடங் கேட்கும்
        பற்றாலே அவ்வண்ணம் அமர்ந்தாய் கொல்லோ?

மணப்பாட்டின் ஒலிகேட்க அறுபான் ஆண்டு
        மணித்திருநாள் நினக்குவரும் அந்நாள் என்றன்
மணிப்பாட்டை நின்னடிக்குப் படைப்பேன் என்று
        மனக்கோட்டை கட்டிவைத்து மகிழ்ந்தி ருந்தேன்
பிணப்பாட்டுப் பாடவைத்து மறைந்தாய் அண்ணா
        பேச்சாலே கோட்டைதனைப் பிடித்தாய் என்றன்
மனக்கோட்டை மூச்சாலே இடித்தாய்! இந்த
        மனவேறு பாடெதற்குக் கொண்டாய் அய்யா!

பண்பாடு பண்பாடென் றுரைத்து ரைத்துப்
        பகைதழுவும் நெஞ்சத்தார் தம்மை யும்போய்
நண்போடு தழுவியநற் கைககள் எங்கே?
        நலமிக்க ஒளிவிளக்காய் வந்த கோவே
கண்பாடு கொண்டனையே கல்ல றைக்குள்
        காரணமென்? அரசியலில் நீநி னைத்த
பண்பாடு காணாத ஏக்கத் தாலோ?
        பதறியழ எமைவிடுத்துச் சென்று விட்டாய்?

விடுதலைநாள் சுதந்திரத்தின் திருநாள் தன்னை
வீரத்தின் தியாகத்தின் திருநாள் என்றாய்
அடிமையென ஆக்கிவைத்தோர் கணக்கைத் தீர்த்த
அரியதொரு நாளென்றாய் நாற்பத் தேழை
உடைமைஎன வரவேட்டில் கணக்குப் பார்க்கும்
உவகைமிகு நாளென்றாய் அறுபத் தேழை
கடமையினை நன்கியற்றி நின்றோய்! ஏனோ
கணக்கொன்றும் பாராது மூடி விட்டாய்?

பெரும்புரட்சிக் கருத்தெல்லாம் பேசி நிற்பாய்!
பேச்சொன்றே கேட்டிருந்தோர் அஞ்சி, நின்னை
இரும்புளத்து மனிதனென எண்ணி நாட்டில்
ஏதேதோ விளைந்துவிடும் என்றி ருந்தார்
கரும்புளத்து மென்மையினை மேன்மை தன்னைக்
காட்டினைநீ குடியாட்சிப் பண்பு காட்டி
பெருங்குணத்தைக் கண்டபினர் அஞ்சி நின்ற
பேணாரும் நின்நட்பை விழைந்து வந்தார்

அரசியலைத் திறமுடனே நடத்த வல்லார்,
அண்ணாநீ தோற்றுவித்த கட்சி தன்னை
உரமுடனே வளர்க்கவல்லார் தோன்ற லாகும்
உன்போலப் பாசத்தை வளர்த்துப் போற்றி
அரவணைக்க வல்லாரை என்று காண்போம்?
அண்ணாவென் றுறவுமுறை சொல்லிச் சொல்லி
உரிமையுடன் அழைத்திடயாம் எவர்பாற் செல்வோம்?
உனைநினைந்தே நாளெல்லாம் உருகு கின்றோம்.

படிப்படிநீ உழைத்துழைத்து மேலே சென்றாய்!
பாராளும் நிலைபெற்றாய்! அதைப்போல் இன்றும்
படிப்படியா வுயிர்த்துயிர்த்து மேலே சென்றாய்!
பாடல்களில் நிலைபெற்றாய் சிலையும் பெற்றாய்!
அடிப்படையை இழந்ததனால் ஆடி நிற்கும்
அரண்மனையாய்த் தமிழ்நாடு மயங்கி நின்று
துடிப்படையச் செய்துவிட்டாய்! எங்கள் கோவே
தொண்டெல்லாம் முடிந்ததென்றா முடித்தாய் வாழ்வை.

எழுத்தெனினும் பேச்செனினும் சலிப்புத் தோன்றின்
எழுதுவதைப் பேசுவதை நிறுத்து கென்று
பழுத்துயர்ந்த பட்டறிவால் தம்பி யர்க்குப்
பகருவைநீ நின்வரவால் களிப்பே யன்றி
வழுத்துதலுக் குரியவனே சலிப்பே யில்லை
வருமூச்சை நீஎதற்கு நிறுத்திக் கொண்டாய்
எழுத்துலகம் பேச்சுலகம் என்றும் நின்னை
எதிர்நோக்கி நிற்பதைநீ அறியாய் கொல்லோ?

பண்ணாலுன் அருட்புகழைப் பாடு கின்றேன்
பணிகின்றேன் மலரடியை நின்ப டத்தைக்
கண்ணார மனங்குளிரப் பார்த்துப் பார்த்து
கண்ணீர்கொண் டாட்டுகின்றேன் கருணை வாழ்வே!
எண்ணாத நாளொன்று வாழ்வில் இல்லை
இனியதமிழ் வளர்ப்பதிலே உன்னைக் காண்பேன்
அண்ணாஎன் கவிமலரைத் தூவி நின்றே
அடியிணையைத் தலைதாழ்த்தி வணங்குகின்றேன்.

# அடக்கத்தை அடக்கம் செய்தோம்

படைவலியால் வடபுலத்தைச் சேர வேந்தன்
பகையாக்கிப் பணிவித்தான் நீயோ பேச்சு
நடைவலியால் நட்பாக்கிப் பணிய வைத்தாய்!
நாவலனே மன்பதையைக் காக்கும் கொற்றக்
குடையுடைய குடிப்பிறத்தல் துன்பம் என்று
குட்டுவனும் தெளிந்துரைத்தான் புலவர் பாட்டுத்
தொடையுடையாய் முதலமைச்சன் எனினும் நானோர்
சூழ்நிலையின் கைதிஎன நீயும் சொன்னாய்.

அன்றுமுதல் இன்றுவரை தோழர் என்னை
அண்ணாவென் றழைக்கின்றார், அமைச்ச ரான
இன்றென்னை ஒருசிலரும் அண்ணா என்பார்
இரண்டுக்கும் இடையிலுள வேறு பாட்டை
நன்றுணர்வேன் என்றுரைத்தாய் அமைச்ச ராகி
நாடாளும் பொறுப்பேற்றேன் இன்றும் தோழன்
அன்றுதரும் நிலைபோல வெண்பொன் ஒன்றே
அளிக்கின்றான் மதிக்கின்றேன் மகிழ்வுங் கொள்வேன்.

நாடாள வந்தபினர் நூறு நூறு
நான்தருவேன் நான்தருவேன் என்று செல்வர்
ஓடோடி வருகின்றார், ஏழை தந்த
ஒருவெண்பொன் என்னுடலிற் குருதி யாகும்
மேடாளும் செல்வர்தரும் வெண்பொன் நூறும்
மெய்ப்பூசும் சந்தனமாக் கொள்வேன் என்றாய்
ஊடாடும் பொருள்நயத்தை எளியோர் தம்பால்
உனக்கிருக்கும் அன்புளத்தைக் காட்டி நின்றாய்.

பிறந்தனைநீ சென்னைஎனும் இராச்சி யத்தில்
பெற்றெடுத்த தாய்நாட்டின் இழிவு நீக்கி
இறந்தனைநீ தமிழ்நாட்டில் ; தமிழ்நா டாக்க
ஏற்றதுயர் பற்பலவாம், தன்ன லத்தைத்
துறந்தனைநீ நாட்டுநலம் ஒன்றே வேண்டித்
தூயபணி ஏற்றனைநீ உழைத்து ழைத்துச்
சிறந்தனைநீ அன்புருவே காந்தி யண்ணல்
சிந்தையெலாம் நின்செயலில் மிளிரக் கண்டோம்.

புகழ்மலையின் உச்சிக்கே சென்று விட்டாய்?
புவியாளும் முதலமைச்சும் பெற்று விட்டாய்!
மகிழ்வுற்றுச் செருக்குற்றுத் திரிந்தா யல்லை
மன்னவனே சாமான்யன் என்றே உன்னை
இகழ்வாக அடக்கமுடன் சொல்லி வந்தாய்!
இனியிந்த அடக்கத்தை எங்குக் காண்போம்?
தகவுடையாய் அடக்கத்தை அடக்கம் செய்தோம்
தணியாத துயர்க்கடலில் மூழ்கி விட்டோம்

16-2-1969

## நெஞ்சம் நெக்குருகும்

பூவுலக வரலாறு படித்துத் தேர்ந்தார்
புதியதொரு வரலாற்றைப் படைத்து வாழ்ந்தார்
★நாவலர்ந்து வருஞ்சொல்லால் எழுத்தால் நெஞ்சால்
நயத்தக்க நாகரிகப் பண்பு சேர்த்தார்
தாவிவருந் தொண்டர்களைத் தம்பி என்று
தன்மானக் குடும்பத்தில் சேர்த்துக் கொண்டார்
ஆவிதனைத் தமிழினத்தின் விடுதலைக்கே
அளித்துவிட்டார் எமதுயிரில் தளிர்த்து விட்டார்.

ஆண்டவனைப் பற்றுடையார் அழைப்ப தைப்போல்
அண்ணாஅண் ணாவென்றே அழைக்கப் பெற்றார்
மீண்டவரைப் போலொருவர் யாங்குக் காண்போம்
மேலவரை நூலவரைப் பெரியார் சொல்லைத்
தாண்டரிய நெஞ்சினரைப் பண்பா டெல்லாம்
தழைத்துவரும் மனத்தவரைத் தமிழர் ஆட்சி
மீண்டுவர உழைத்தவரை நினையுந் தோறும்
மெழுகெனவே நெக்குருகிக் கசியும் நெஞ்சம்.

★ நாவலர்ந்து - நா + அலர்ந்து = நாவில் தோன்றி

## பண்பு மலர்

பரந்திருக்கும் உள்ளத்தை நெற்றி காட்டும் ;
பண்பாட்டை நகைதவழும் இதழ்கள் காட்டும் ;
சிறந்திருக்கும் கூர்மதியை மூக்கு காட்டும் ;
சிந்தனையின் ஆற்றலினை விழிகள் காட்டும் ;
கரந்திருக்கும் வீரத்தைப் புருவங் காட்டும் ;
கரகரத்த குரல்காட்டும் பெருமி தத்தை ;
சுரந்திருக்கும் பேரருளை உள்ளங் காட்டும்
சுட்டுவிரல் தமிழரின ஒருமை காட்டும்.

எளிமைதனை அணிந்திருக்கும் உடைகள் காட்டும் ;
ஏற்றத்தை அவர்கண்ட நடைகள் காட்டும் ;
ஒளிமிகுந்த அறிவாளர் எடுத்து ணர்த்தும்
உயர்நெறிகள் போற்றுவதைச் செவிகள் காட்டும் ;
தெளிவுடைய மனமுடையார் அண்ணா என்று
செப்புகிற உறவுச்சொல் உரிமை காட்டும் ;
அளிமிகுந்த துணிவுதனைச் செயல்கள் காட்டும் ;
அடக்கத்தைக் குறளான உருவங் காட்டும் ;

பொறுமைஎனும் உயர்பண்பு கொண்ட வுள்ளம்
பொறாமைதனை எள்ளளவும் காணா வுள்ளம்
வறுமையினைக் காணுங்கால் இரங்கும் உள்ளம்
வளர்தமிழின் வாழ்வுக்கே வாழ்ந்த வுள்ளம்
சிறுமையினைக் காணுங்கால் சீறும் உள்ளம்
சினமென்னுஞ் சுடுநெருப்பைச் சேரா வுள்ளம்
வருபவரைக் கைகொடுத்து வளர்க்கும் உள்ளம்
வாழ்வெல்லாம் நலஞ்செய்தே வளர்ந்த வுள்ளம்.

கலைத்துறையில் திறமிக்க தலைவ ருண்டு
களங்காணாப் போராட்டத் தலைவ ருண்டு
கலைத்துவிடும் அரசியலில் தந்தி ரங்கள்
காட்டுகிற தலைவருண்டு துறைகள் தோறும்

மலைத்தெவரும் பாராட்டும் தலைவ ருண்டு
        வானநெறி காட்டுகிற தலைவ ருண்டு
நிலைத்துவரும் பேரன்பை அண்ணன் போல
        நெஞ்சத்தில் வளர்த்துவந்த தலைவ ருண்டா?

தொண்டர்தமைச் சொக்கட்டான் காய்க ளாக்கிச்
        சுரண்டிநலம் துய்க்காத தலைவன், ஏழைத்
தொண்டர்தமைத் தூண்டிவிட்டுச் சிறைக்க னுப்பிச்
        "சுகபோகங்" காணாத தலைவன், நல்ல
தொண்டருக்குள் தொண்டனெனக் கலந்து நின்று
        தோள்தந்து துணைநின்ற தலைவன், உற்ற
தொண்டர்தமைத் தம்பியராகக் கொண்ட அண்ணன்
        தொண்டுளத்தால் நிலைபெற்ற தலைவன் ஆனான்.

பேசுபுகழ்ப் பேரறிஞன் எங்கள் அண்ணன்
        பெற்றிருந்த ஆற்றலுக்கோர் எல்லை யுண்டோ?
ஏசுவையும் புத்தரையும் ஏட்டிற் கண்டோம்
        இன்றவர்தம் பண்புருவை நாட்டிற் கண்டோம்
ஏசுமொழி அத்தனையும் தாங்கிக் கொள்ளும்
        இதயத்தை அண்ணாவின் செயலிற் கண்டோம்
வாசமலர் போல்மனத்தான் சிரித்துக் கொண்டே
        "வசவாளர் வாழ்க"வென மொழியக் கேட்டோம்.

ஒருவழியில் நிலைநின்று நடப்பீர் என்றே
        உணர்த்துதல்போல் ஒருவிரலைச் சுட்டிக் காட்டிப்
பெருமையுற நிற்கின்ற சிலையின் முன்னே
        பேதையர்போல் துணிகொண்டு முகத்தை மூடி
வருமனித உருவங்கள் கண்ட துண்டு;
        வாராத நோய்வந்து வாடி நின்று
மருகுகிற வேளையிலும் வைதா ருண்டு;
        மாவலியன் பொறுமையொடு தாங்கி நின்றான்.

நெஞ்சமெலாம் குடிபுகுந்து மெச்ச நின்றான்
நெடும்புகழின் படியேறி உச்சி சென்றான்
செஞ்சுடர்போல் ஒப்பரிய தலைவன் என்றே
சேராரும் உணர்ந்துதலை வணங்க நின்றான்
வஞ்சமிலான் நானேநும் தலைவன் என்று
மதங்கொண்டு வெறிகொண்டு சொன்ன தில்லை ;
நெஞ்சுருகச் "சாமான்யன்" என்றே சொன்னான்
நெல்வயலில் விளைந்தபயிர் வளைந்தே தோன்றும்.

தம்பியர்தம் நெஞ்சமெலாம் இதழ்க ளாகத்
தனிஅறிவு மகரந்தப் பொடியே யாக
வெம்பகைக்கும் இனிமைசெயும் கருணைப் பண்பே
வீசிவரும் மணமாகக் கற்ற கல்வி
தெம்புடைய தண்டாகச் சுரக்கும் அன்பே
தேனாகக் காஞ்சிஎனும் பொய்கை தன்னில்
செம்மைநிறத் தாமரைப்பூ மலரும் போது
சிறுகாலன் அம்மலரைக் கசக்கி விட்டான்.

## அண்ணா பேசினார்

ஆண்டுகள் ஐம்பதின் அப்பாலே ஓரைந்து
தாண்டியவன் நானெனினும் தள்ளாமை கண்டதிலை ;
என்றும் இளைஞனென ஏறுநிகர் காளைஎன
ஒன்றும் உணர்வுடைய உள்ளம் உடையவன்நான் ;
என்றாலும் வெண்மை எனது தலைமுடியில்
நன்றே படர நலமிக்க என்னுளத்தைச்
சொல்ல முடியாத் துயரொன்று கவ்வியது
நல்ல இளமை நமைவிட்டு நீங்கிடுமோ ?
வேண்டா முதுமைவரும் வேளை நெருங்கிடுமோ ?
தீண்டாமல் போகாதோ ? தேய்ந்திடுமோ நம்இளமை ?
என்றொருநாள் என்மனையில் ஏங்கித் தனித்திருந்
தொன்றும் இமைமுடி ஓய்ந்து தளர்ந்திருந்தேன் ;
ஆழ்கடலின் மேற்புறத்தை ஆர்த்துக் கரைகடக்க
நீள்கரையில் மோதி நிமிர்ந்தெழுந்த பேரலைகள்
ஓரக் கரைகடக்க ஒண்ணாமல் மீளுங்கால்
நேருமொலி என்செவியில் நீங்கா தொலிசெய்ய,
விசிவெருங் காற்று விளையாடி இன்பத்தைப்
பூசி எனதுடலில் பூரிப்புச் செய்திருக்கச்
சென்னைக் கடற்கரையின் சீரெழிலை நோக்கியவா
றென்னை மறந்தங் கினிதே நடந்துவந்தேன் ;
வாழும்நாள் எல்லாம்நம் வாழ்வுக்கே நாவசைத்தோன்
நாளும் கடலலையாம் நாவதனால் தாலாட்டப்
பேசாமல் சந்தனப் பேழைஎனுந் தொட்டிலிலே
ஆசான் நெடுந்துயிலில் ஆழுங் கரையோரம்
வந்தேன் உடல்சிலிர்த்தேன் வாடிவரும் என்னுளத்தில்
செந்தேன் துளித்ததுபோற் செம்மாந்து நின்றேன்நான் ;
அண்ணாஎன் அண்ணாஎன் றார்த்தேன் ; அருள்பொழியும்
கண்ணான்என் கண்முன்னே காட்சி தரநின்றான் ;
வாமண்ணா என்று வணங்கித் தலைநிமிர்ந்தேன் ;
"பாமன்னா வாழ்க" எனப் பையச் சிரித்திருந்தான் ;
மெல்ல சிரித்தாய்நீ மேலோய்நின் வாய்ச்சிரிப்புச்
சொல்லும் பொருள்தெரியச் சொல்லிடுக என்றேன்நான்

"உன்னைத்தான் தம்பி உயிர்போல் நினைந்திருந்தேன்
என்னைத்தான் நம்பி இருந்தாய்நீ உண்மையிது ;
மண்ணுலகில் வாழுங்கால் என்னை மதித்துவந்தாய்
கண்மணிபோல் உன்னைக் கருதி மகிழ்ந்தேன்நான் ;
என்னோ டிணைந்துநீ ஏற்ற துயரெல்லாம்
எந்நாளும் எண்ணி இறுமாப் படைகின்றேன் ;
பூண்ட அறப்போர்கள் புக்க சமர்க்களங்கள்
மீண்டும் நினைத்தாலே மேனியெல்லாம் புல்லரிக்கும் !
தம்பி யுடையான் படைக்கஞ்சான் என்றிருந்தேன்
நம்பி யதுபோல நாளெல்லாம் வென்றுவந்தாய்!
வென்றுவந்த நீயின்று வேறு நினைவுகளைத்
துன்றிவர விட்டுத் துவள்கின்றாய்! நாடோறும்
உன்னை நினைந்தே உளம்நொந்தாய்! உன்னிளமை
தன்னை நினைந்தும் தணியாத் துயர்கொண்டாய்!
ஆளடிமை செய்யாமல் ஆண்ட இனத்தவன்நீ
வாளுடைய தோளுயர்த்தி வட்டமிட்டுப் போர்முழுதும்
வெற்றிக் கொடிநாட்டி வீரப் புகழுயர்த்திச்
சுற்றித் திரிந்தவன்நீ சோர்ந்து கிடப்பதுவோ ?
நாட்டை நினைந்தாயா ? நாடாண்ட உன்னினத்தின்
பாட்டை நினைந்தாயா ? பாடகலக் கேடகலத்
தன்னாட்சி பெற்றுயரச் சற்றும் நினைந்தாயா ?
உன்னாட்சி பெற்றிங் குயர நினைந்தாயா ?
சாதி தொலைத்தாயா ? சாத்திரக் குப்பைகளை
மோதித் தகர்த்தாயா ? மோத நினைந்தாயா ?
ஓதித் திரிவதில்தான் உள்ளம் மகிழ்கின்றாய்!
சாதித்துக் காட்டிடச் சற்றும் நினைந்ததுண்டா ?
மூத்த தமிழ்மொழியை மொய்க்கும் பகைநீக்கிக்
காத்துப் புரக்கக் கருத்தில் நினைந்தாயா ?
உன்னை நினைந்தே உளம்நொந்தாய்! உன்னிளமை
தன்னை நினைந்தும் தணியாத் துயரடைந்தாய்!
இந்த நிலைகண்டே ஏங்கி வருந்திமனம்
நொந்து சிரிக்கின்றேன்" என்று நுவன்றான் ;
மறப்போம்பின் மன்னிப்போம் என்றஒரு மாற்றம்
தரத்தகுந்த அண்ணா தவறுளதேல் மன்னிப்பாய்!
பொன்னை மறப்பேன் பொருளை மறந்திருப்பேன்
என்னை மறப்பேன் பொருளை மறந்திருப்பேன்
என்னை மறப்பேன் இனிய மனைமறப்பேன்

அன்னைத் தமிழ்மொழியை அண்ணா மறந்தறியேன் ;
என்னை யுருவாக்கும் என்னுயிரை, என்னுணர்வை ,
நான்வணங்குந் தெய்வத்தை, நாடி நரம்பெல்லாம்
தான்புகுந்த செங்குருதி தன்னை மறப்பேனோ ?
தென்னாட்டு மண்ணில்தான் சேயாக நான்பிறந்தேன்
அந்நாட்டு மண்ணள்ளி ஆசையுடன் தின்று
தவழ்ந்தேன் நடந்தேன் தரையிற் புரண்டேன்
தவந்தான் புரிந்தேன் தமிழ்நாட்டில் நான்பிறக்க ;
என்னுயிரின் மூச்செல்லாம் தென்பொதியக் காற்றாகும்
பொன்னிமகள் ஊட்டியபால் என்னுடலின் செங்குருதி ;
அன்னைத் திருநாட்டை அண்ணா மறந்தறியேன்
என்னைத் தவறாக எண்ணி இகழற்க !
என்னினத்தை அவ்வினத்தின் ஏற்றத்தை எண்ணாத
கன்மனத்தன் நானல்லேன் நாளுங் கருதுகின்றேன் ;
தார்கொண்ட தானைத் தலைவாநம் தாயகத்தைப்
பார்மன்னா பாரிங்கே ! பாவி சிலர்கூடிச்
செந்தமிழைத் தாழ்த்துகிறார் சீர்கெட் டலைகின்றார்
எந்தவிதம் அண்ணா இதனைப் பொறுத்திருப்பேன் ?
போருக்கு நானெழுந்தேன் போர்க்களத்தில் என்னெதிரில்
நேருக்கு நேராக நிற்பவனோ என்னினத்தான் ;
என்செய்வேன் அண்ணா இனத்தான் பகையானால் ?
தன்மொழிக்குத் தானே தடையாக நிற்கின்றான் ;
நாடாண்ட நம்மினமும் நற்றமிழும் தாயகமும்
பீடாண்டு கொள்ளப் பெரும்பாடு பட்டிங்கு
வாழுங் கழகத்தை வாட்டி ஒழிப்பதற்குத்
தாளம் இடுபவரைத் தந்நலமே கொண்டவரை
நம்பி ஒருமனிதன் நாடகங்கள் ஆடுகிறான் ;
வெம்பித் தளர்ந்துமிகும் வேதனையால் நொந்தேன்
உடனிருந்தே கொல்லும் உறுபிணிபோ லாகிக்
கடலிலங்கை வீடணனாய்க் கைவரிசை காட்டி,
அரியணையின் மீதேறும் ஆசை மனத்துள்
மருவும் குடிலனென மாறிமனம் போய்விட்டான் ;
என்றுநான் சொன்னேன் இடைமறித்துத் "தம்பீநீ
இன்றுரைத்த உன்மொழியை என்செவிகள் ஏலா
எதுவரினும் தாங்கும் இதயத்தைப் பெற்றால்
கதுவவரும் துன்பம் கடிதின் விலகு" மென்றான் ;

என்பால் வருகின்ற எத்துயருந் தாங்கிடுவேன்
அன்பால் உயரண்ணா அன்னைத் தமிழ்மொழிக்குத்
தீங்கு வருமென்றால் தேறுவ தெப்படியோ ?
ஏங்குகிறேன் அண்ணாநீ என்னவழி சொல்கின்றாய் ?
கண்ணாகக் காக்கும் கழகத்தை மாய்க்கவரின்
புண்ணாக என்மனந்தான் போகாதோ ? நீபுகல்வாய்
என்று மனம்நொந் திருவிழிகள் நீர்சொரிய
நின்றேன் அறிஞர் நிறைமொழி வாய்மலர்ந்தார் ;
"செந்தமிழ்க்கா தீங்கு ? சிறிதேனும் வாராது ;
முந்தை வரலாற்றை முன்னிறுத்திச் சிந்தனைசெய் !
எத்தனைக் கற்கள் தடைபோல் இருந்தாலும்
அத்தனையும் மோதி அகற்றும் மொழியாம்
தனக்கு வரும்பகையைத் தானே தகர்க்கும்
தனித்திறமை கொண்டிலங்கும் தாய்மொழிக்காதீங்கு ?
பழகுதமிழ்ப் பண்பாட்டைப் பாரில்நிலை நாட்டும்
கழகம் அழியுமென வீணே கலங்குகிறாய் !
வையத்தைச் சூழ்கடலை வாயால் குடிப்பனெனப்
பொய்வைத்த நெஞ்சன் புளுகுவதை நம்புவதோ ?
விண்ணகத்துச் சூரியனை வீழ்த்துவேன் என்றொருவன்
மன்னகத்துச் சொன்னால் மதியாரோ பித்தனென ?
தன்மானத் தாளமுத்து தம்பி நடராஜன்
முன்னாவி ஈய முளைத்த கழகமடா
வேளா யுதமென்ற வீரமகன் தந்தஉயிர்ப்
பாலால் வளர்ந்த பசுமைக் கழகமடா !
தூத்துக்குடியான் துணிவுடைய நெஞ்சத்தான்
ஏத்தவரும் கே.வி.கே. சாமி எனுந்தம்பி
தந்த உரத்தால் தழைக்கும் கழகமடா !
எந்த விதமழியும் ஏன்கலங்கு கின்றாய் ?
மகமதியத் தோழர் மசீது முகைதீன்
முகமலரத் தந்தஉயிர் மூச்சுக் கழகமடா !
தப்பேதும் செய்யாத் தளிரனைய மாணவர்
துப்பாக்கிக் குண்டால் துடிதுடித்து வீழுங்கால்
சிந்துசெந் நீரால் செழித்த கழகமடா !
அந்தக் கழகத்தை ஆரழிக்க வல்லார்கள் ?
ஆலங் குடிதந்த அன்பன் சிதம்பரம்
கோலம் மிகவுடையான் கொள்கைசேர் பொற்செழியன்
எத்தனையோ தம்பிமார் ஈந்த உயிராலே
இத்தரையில் நாம்வளர்த்த ஈடில் கழகமடா !

செந்தமிழைக் காப்பதற்குச் சீறி எழுந்தவர்கள்
வெந்தழலை மூட்டி விறகாக்கித் தம்முடலை
வேகவிட்ட வீரப்பன் வீரன் சிவலிங்கம்
போகவிட்ட நல்லுயிரால் போற்றும் கழகமடா ;
நாம்வணங்கும் சின்னமென ஆன திருச்சாமி
தேமொழியைக் காக்கவரும் சென்னை அரங்கனவன்
மூண்டெழுந்த செந்தழலில் மூழ்கி மடிந்தார்கள்
ஆண்டவர்தம் ஈகத்தால் ஆல்போல் வளர்ந்ததடா!
அந்தக் கழகத்தை ஆரழிக்க வல்லார்கள்?
சிந்தைத் துயர்நீங்கிச் செம்மாந்து நிற்பாய்!
இரங்கும் இயல்புடைய என்றன் மனத்தை
இரவல் எனப்பெற்றான் என்தம்பி ஆரூரன் ;
நம்மை உருவாக்க நாளெல்லாம் பாடுபட்ட
செம்மை திறம்பாத ஈரோட்டுச் சிங்கத்தின்
நெஞ்சத் துணிவும் நிரம்பஅவன் பெற்றுள்ளான்
அஞ்சற் கிடமில்லை அன்னான் துணையாய்நில்!
என்புருவம் ஆனாலும் ஏறு நிகர்மனத்தன்
அன்பழகன் எல்லாம் அவற்குத் துணையுண்டு ;
நாட்டை வளமாக்க நல்லசில திட்டங்கள்
போட்டிருந்தேன் என்மனத்தில் பொல்லாப் பிணிவந்து
வாட்டியதால் தம்பியரை வாடவிட்டுச் சென்றுவிட்டேன்
போட்டிருந்த திட்டம் புரிந்தகரு ணாநிதியும்
ஒன்றுங் குறையா துருவாக்கிக் காட்டுகிறான்
நன்று தரும்முடிவை நன்காய்ந்து செய்கின்றான்
பண்டைத் தமிழ்நாட்டைப் பார்த்து மகிழுமுளம்
கொண்டே முயல்கிறான் கொள்கை குறிக்கொண்டான்
உன்னை உடன்பிறப்பென் றுள்ளத்திற் கொண்டுள்ளான்
என்னை அவனுருவில் என்றும்நீ கண்டிடுவாய்"
என்றமொழி எல்லாம் இனிதுரைத் தென்முன்னே
நின்றவனைக் காணவிலை ; நெஞ்சந் துடிதுடித்(து)-
அண்ணா எனஅலற அருகில் துயில்மனையாள்
உண்ணா தயர்ந்தீர் உறக்கத்தும் இந்நினைவா?
சொன்னால் கேட்பதில்லை ; சொக்கி உறங்கிவிட்டீர்!
என்றாள் விழிமலர்ந்தேன் ; என் அண்ணன் சொன்னவற்றை
பாட்டில் எழுதிவந்து பாடி முடித்துவிட்டேன்
கேட்டோரே அண்ணன் கிளந்தவெலாம் நெஞ்சிருத்தி
நாட்டை வளமாக்க நாடித் துணைநிற்பீர்!
பாட்டை முடித்தே பணிந்து.

6-9-1974

## அண்ணா வழியில் அயராதுழைப்போம்

சங்கங்கள் மூன்றமைத்துப் புலவர் வேந்தர்
சமமாக வீற்றிருந்து தமிழைக் காத்தே
எங்கெங்கும் புகழ்மணக்கத் திகழ்ந்த நாடு ;
வணிகத்தைப் போர்த்திறத்தை எடுத்துக்காட்ட
வங்கங்கள் பலசெலுத்தி வளர்ந்த நாடு ;
வளமிக்க அரசியலைத் தெரிந்த நாடு ;
நங்கையவள் காவிரித்தாய் வளர்த்து விட்ட
நாகரிகத் தொட்டிலென வாழ்ந்த நாடு.

எங்கெங்கோ திரிந்தவர்கள் இங்கு வந்தார்
ஏமாந்த தமிழினத்தார் மனம்நெ கிழ்ந்தார் ;
அங்கங்கே அமர்ந்தவர்கள் துறைகள் தோறும்
ஆரியத்தின் கொள்கைகளை புகுத்தி விட்டார் ;
தங்கங்கள் நிறம்மாற ஒளியும் மாறத்
தந்திரங்கள் மந்திரங்கள் பூசி விட்டார்
சிங்கங்கள் குள்ளநரிக் கடிமை யாகிச்
சீர்கெட்டு வாழ்ந்திடவே மாயை செய்தார்.

தென்னாட்டை, வந்தவரால் அடிமையான
திருநாட்டைச் சீர்திருத்தி மீண்டும் சங்கப்
பொன்னாட்டை உருவாக்கச் சினந்தெ ழுந்த
போராட்டப் பெரியார்ஓர் பாட்டை கண்டார் ;
தென்பூட்டும் ஈரோட்டார் தனித்து நின்றே
திருகுகள்ளி முட்புதர்கள் கள்முள் காளான்
மின்காட்டும் நச்சரவம் மலியுங் காட்டை
மேம்படுத்தச் செப்பனிட வழிய மைத்தார்.

வாஞ்சையினால் நம்பெரியார் செப்ப னிட்டு
வழியமைக்கப் பாடுபடுந் திறத்தைக் கண்டு
காஞ்சிக்கும் ஈரோட்டுப் பாச றைக்கும்
கற்றறிந்த நம்அண்ணா வழிய மைத்தார் ;
தேன்சிதறும் பூஞ்சோலை பலப டைத்தார் ;
தெளிநீரைத் தருகிணறும் ஆக்கி வைத்தார் ;
தீஞ்சுவைசேர் கனிமரங்கள் பலவும் வைத்தார் ;
சேர்ந்திளைஞர் அணிவகுத்து நடத்து வந்தார்.

உறுதிகொளும் நல்லிளைஞர் நடக்குங் காலை
உதவாத வல்வால்கள் பறந்து வந்தே
உறுகனிகள் பலசுவைத்துப் பறக்கக் கண்டோம் ;
ஒளித்திருந்த கள்வர்சிலர் சமயம் பார்த்துப்
பொருள்பலவும் திருடிக்கொண் டோடக் கண்டோம் ;
பொறுமையிலார் இடையிடையே தொல்லை தந்து
பொறுமுவதும் கேட்டிருந்தோம் எனினும் அண்ணன்
புதுவழியில் நடப்பதைநாம் நிறுத்த வில்லை.

திருவிடத்தின் பெருமையினை மீண்டுங் காணத்
தெளித்துணர்ந்து சிந்தித்துக் காஞ்சி அண்ணன்
ஒருவழிதான் நமக்கெல்லாம் எடுத்து ரைத்தார் ;
உயர்தமிழும் தமிழினமும் உய்ய வேண்டி
இருவழியைக் காட்டவில்லை ; குழப்ப வில்லை ;
ஏகஇந்தி யாவென்று மழுப்ப வில்லை ;
வரும்வழியில் திசைமாறிப் போன மாந்தர்
வாயுளறல் சிரிப்புக்கே வழியைக் காட்டும்.

மடமையினைத் தகர்த்தெறிந்து சிந்தித் தாய்ந்து
மதிதன்னை வளர்க்கும்வழி, நலமே சேர்க்கும்
கடமைவழி, கண்ணியமும் கட்டுப் பாடும்
கலந்தவழி, கருணைவழி, பண்பும் அன்பும்
உடையவழி, உறுதிவழி, மானங் காக்க
உற்றவழி, குறல்நூலின் சங்க நூலின்
இடைமருவும் தமிழர்வழி, காஞ்சிக் கோமான்
எந்நாளும் எடுத்துரைத்த வழியாம் கண்டீர்.

துப்பாக்கி துணையென்று சொன்ன தில்லை ;
துணிவுளமே துணையென்று மொழிந்து நின்றார் ;
தப்பாக்கும் எவ்வழியும் நினைந்த தில்லை
தன்மானம் தமிழுணர்வு தன்னம் பிக்கை
வைப்பாக்கிக் கொள்வதுதான் தமிழினத்தை
வாழ்விக்கும் வழிஎன்றார் ; புகழ்ந்து சான்றோர்
★செப்பாக்க வழியொன்றே சொல்லித் தந்தார்
சேப்பாக்க வழித்துயிலும் அறிஞர் கோமான்.

அல்வழியில் தமிழினத்தை அழைக்க வில்லை
அருவருக்கும் வேற்றுமையை வளர்க்க வில்லை
நல்வழியே ஒன்றமைத்தார் அதனைக் காட்டி
நம்பிவந்த தம்பியரை அழைத்துச் சென்றார்
கல்வழியோ முள்வழியோ காட்ட வில்லை
காட்டுவழி மேட்டுவழி காட்ட வில்லை
கொல்வழியும் சொன்னதில்லை யாரும் ஏற்றுக்
கொள்வழியெ உரைத்திருந்தார் தலைவர் கோமான்.

கருப்புக்கு மறுப்புரைத்துப் பகைமை பூண்ட
கருத்தினரும் வந்தவழி, குழப்பம் செய்து
வெறுப்புற்றுத் திரிந்தவரும் மனம்தி ருந்தி
விழைந்தவழி, முதல்எதிரி என்று சொல்லி
செருக்குற்று நின்றவரும் முதலில் வந்து
சேர்ந்தவழி, செம்மைவழி, எங்கள் அண்ணன்
உருக்கொடுத்துத் தந்தவழி, பெரியார் பட்ட
உழைப்பாலே உருவான வழியே யாகும்.

அழகுநடைத் தமிழ்எழுதிப் புதிய பாங்கில்
அணிவகுத்து நடப்பதற்கு வழிய மைத்தார் ;
பழகுதமிழ் நடைபேசிப் பாரோர் போற்றும்
படையொன்று நடைபோட வழிய மைத்தார் ;
மழலைமொழி நடையினரும் கற்றுக் கற்று
மாவீரர் போல்நடந்தார் வெற்றி கண்டார் ;
விழலனைய மனிதர்களும் எழுதிப் பேசி
வீறுபெறும் நடைபெற்றார் வாழ்வும் பெற்றார்.

★ செப்பாக்க வழி - செப்பும் ஆக்க வழி

"தூற்றாதீர் பிறர்பழியை, மேடை ஏறித்
தொடுக்காதீர் வசைமொழியைக் காசுக் காக
மாற்றா தீர் தமிழ்மரவை, கருத்தை மட்டும்
மறுத்துரைப்பீர், தனிஒருவர்ப் பழித்தல் வேண்டா,
மாற்றாரின் தோட்டத்து மல்லி கைக்கும்
மணமுண்டு தெரிந்ததனை நுகர்க" என்று
சாற்றிஒரு பண்புவழி காட்டி நின்று
தமிழினத்தை வளர்க்கும்வழி உணர்த்தி நின்றார்.

புரட்சிவழி எனச்சொல்லி உணர்ச்சி யூட்டிப்
புன்மைவழி அமைக்கவில்லை ; மக்கள் நெஞ்சில்
மருட்சிபெறச் செய்யவில்லை, பகைத்தோர் கூட
மனதுக்குள் ஏற்கின்ற வழியே சொன்னார்,
கருத்துவழி, அறிவுவழிப் புரட்சி செய்தார் ;
களப் புரட்சி கொலைப்புரட்சி செய்தா ரல்லர் ;
தரத்திலுயர் புரட்சிவழி, தன்னைத் தானே
தருகின்ற அறத்துவழி ஒன்றே கண்டார்.

அண்ணாவின் வழியில்தான் செல்லு கின்றோம்
அல்லல்பல வந்தாலும் அயர மாட்டோம் ;
புண்ணாகப் பழிமொழிகள் வீசும் போதும்
பொழுதெல்லாம் சோதனைகள் வந்த போதும்
மண்ணாலும் உரிமையினைக் கலைத்த போதும்
மனைமக்கள் தமக்கிடர்கள் விளைத்த போதும்
எண்ணாத சிறைக்கூடம் வதைத்த போதும்
எந்நாளும் உழைத்திருப்போம் வெற்றி கொள்வோம்.

அடிவயிற்றில் எமைமிதித்துக் கொன்ற போதும்
அவர்காட்டும் வழியல்தான் செல்வோம் நாங்கள்
அடிபட்டு மிதிபட்டுத் துயர்கள் உற்றும்
அயராமல் உழைத்திடுவோம், இரண்டு வண்ணக்
கொடிகட்டி அதன்நிழலில் தொடர்ந்து நின்று
குறிக்கோளை நோக்கித்தான் பயணம் செய்வோம்
மடியட்டும் எமதுயிர்கள் அஞ்ச மாட்டோம்
மறிக்கட்டும் எமைப்பகைகள் விலக்கிச் செல்வோம்.

தம்பிகரு ணாநிதியும் எம்மோ டுள்ளார் ;
        தலைமகனார் வழியில்தான் செல்லு கின்றார் ;
வெம்பிஎழும் புலிமறவர் இங்கே வுள்ளார்
        வீரமகன் வழியில்தான் செல்லு கின்றோம்
'தம்பியினை வளர்ப்பவர்கள் குரைத்து விட்டால்
        கொள்கைவழித் தொடராமல் நின்றா போவோம்
நம்பிவரும் நல்லவர்கள் இங்கே வுள்ளார் ;
        நம்அண்ணன் அமைத்தவழி தொடர்ந்து செல்வோம்.

அண்ணாவைப் போற்றுவது கடமை என்றால்
        அவர்தம்பி கலைஞரையும் போற்ற வேண்டும் ;
அண்ணாவைத் தலைவரென ஏற்றுக் கொண்டால்
        அவர்தம்பி கலைஞரையும் ஏற்க வேண்டும் ;
அண்ணாவின் சொல்லெல்லாம் மதிப்ப தென்றால்
        அவர்தம்பி கலைஞர்மொழி மதிக்க வேண்டும்
அண்ணாவின் கொள்கைவழி நடப்ப தென்றால்
        அவர்தம்பி கலைஞர்வழி நடக்க வேண்டும்.

அண்ணா பிறந்த நாள் விழா
சென்னை
**17-9-1978**

## வெற்றி மலர் சூடுங்கள்!

நம்மை வளர்த்துவிட்ட நல்லவன் தாயுளத்தை
இம்மா நிலத்தே எவரிடத்துங் கண்டதில்லை!
"பண்பட்ட தம்பியராம் பன்னூற்றின் ஆயிரவர்
எண்ணிட்டுக் காட்ட இயலாரைச் சேர்த்தென்னைத்
தாயொருத்தி தன்வயிறு தாங்காத காரணத்தால்
போய்வயி றொவ்வொன்றும் புக்குப் பிறந்தோம்நாம்"
என்று மொழிந்தவன்றன் ஈடில்லாப் பண்புளத்தை
இன்று நினைத்தாலும் என்பெல்லாம் நெக்குருகும்;
நாட்டை வயமாக்கும் நாவல்லான், நற்றமிழை
ஏட்டில் எழுதிமெரு கேற்றும் எழுத்தாளன்,
நாடும் அரசியலை நன்காய்ந்த பேரறிஞன்,
வாடும் எளியோர்க்கு வாழ்வு தரவந்தோன்,
நண்பாளன், பண்பாளன், நாடகத்துப் பேராசான்,
கண்போல வாய்த்தஒரு காஞ்சி புரத்தலைவன்
என்றெல்லாம் நாட்டவர் ஏத்திப் புகழுரைத்தார்;
ஒன்றாலும் நம்அண்ணன் உள்ளம் மயங்கவில்லை;
மாறாட்டம் இல்லாமல் மக்கள் நலங்கருதிப்
போராட்டம் நூறு புரிந்தானைத் தன்னாட்டில்
ஏழை துயர்துடைக்க வெஞ்சிறைகள் ஏற்றானைக்
கோழை எனப்பழித்தான் கொள்கை சிறிதுமிலான்,
போராட்டம் என்றாலே போய்பதுங்கும் குள்ளநரி
ஈரோட்டார் தந்தஅரி யேற்றைப் பழித்ததுகாண்;
அண்ணன் குடும்பத்தை அப்பிறவி ஏசிவந்த
வண்ணம்போல் யாரும் வடிக்க இயலாது;
வஞ்சகத்தார் என்னென்ன வைதாலும் தாங்குகிற
நெஞ்சத்தான் நம்அண்ணன் நின்றநிலை மாறவில்லை
வாடி வதங்கவில்லை வாய்த்தஒரு போர்க்களத்தில்
ஓடி ஒளியவில்லை ஊக்கங் குறையவில்லை;
மற்றவரைப் பாராட்டி வாயாரப் போற்றுவான்
மற்றோர் தனைப்புகழ்ந்தால் மங்கைர்போற் கூசுவான்;

ஆவிக்குள் ஆவியென ஆகிக் கடற்கரையில்
மேவித் துயில்கொள்ளும் மேலோனைத் தூற்றுகிறான் ;
தாயைப் பழிக்கத் தயங்காத மாபாவி
வையாத் திறந்தினும் வைதே திரிகின்றான் ;
"பொய்யை முதலாகப் போட்டை அரசியலைச்
செய்யுந் தலைவ" னெனச் செத்தபினும் திட்டுகிறான் ;
பொய்யில் பிறந்தமனம் பொய்யில் வளர்ந்தஉடல்
பொய்யால் வளர்உருவம் புத்தனையா ஏசுவது ?
அண்ணாவை மிஞ்சிவிட்டார் ஆரூர்க் கலைஞரெனப்
பண்ணால் முடிபோட்டுப் பாடுகிறான் பாடட்டும்
அண்ணா அமைத்த அருமைக் கழகத்தைக்
கண்போற் கலைஞரவர் காக்குங் கழகத்தைச்
சைத்தான் எனப்புகன்று சாக்கடையில் வந்தமொழி
வைத்தான் நமக்கெதிரில் வாய்மூடி நிற்கின்றோம் ;
தன்னலத்தால் இற்றைத் தலைவருக்குப் பூமாலை
சொன்னலத்தால் சூட்டுகிறான் சூட்டட்டும் வாழட்டும் ;
ஆனால் கழகத்தை அப்பேதை வாய்புளிக்க
ஏனோ பழிக்கின்றான் ? ஈதென்ன விந்தை !
கலைஞர் இனிப்பாம் கழகம் கசப்பாம்
நிலைபுரிய வில்லைஎன் நெஞ்சம் பொறுக்கவில்லை ;
பேதைத் தனமென்று பேசா திருப்பதா ?
போதைச் செயலென்று பூனைபோல் நிற்பதா ?
பேசா திருந்தவன்தான் பேதைத் தனமென்றே
ஏசா திருந்தவன்தான் என்றாலும் எல்லையின்றிப்
போதலால் என்றன் பொறுமை தனையிழந்தேன்
ஆதலால் பாட்டுக்குள் ஆவேசங் காட்டிவிட்டேன்
சூடு மிகையாகத் தோன்றுமோ என்பதனால்
சாடும் முறையதனைச் சற்றே நிறுத்துகின்றேன் ;
அண்ணாவைப் போற்றுவோம் அண்ணன்வழி நிற்போம்
கண்ணேபோல் எண்ணிக் கழகத்தைக் காத்திடுவோம்
அய்யாவும் இன்றில்லை அண்ணாவும் இன்றில்லை
மெய்யாக நம்மினத்தை மேலோங்கச் செய்பவரார் ?
என்றுநாம் ஏங்குகையில் ஈதோ இருக்கின்றேன்
என்று குரல்கொடுத்தார் ஈரோட்டார் பேரறிவர் ;
ஈடில்லா அண்ணன் இதயத்தைப் பெற்றுள்ள
பீடுள்ளார் நம்வீட்டுப் பிள்ளை எனஆனார்

ஈரோட்டுப் பள்ளியிலே ஏடெடுத்துக் கற்றுணர்ந்து
பாராட்டுங் காஞ்சிபுரப் பல்கலைசேர் மன்றத்தில்
கற்றுத் தெளிந்து கலைஞர் எனும்பட்டம்
பெற்றுத் திகழும் பெருமை மிகவுடையார் ;
காற்றடித்த போதுங் கழகம் எனும்விளக்கை
ஏற்றி அணையாமல் எந்நாளும் காக்கின்றார் ;
இன்றைக் கவர்பெருமை ஏற்றிளங் காளையர்க்கு
நன்று தெரியாது நாளை புலனாகும்.
நாட்டை வளமாக்க நம்மினத்தை முன்னேற்றப்
பாட்டை அமைக்கின்றார் பங்காளி ஆகிடுவோம் ;
வீறுநடை போடுங்கள் வெற்றிமலர் சூடுங்கள்!
கூறுகிறேன் என்கை குவித்து.

......9.1975

## தொடர்ந்து செல்வேன்

தனக்கென்று வழியமைத்துக் கொள்ள வில்லை
தமிழினத்தின் வாழ்வுக்கே வழிய மைத்தான் ;
எனக்கென்றவ் வழியொன்றே தேர்ந்து கொண்டேன் ;
இன்றுவரை பிறழாமல் ஒழுகு கின்றேன் ;
குணக்குன்றை ஒருநாளும் பழித்த தில்லை ;
குறுக்குவழி சென்றதிலை ;, குழப்பம் செய்யப்
பிணக்கொன்றும் விளைக்கவில்லை ; அதனால் துன்பம்
பெற்றதுண்டு ; வாழ்க்கைவளம் பெற்ற தில்லை.

வளமற்ற நிலைகண்டோர் பரிந்து பேசி
வாழவழி பலவுண்டு வருக என்றார் ;
உளமற்ற நிலைஎனக்கு வந்த தில்லை ;
உறுதியுளேன் ஒருபொழுதும் வழுவ மாட்டேன் ;
தளர்வுற்ற எனக்கென்ன கிடைக்கு மென்று
தரங்கெட்டுப் பிறர்வழியில் சென்ற தில்லை ;
வளமற்று வாழ்ந்தாலும் அண்ணன் சொன்ன
வழிபெற்று வாழ்கின்றேன் தொடர்ந்து செல்வேன் .

17-9-1978

"எனக்குப்பின்....
கவிஞன் முடியரசன்."

*-பாவேந்தர்*
*பாரதிதாசன்.*



"திராவிட நாட்டின்
வானம்பாடி
கவிஞர் முடியரசன்"

*பேரறிஞர்*
*அண்ணா.*

* "தேன்கலந்து பால்கலந்து செழுங்கனித்தீஞ்சுவை கலந்து
ஊன்கலந்து உயிர்கலந்து உவட்டாமல் இனிக்கின்ற
மான்துள்ளும் வேகத்தைக் கவிதையினால்
வான்பெய்யும் கோடைமழைபோலப் பொழிகின்ற முடியரசர்
முன்னாள் தொட்டு இந்நாள்வரை இருக்கின்ற நம்கவியரசர்".

* "தன்மானக்குன்றம் – கொள்கை மாறாச்சிங்கம் – திராவிட இயக்கத்தின் முன்னோடிக்கவிஞர் – திராவிட இயக்கத்தின் ஈடு இணையற்ற தளகர்த்தர்களில் ஒருவர் – 1940க்குப் பின்னால் திராவிட இயக்கத்தின் சார்பில் நாற்பதுக்கு மேற்பட்ட இதழ்களில் கொள்கை முழக்கம் செய்தவர் கவிஞர் முடியரசன். இன்று திராவிட இயக்கம் நிமிர்ந்து நின்று கோலோச்சுகிற தென்றால்...... அன்று முடியரசன் ஆற்றிய இலக்கியப் பணியும் காரணம்".

*- முதல்வர் டாக்டர் கலைஞர் மு. கருணாநிதி.*

* "பாரதியார் என்ற வித்திலிருந்து முளைத்தது பாரதிதாசன் என்ற செடி. அச்செடியில் தழைத்தது முடியரசன் என்ற கொடி".

* " புரட்சிக் கவிஞர் பரம்பரையில் புத்துலக உணர்வு படைக்கும் பகுத்தறிவுச் சிந்தனைகளை வடிப்பதில் தேர்ந்தவர் கவிஞர் முடியரசன். தந்தை பெரியார், அறிஞர் அண்ணா வழியில் தன்மானச் சுடராகத் திகழ்ந்தவர். அவர் இயற்றிய கவிதை நூல்கள் ஒவ்வொன்றும் தமிழுக்கு ஆக்கம் செய்யும் செம்மொழிச் செல்வமாகும். கவிஞர்களிடையே ஓர் முடிசூடா மன்னராகத் திகழ்ந்தவர் முடியரசன்".

*- அமைச்சர் பேராசிரியர் க. அன்பழகன்.*

* மும்முடியை ஒருதலையில் முடித்த முடியரசர்
எம்முடியும் தலைவணங்கும் இயற்கையிலே கவிஞர்
தம்மரிய கவிதையினால் கவியரச ரானார்
தாய்த்தமிழே! அவர்முடியை உனக்குத்தான் சாய்ப்பார்.

*–கவிஞர் கண்ணதாசன்*